ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஆசிரியர். ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி ஆனிமீ 7உ (21—6—1931) | மலர் 8

ஒப்புயர்வற்றது! வைத்திய பாஸ்கர் உத்தமமானது!!

பண்டிட் ஆனந்தரின்

மகா சந்தனாதித் தைலம்.

(24 வருடங்களாக உலகப்பிரசித்தி பெற்றது.)

இத்தைலம், மூளைச் சோர்வையும், நரம்புத்தளர்ச்சியையும் நீக்கி தேகத்திற்கு பலத்தையும் சுறுசுறுப்பையும் தரவல்லது. மூளையை அதிகமாக உபயோகிப்பவர்களுக்கு ஞாபகசக்தியை அதிகப்படுத்திக் குளிர்ச்சியைத்தருவதில் இன்றியமையாதது. பொதுவாக எல்லாப் பிணிகளையும் கண்டித்து தேக ஆரோக்கியத்தை நிலைக்கச்செய்வது—கோடைகாலத்தில் எல்லோருக்கும் அவசியமானது.

விலைகள் குறைக்கப்பட்டது.

6 அவுன்சு ரூ. 1—0—0.
12 அவுன்சு ரூ. 1—14—0.
24 அவுன்சு ரூ. 3—12—0.

குடி அரசு ஆசிரியர்:-
ஈ. வெ. இராமசாமிப்பெரியார்
எழுதுவது.

சென்னையில் திரு. பண்டிட் எஸ். எஸ். ஆனந்தரின் தமிழ் வைத்தியசாலையில் செய்யப்படுகிற மருந்துகளில் சிலவற்றையும், அவருடைய மகா சந்தனாதித்தைலத்தின் பலனையும் நான் உணர்ந்திருக்கின்றேன். அவைகள் குறிப்பிட்ட நோய்களைக் கண்டித்து நல்ல குணத்தைத் தருகின்றன...... சென்னை அரசாங்கத்தார் தமிழ் சித்த வைத்தியத்தை ஒரு வகுப்பாகவைத்து நடத்துவதற்கு அவர் முதன்மையாக நின்று முனைந்து வேலை செய்தார்.........அவருடைய உழைப்பினால் தமிழ் வைத்தியத்திற்கும், மருத்துவ வகுப்பினர்களுக்கும் புதிய சக்தி உண்டாகிவருகிறதென்று சொல்வது மிகையாகாது.

(மற்ற பெரியார்களின் அபிப்பிராயத்தை நமது கேட்லாக்கில் காண்க)

இனாம்.

விலாசம் தெரிவிப்போர்க்கு நமது கேட்லாக்கும் 'சுகவழி' என்ற புஸ்தகமும் இனாம்

இன்றே எழுதுங்கள்.

தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத்தெரு, சென்னை.

அரசாங்க இஞ்சினீயர்களில் 14 பேர்களாலும், மற்ற பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆடர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாடசாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், சென்னை.

ஆராய்ச்சி அணிகலம் என்னும் தமிழ் நூல்:

கடவுளைப்பற்றிய மதங்களின் உண்மைக்கொள்கையின் பயனான கடவுட்பேரின்பம், உலகம் பொய்யென்ற உண்மையுணர்ச்சியில்லையும் அறிவின்பம், என்ற முடிவையும் இவைகளைத் தெரிந்துகொள்வதற்குக் கீழான படியாய் முன் அமைத்துள்ள சமூகக்கட்டுப்பாடுகள் அவ்வப்போதுள்ள காலத்தைப் பொறுத்ததெனவும் உலகவிவகாரங்களில் சுயநலத்தின் பொருட்டுச் சமூக; மத; அரசியற் கொள்கைகளிற் புகுத்தப் பட்டிருக்கும் திரிபான போலி அபிப்பிராயத்தையும் மற்றும் மக்களுக்கு எத்துறைகளிலும் வேண்டற்பாலதாய் சங்கதிகள்யாவையும் பல்நூற் பிரமாணங்களோடு சுருக்கவகையில் 17 அத்தியாயங்களாய்த் தொகுத்து எளிய நடையில் எழுதப்பட்டது. 125 பக்கம். 8/4 சைஸ் புத்தகம் ஒன்றுக்கு ரூ. 0—12—0 மதுரை புதுமண்டபம் எல்லாப் புஸ்தகஷாப்புகளிலும் அடியிற் கண்ட என்னிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

தா. க. தாயுமான பிள்ளை
மேல்மங்கலம், வடுகபட்டி போஸ்டு.
பெரியகுளம், மதுரை.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

"சன்மார்க்கன்"

பொதுநலங் கருதி வெளிவரும்

ஓர் உயர்தரத்தமிழ் மாதப்பத்திரிகை:

கொங்கு மண்டல சமரச சன்மார்க்க சங்கத்தின் சார்பாகப் பழனியிலிருந்து ஒவ்வொரு தமிழ்மாத முதலிலும் எளிய தமிழ் நடையில் அரிய கட்டுரைப் பொருள்களுடன் வெளியிடப்படுகின்றது. உடனே சந்தாதாரர்களாகச்சேருங்கள். வருட சந்தா:—உள்நாடு ரூ. 1. வெளிநாடு 1-4-0.

ஆசிரியர்—(நாவலூற்று)
சி. சுவாமிசிவநேசம்,
'சன்மார்க்கன்' பத்திரிகாலயம், பழனி.

சுத்தகதர்! உயர்ந்தகதர்!! நேர்த்தியான கதர்!!!

அகில இந்திய (கதர்) காங்கிரஸ் சங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. எங்களிடம் கதர் சம்மந்தப்பட்ட எல்லா ரகங்களும் இருக்கின்றன. வெளிநாட்டு ஆர்டர்கள்கிரயம் முழுமையும் அநுப்பினால் கவனிக்கப்படும்.

கா. மு. ஸ்ரீ ஈ. ரா. வே. & Co.,
கதர் ஸ்டோர்,
சென்னிமலை சங்கர் (S. I. Ry.)

குணமில்லாவிடில் பணம் வாப்பீஸ் செய்யப்படும்

சித்தரசம்

சகல வியாதிகளுக்கும் உள்ளுக்கும், வெளியிலும் உபயோகிக்க நிமிஷகணக்கில்குணமாகும்

புட்டி 1-க்கு ரூ. 1—0—0

செ. பி. சாமி, சித்தமருந்து செய்சாலை பழநி S. I.

ஓர் அதிர்ஷ்ட ஜோதிமுத்து.

டாக்டர் B. A. எதிராஜுலுவினால் தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட, பிரம்ம முடி கோஷாயி மேக எண்ணெயை உபயோகியுங்கள்.

(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்று தர்மார்த்தமாக குறைந்த விலைக்கு வெளியிட்டு வருகிறது.)

சகோதர, சகோதரிகளே, வெட்டவாய்வு (அஷ்ட) எட்டு விதங்களாக, கெர்ப,—விந்து ஸ்தானங்களில் தங்கி, வெளியாகிக்கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டுநீடித்து நின்று மேகவாய்வு என்று பெயர் பெற்ற கொடியோன் கபாலத்தில் தங்கி, கபால இடி, குத்தல் நேத்திரத்தில் பார்வை மங்கல், பல குற்றங்களும், நாசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமரகவாய்வு, தெனரல், கொக்கிருமல், காசமாகவும், கீல்களில் தங்கி, சூலைகளாகவும் நரம்புகளில் தங்கி முன்-பின் (வீச்சுகள்) பலவித இழுப்புகளாகவும் வயற்றில் தங்கி, சகலவித குன்மங்கள் வாய்வு, சூதககட்டிகள், பக்க விலா இழுப்பு குத்தல் கெர்ப குற்றங்கள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள், மூலங்கள், திமிர், மத மதப்பு, சகலவித மேகச்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலப்போக்கு அல்லது சிக்கல் பூட்டு ஜெனிக்கும் (விரிக்கின் பெருகும்) அனந்த வெட்டவாய்வு ரோகிகளும், 3 நேரம் சம், பிரம்ம முடி கோஷாயி மேக எண்ணெ சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி 15வது நாள் பாலிய தேகசுடன், விருத்தரும் பாலிய உணர்ச்சி பெற்றுவருவது பிரத்தியக்ஷம்.

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள துர்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும் சுத்த இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புத்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருக்கச்செய்து காக்கும் காயகர்பம். 3 நேரம் உபயோகிக்கும் பிரம்ம முடிகோஷாயி மேக எண்ணெ கொண்ட சீசா 1க்கு ஏழைகளுக்கு ரூ. 7—0—0.

பத்திய விபரம் மருந்துடன். பாக்கிங்தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் முன் பணம் அனுப்பவும் வேண்டும்.

பிரம்மமுடி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

நிமிஷக்கணக்கில் குணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறீர்?

சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல் வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியடின் 1க்கு 1-4-0. தபால் கூலி அணா. 4.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மேடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S. I.

சோல் ஏஜண்டுகள்:—
தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெரு மதராஸ்.
K. S. மேதா & Co., 234, சைனபஜார் ரோட் மதராஸ்.
வெள்ளச்சாமி, No. 300, சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்.

ஆதிதிராவிடர்களுக்கொரு வார்த்தை. சந்தர்ப்பத்தை விடாதீர்கள். புத்திமான் பலவான்.

(கைவல்யம்)

உலகம் கடவுளுக்குச் சொந்தம், கடவுள் சர்வபிராணிகளுக்கும் சொந்தம். தந்தையின் சொத்தை மைந்தர்கள் அனுபவிப்பதுபோல சர்வஜீவபிராணிகளும் தனது தனதென்று வாழ்ந்துவரும் உலகத்தில் கைபலத்தவன் காரியக்காரன், வாய் பலத்தவன், வழக்குரைப்பவன் என்பதாக மனிதர்களும் வாழ்ந்துவருகிறார்கள்.

அப்படி வாழ்ந்துவரும் மனிதருக்குள் உலக அதிகாரம் ஒருவருக்குள்ளிருந்து ஒருவருக்கு மாறி மாறி வந்து வந்து போய்ப் போய்க் கொண்டிருக்கும். அதுபோல இப்பொழுது நமது தேசத்துக்காரியங்கள் ஒருவர் கையிலிருந்து இன்னொருவருக்கு மாறும் சந்தர்ப்பங்கள் உண்டாகிக்கொண்டுவருகின்றன. அல்லது உண்டாகவேண்டும். அதற்காக நமது நாட்டு திராவிடர்கள், ஆரியர்கள், மகமதியர்கள், கிருஸ்தவர்கள், ஆங்கிலேயர்கள், சுதேசி ராஜாக்கள் இவர்கள் எல்லோருடைய பாத்தியதைகளும் ஆலோசிக்கப்படுகின்றன. அதற்காக அவரவர்கள் பிரயத்தனமும் செய்கிறார்கள். அதுபோல நீங்களும் சபைகள் கூடுகிறீர்கள். உங்கள் தலைவர்களும் அதில் பேசுகிறார்கள்.

திராவிடர்களும், ஆரியர்களும் பூர்வீகக் குடிகள். இந்த ராஜியமும் அவர்களுடையது என்னும் பாத்தியம் உடையவர்கள். இந்த தேசத்திலேயே பிறந்து வளர்ந்து இருந்து அரசாட்சி செய்து வந்த பாத்தியம் மகமதியர்களுக்கும், மதமட்டும்வேறேயொழிய மற்றெல்லாம் இந்த நாடேயானதினால் என்னும் பாத்தியம் கிருஸ்தவர்களுக்கு, பணத்தாலும் பிரயாசையாலும் உதவிசெய்து அரசாட்சி செய்யும் பாத்தியம் ஆங்கிலேயர்களுக்கு, அரசாட்சிசெய்யும் பாத்தியம் சுதேச அரசர்களுக்கு, இவர்கள் எல்லோருடைய பாத்தியங்களிலும் உங்களுக்கு எவ்வித ஆக்ஷேபனையுமில்லை இவர்கள பாத்தியங்களோடு உங்கள் பாத்தியங்களையும் கவனித்து உங்களுக்கு உதவிபுரிந்து உங்கள் பங்கின் வீத சாரத்தையும் நிலைநிறுத்திவிடவேண்டுமென்பதே உங்கள் கோரிக்கையாகும். அந்த கோரிக்கை சரியாக கவனிக்கப்படுவதில்லை யென்பது எல்லாருக்கும் தெரிந்த பிரத்தியக்ஷமாகும்.

ஆனால் நீங்கள்யார்? இந்த நாட்டிற்கு எப்படி பாத்தியமுடையவர்களாவீர்கள்? மற்றவர்களைப்போல நீங்களும் பாத்தியங்கொண்டாட என்ன ஆதாரம்? இந்த நாட்டிற்கும் மற்றவர்களுக்கும் உங்களுக்கும் சம்பந்தமென்ன? என்பதைச் சுருக்கிச்சொல்லிவிட்டு பின்னால் விஷயத்தைச் சொல்லுகிறேன்.

பிர்மாவின்தேகத்திலிருந்துநான்கு ஜாதிகள் உண்டாயினவென்று என்று சொல்லப்பட்டதோ அன்றுமுதல் நமது நாட்டு மற்ற கூட்டங்களும் தெய்வம், தெய்வத்தின் பிள்ளைகள், பெண்ஜாதி, வாகனம், கோபம், சந்தோஷம் முதலிய வைகளில் ஏதேனுமொன்றிலிருந்து தங்கள் ஜாதி உற்பத்தியானதாகச் சொல்லிக்கொள்ளுகின்றன. அதுவே பெருமையாகவும் நினைக்கிறார்கள். அதற்காக அநேகர்கள் ஜாதி புராணமும் பாடிவைத்துக்கொண்டிருக்கிறார்கள். பூர்வகாலந்தொட்டு நமது நாட்டில் ஜாதி பாத்தியதைகளை நிலைநிறுத்த புராணக்கதைகளிலிருந்தே ஆதாரம் காட்டுவது வழக்கம். அதுபோல உங்களுக்கும் சமய புராணக்கதைகளில் ஆதாரமிருக்கிறதா என்பதையும் கவனிப்போம். இந்தக்கதைகளெல்லாம் காரியத்திற்கு உபயோகப்படாதென்று நினைத்தாலும் உங்களைத்தாழ்மையாக நினைக்கும் இந்து சமய வாதிகளுக்கு நீங்களும் கதைகள் தெரிந்திருக்கிறீர்கள் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளவே இந்தக் கதைகளை நீங்களும் தெரிந்திருக்கவேண்டும். சமயப்புராணக்கதைகளே உங்களுக்குத் தாழ்மைப்படுத்த முக்கிய காரணமாகும். உங்கள் பிரசங்கிகளுக்கு கட்டாயம் இந்தக்கதைகள் தெரியவேண்டும். இரும்பை இரும்பால் திருத்தவேண்டும் அழுக்கை அழுக்கால் மாய்க்கவேண்டும்.

உங்களை ஆதிதிராவிடர்கள் என்று சொல்லுகிறீர்கள். அதையெல்லாம் ஒத்துக்கொள்ளுகிறார்கள். அதனால் நீங்களே இந்த நாட்டிற்குப் பூர்வீக குடிகளென்றும் அதுவே உங்கள் எல்லா பாத்தியங்களுக்கும் போதுமானதாகுமென்பது மேற்பட்டுவிட்டது. அதிருக்கட்டும். பூர்வீக ஆரியர்களும் நீங்களே பார்ப்பனர்களின் மூதாதைகள் பிர்மாவின் முகத்திலுண்டானார்கள். பார்ப்பனரல்லாதவர்களின் மூதாதைகள், பிர்மாவின் பாதத்திலுண்டானார்கள். உங்களுடைய மூதாதையான சாம்புவன் பிள்ளைபிறக்க வேண்டிய நேர்வழியில் பிர்மாவிடமிருந்து உண்டானார். அதனால் நீங்கள் ஒருபடி உயர்ந்து பிர்மாவிற்கு நேர் வாரிசாய்விட்டீர்கள். பிர்மாவின் முகத்திலிருந்துத் தோன்றின பார்ப்பனர்களும், தொடையிலிருந்து பிறந்த செட்டியார்களும் பாதத்திலிருந்து பிறந்த லசகப்பிள்ளை, முதலியார், கவுண்டர்களும் நாயுடு, நாய்க்கர், ரெட்டியார் முதலிய வைணவர்களும், இன்னும்பல சூத்திரர்களும் ஆரியர்களாகவும் திராவிடர்களாகவும் பாத்தியம் கொண்டாடுகையில் பிர்மாவின் பிரஜாபதியிலிருந்து பிறந்த பரம்பரையான நீங்கள் ஏன் ஆரியர்களாகமாட்டீர்கள்? அதுவும் புராணம். இதுவும் புராணம். அதற்குள்ள மெய் பொய் என்னும் பாத்தியதை இதற்குமுண்டு. விஷ்ணுவாமன அவதாரமெடுத்து மகாபலியிடம் பூமியைத் தானமாகப்பெற்றதும், பெற்ற ராஜியத்தைத் தன்னுடையதென்று சாம்புவனைக் கூப்பிட்டு பறைசாற்றச்செய்ததும், விஷ்ணு, பிர்மாவையுண்டாக்கினர், பிர்மா சாம்புவந்தரை உண்டாக்கினர் என்னும் புராணங்களில் வாமன அவதாரம் பொய்யானால் சாம்பவன் கதையும் பொய்யாகட்டும். விஷ்ணுவின் உந்தியிலிருந்து பிர்மா உண்டானார் என்பது மெய்யானால் பிர்மாவினால் சாம்புவந்தர் உண்டானார் யென்பதும் மெய்யாகட்டும். முன்சொன்னது பொய்யானாலோ பின் சொன்னதும் பொய்யாகட்டும். பொய்யானால் எல்லோரும் சமம். மெய்யானால் நீங்களும் பிர்மாவின் பேரப்பிள்ளைகள்தான். நீங்கள் சாம்புவந்தரின் வம்சமென்பதற்கு என்ன நிச்சயம்? பிர்மாவின் முகத்திலிருந்து பிறந்தவர்களின் வம்சமென்று பார்ப்பனர்சொல்லுவதும், சிவகோத்திரமென்று தமிழர்கள் சொல்லிக்கொள்ளுவதும் உண்மையாகவிருக்கையில் நீங்கள் சொல்லுவதுமட்டும் உண்மையாகாதோ? அவர்கள் எந்த ஆதாரத்தைக்கொண்டு சொல்லுகிறார்களோ அந்த ஆதாரத்தில்தான் நீங்கள் சொல்லுவது மிருக்கிறது. நீங்கள் சொல்லுவது பொய்யென்றால் அவர்கள் சொல்லுவதும் பொய்யாகட்டும். சிவனின் பேரப்பிள்ளை பிர்மா என்றும், தாங்கள் சிவகோத்திரமென்றும், வசவர்கள் சொல்லுவது மெய்யானால் நீங்கள் பிர்மாவின் பேரப்பிள்ளைகள் என்று சொல்லுவதும் மெய்யாகட்டும். இரண்டும் மெய்யென்றால் எல்லாரும் கடவுளுடையபேரப்பிள்ளைகள்தான். பிறவியிலேயே உயர்வு தாழ்வில்லை என்கின்ற சத்தியநெறியில் நடக்கட்டும். இரண்டும் பொய்யென்றால் பிறவியில் உயர்வுதாழ்வுகளை சமய புராணங்களில் கற்பித்துக் கொண்டதைத் தள்ளி உலகப்பொதுவிதியின் நியாயத்தை அனுசரித்து நடக்கட்டும். மெய்யும், பொய்யும் தெரியாவிட்டால் தன்னைப் போல மற்றவர்களையும் நினைத்து ஒரு நாட்டிலிருப்பவர்களுக்கு அந்த நாட்டின் பாத்தியங்கள் எல்லாருக்கும் ஒன்றுபோல் உண்டு என்னும் முன்னுள் நிற்கும் நயாயத்தைத் தெரிந்து தெய்வத்திற்கும், சமயசாஸ்திரத்திற்கும், ராஜாங்கத்திற்கும் அதைத் தடுக்க அதிகாரமில்லை என்பதையும் அறிந்துகொள்ளட்டும்.

கலியுகமென்று சொல்லப்படும் இந்த உலகத்தில் நான்கு வர்ணத்திற்கும் பிரமாணமாயிருப்பது பாராசர ஸ்மிருதியாகும். இதைச் செய்தவர் வசிஷ்டரின் பிள்ளையான பராசர். இந்தப் பராசரின் தாயார் உங்கள் ஜாதிப் பெண். வசிஷ்டர் பிள்ளை பராசர், பராசரின் மகன் வேதவியாசர். வசிஷ்டர், பராசர், வேதவியாசர் இவர்கள் இந்து சமயக் கர்த்தாக்களில் விசேஷப்பட்டவர்கள். பராசருடைய தரும சாஸ்திரமும், வியாசருடை பிர்ம சூத்திரமும் இல்லாவிட்டால் சனாதன தருமமில்லை. இவர்கள் ஆதிதிராவிடர்களான உங்கள் பெண் வயிற்றுப் பிள்ளைகள். இது நான் சொல்லுவதல்ல. அவர்களுடைய ஜீவிய சரித்திரம், புராணம், சாஸ்திரம் தனிப்பாட்டு முதலியவைகளில் உள்ளவைகளாகும். இதைப் பொய்யென்றால் வசிஷ்டர், பராசர், வியாசர் முதலியவர்கள் பொய்யாய் விடுவார்கள். அவர்கள் பொய்யானால் ஆரியவேதம் அத்தனையும் பொய்க்கதையாய்விடும். ஆகலால் ஆதிதிராவிடர்களும் ஆரியர்களின் சம்மந்திகள்தான். ஆதிதிராவிடர்களின் இரத்தமும் ஆரியர்களில் கலந்திருக்கிறது. திராவிடர்களான தமிழர்களுக்கோ திருக்குறளில்லாவிட்டால் பெருமையே இல்லை. தமிழ் வேதமென்று தைரியமாகக்காட்டத் தமிழர்களுக்கும் அதுவே ஆதாரமாகவுமிருக்கிறது. திருவள்ளுவர் உங்கள் இரத்தபந்து என்பது எல்லாருக்கும் தெரியும். ஆகவே ஆரியர்கள், திராவிடர்கள் இவர்கள் பரம்பரை, வேதம், தரும சாஸ்திரம் இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் நீங்களாகவுமிருக்கிறீர்கள். ஆனதால் இந்த நாட்டுப் பாத்தியங்களை பார்ப்பனருக்கும், பார்ப்பனரல்லாதவர்களுக்கும் அல்லது இரண்டும் சேர்ந்த இந்துக்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கப்படும் பிரதிநிதி, உத்தியோகம், கல்வியின் உதவி முதலியவைகளில் உங்களுக்கும், தக்க அளவு கொடுக்கப்பட்டே தீரவேண்டும். சமய சாஸ்திரங்களைப் பெரிதாகச் சொல்லிக் கொள்ளும் இந்துக்கள், இல்லாதவனுக்குக் கொடுப்பதே தருமமென்னும் இந்த சாஸ்திரம் உண்மையை உணரமாட்டார்கள். பெரிய ஜாதி எனப்பட்ட இந்துக்கள் வைதீகக் கொடுமையில் முளைத்தெழுந்தவர்கள். மற்ற இந்துக்களும் அவ்வழியே நடந்து பழகினவர்கள். இவர்களிடம் உதவியை எதிர்பார்ப்பதற்கேயில்லை. இந்த நாட்டில் மகமதிய அரசாட்சிக்கு நீங்கள் உதவி செய்தவர்கள் என்றாலும், இந்துக்களைவிட அவர்கள் உங்களுக்கு உதவி செய்யக் கடமைப்பட்டவர்களுமல்ல. கிறிஸ்தவர்களுக்கோ அவர்கள் வேலையைப் பார்க்கவே அவர்களுக்குச் சரியாகவிருக்கும். நமது நாட்டிலிருக்கும் ஆங்கிலேயர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தரானாலும், வியாபாரிகளானாலும் தன் லாபத்தைக் கோரிவந்தவர்கள். அதிகாரவெறியுடையவர்கள். அதிகாரம் பண்ணிப்பழகினவர்கள். நீங்கள் பக்கத்திலே

[தொடர்ச்சி 22ம் பக்கம் பார்க்க]

அமெரிக்காவில் நாஸ்திகம்.

நாஸ்திகத்தலைவரின் கர்ஜனை.

டி. என். ஆர். சந்திரன்.)

[அமெரிக்கா நாஸ்திக அபிவிர்த்தி பிரசாரசங்கத்தின் சென்ற ஆண்டு அறிக்கை மலரில் காணப்படுவது—நியூயார்க்கில் 15,000 மக்கள் கொண்ட கூட்டத்தில் தலைவர் ஸ்மித் ஆற்றிய வீரகர்ஜனை—தோழ நாஸ்திக வாதிகளின் கடமை—மத சம்பந்தமான சோவியத் சட்டங்கள்]

பண்டைய நாட்களின்படி பாதிரிமார்கள் அதிகப்படியாக அனுபவித்துவந்த பாத்தியதைகளை சோவியத்சர்க்கார் பறிமுதல் செய்ததின் காரணமாக வீண்குருட்டு மதவாதிகள் நீலிக்கண்ணீர் விடுகிறார்கள். சென்ற ஆண்டு முழுவதும் இதன் பயனாய் "துன்பப்படுத்துதல்" என்ற கூச்சலும் குழப்பமும் அதிகரித்து இறுதியாக இதை தக்கபடி தடுக்க வேண்டுமென்பதில் முடிந்தது. அமெரிக்காவில் உள்ள நாஸ்திக அபிவிர்த்தி சங்கத்திற்கும், சோவியத் சர்க்காருக்கும் நேர்முறையாகவோ அல்லது மறைமுகமாகவோ கொஞ்சமும் சம்பந்தம் கிடையாது. ஆனால் மதவாதிகளின் உண்மையற்ற "துன்பப்படுத்துதல்" (Persecution) என்றகூச்சலானது, அவர்களுக்கு எதிர்த்து வேலை செய்யவும் மற்றும் அவர்களுடைய மாயஜாலத்தை பகிரங்கப்படுத்தவும் நம்மைத்தூண்டுகிறது.

"சமாதான உரிமைக்கு நியாயஸ்தலத்திற்கு வரும் ஒவ்வொருவரும் நியாயபுத்தியுடன் இருக்கவேண்டுமென ஒரு சட்டமுண்டு. சோவியத் சர்க்கார் மதவிஷயத்தில் தலையிட்டு தடுத்திருப்பதைகண்டிக்க கிறிஸ்தவ குருக்களான ரோமபுரியின் போப்பியஸும், இங்கிலாந்தின் ஆர்ச்பிஷப் ஆப்கான்டர்பரியும், அமெரிக்காவின் பிஷப்மேன்னிங்கும் உலக அபிப்பிராயசர்க்காருக்கும் மனு செய்து கொண்டிருக்கிறார்கள். நான் இந்த மதவாதிகளின் வஞ்சகத்தன்மையை தெளிவுபடுத்தி அவர்களின் ஆதாரங்களின் படியே ரஷ்யாவில் துன்புறுத்துதலாக இருந்தாலும்சரி, அல்லது வேறு எந்த நாட்டிலானாலும்சரி நியாயமற்றதென்பதை நிரூபிக்கிறேன்.

தேசசரித்திரத்தின் எந்த பகுதியில் மதவாதிகள் மிகுந்த கொடுமையான துன்புறுத்தக்காரர்களாக இருந்தார்களென்பதைப்பற்றி நான் விஸ்தரிக்கப்போவதில்லை. தாமஸ்ஜெப்பர்ஸன் என்பவரால் இந்த உண்மை நன்றாக சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது மதக்குருக்கள் எல்லாக்காலங்களிலும், எல்லா தேசங்களிலும் விடுதலைக்கு விரோதிகளாக இருந்திருக்கிறார்கள் என்பதே யாகும். நான் ரஷ்யாவின் நிலைமையைப்பற்றியோ, பழமையைப்பற்றியோ பேசப்போவதில்லை. ஆனால் இன்றைய அமெரிக்காவின் நிலைமையைப்பற்றியே பேசுகின்றேன்.

இந்த அமரிக்க ஐக்கியநாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் மதவாதிகள் சாதாரண குடிமக்களைவிட அதிகப்படியான உரிமைகளை அனுபவிக்கிறார்கள். ஆனால் பொதுவாக அநேக இடங்களில் நாஸ்திகவாதி என்பதின் காரணமாக பலருக்கு சர்வ சாதாரண உரிமைகள்கூட மறுக்கப்பட்டிருக்கிறது. இந்த அமெரிக்காவின் பெரும்பகுதிகளில் நாஸ்திகத்தைப்பற்றி வெட்டவெளிச்சமாக ஒருவன் பகிரங்கப்படுத்துவதென்றாலோ அவன் நிச்சயமான "சாவு" என்பதை மேற்கொள்ளவேண்டும்.

ஐக்கியநாட்டில் நாஸ்திகவாதிகள் தங்கள் கொள்கைகளைப் பரப்புவதில் அனுபவிக்கும் உரிமைகளைவிட அதிகமாகவே சோவியத் ரஷ்யாவில் மதவாதிகள் தங்கள் கொள்கைகளை பரப்புவதில் அனுபவிக்கின்றனர். நியாயஸ்தலத்தில் நாஸ்திகவாதிகளை விசாரிக்கும் உரிமைகூட ஆர்கன்சாஸ், மேரிலேண்ட் இரண்டுகரோலினால் நாடுகள் மிஸிஸிப்பி இன்னும் மற்ற பாகங்களிலும் கிடையாது. சோவியத்நாட்டில் பிஷப்மேன்னிங்கும்போப்பியஸும் கிறிஸ்தவர்களென்பதின் காரணமாக நியாயஸ்தலத்தில் விசாரிப்பதினின்றும் சட்டப்படி தடுக்கப்பட்டிருக்கின்றார்களா? இல்லையே அந்தோ!! இந்த அமெரிக்க நாடுகளில் கிறிஸ்தவர்கள் நாஸ்திகர்களின் சொத்துக்களை திருடலாம். உயிரையும் வதைசெய்து விடலாம். நாஸ்திகர்களின் சாக்ஷியங்களை சர்க்கார் கேட்பதில்லை. நாஸ்திகவாதிகளின் முறையீடுகளை அதிகாரிகள் காது கொடுத்து கேட்பதுமில்லை.

என்னுடைய ஆர்கன்சாஸ்நாட்டில் என்போன்ற கொள்கையுடையவர்கள் அரசியல் உத்தியோகங்களை நிர்வகிக்கக்கூடாதாம். இந்தவிதமான நாஸ்திக விரோத சட்டங்களைக்கொண்ட இதுபோன்ற நாடுகள் சில இருக்கின்றன. இந்த சட்டத்தினின்றும் ஆர்கன்சாஸ் நாட்டை விடுவிக்க 1928 வருஷத்தில் நான் தீவிரமாக முயன்றேன். நான்யாரையும் துன்பப்படுத்தவில்லை-எந்த நபருடைய சொத்துக்கும் அழிவு தேடவில்லை. இந்த நிலைமையில் எனது உரிமைகளைக்கூட நீதிஸ்தலத்தில் கேட்க மறுத்து அபராதமும் விதிக்கப்பெற்று 3 மாத சிறை தண்டனையும் பெற்றேன். இதுபோன்ற சம்பவங்கள் எந்த நாகரீக நாட்டிலாவது நடைபெற முடியுமா? "மதத்துவேஷம்" என்ற குற்றம் என் மீது சுமத்தப்பட்டது. மதக்குருக்கள் கெட்டிக்காரர்கள்தான்! அவர்கள் நாஸ்திகர்களை சிறைக்கனுப்பினால் அது மதத்துவேஷமாகிறது, கடவுள்துவேஷமாகிறது (Blasphemy). அவர்களே சிறைபட்டால் அது துன்பப்படுத்துதலாகிறது (Persecution). துன்பப்படுத்துதல் என்று கூச்சலிடும் மதவாதிகளின் தன்மையைப்பாருங்கள். கிறிஸ்தவர்களின் மாய ஜாலத்தை வெளிப்படுத்தி நான் பேசும்பொழுது ஆர்கன்சால் நாட்டின் கிறிஸ்தவமத குரு என்னை குற்றவாளியாக்கினார். இந்த செய்கையை அமெரிக்காவின் பிரதம பாதிரியும், ரோமபுரியின் போப்பும் தடுத்தார்களா? நான் இவைகளைப்பேசுவதற்காக இன்னும் 3 மாத தண்டனையையடையலாம். கிறிஸ்தவர்களால் நாஸ்திகவாதிகள் அடையும் துன்பங்கள் இது போன்றதாகும். இது ஒருபுறம் நிற்க இனி கிறிஸ்தவர்கள் அனுபவிக்கும் அதிகப்படியான உரிமைகளைப்பற்றியே பிரஸ்தாபிக்க விரும்புகிறேன்.

நீங்கள், அரசியல் நிர்வாகம், ராஜ்யசம்மந்தம் இவைகளிலிருந்து மதம் தனிப்படுத்தப் பட்டிருக்கிறதென்று, தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். இது ஒரு சுத்தபொய்! பொதுப்பணங்களிலிருந்து நிர்வகிக்கப்படும் ராணுவம், கப்பற்படை, காங்கிரஸ் சபைகள் இவைகளில் புரோகிதர்களுக்கு என்னவேலை? மேலும் நியூயார்க்கில், நெருப்புப்பிடித்தால் அதை அவிக்கும் அவசர டிபார்ட்டுமெண்டுகளில் கூட புரோகிதர்களுக்கு என்னவேலை? நெருப்புப்பிடித்துக்கொண்டால் முக்கியமாக அவர்கள் பிரார்த்தனை செய்கிறார்கள். இதற்கு கொடுக்கும் பணம் பொதுப்பணங்களிலிருந்தல்லவா செலவாகிறது. மதமும் அரசியலும் வேறுதானா? குழந்தைகளின் பயணச்சீட்டைக் கொண்டு ஒருவன் பிரயாணம் செய்வதையொப்ப பாதிரிகள் ராணுவத்தில் வேலைசெய்வதினின்றும் தப்பித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏழை குடிமக்களாம். அமெரிக்காவின் நிலைமை இவ்விதமாக இருக்கிறது. சர்க்காரால் நாஸ்திகவாதிகள் வெறுக்கப்பட்டும் மதவாதிகள் ஆதரிக்கப்பட்டும் வருகிறார்கள். நியாயமென்பதே இங்கு கிடையாது. நாஸ்திகவாதிகளை கையையும் காலையும் கட்டிநல்ல தடியால் நையப்புடைக்க வேண்டுமென்பதே ஒவ்வொரு கிறிஸ்தவ மதவாதியின் கருத்தாக இருக்கிறது. இந்தவிதமான மதவாதிகளின் மனப்பான்மைக்குக் காரணமென்ன? மதவாதிகளின் மனதில் பயத்தையும் குழப்பத்தையுமூட்டும்படியானது உலகம் பூராவும் பரவிவருவதானதுமான நாஸ்திக வேகமேயாகும். அநேகமாக எல்லா நாடுகளிலும் இயற்கைக்கு மாறுபட்ட மதவாதிகளிடம் இப்போது மக்கள் மனதைச்செலுத்துவதில்லை.

தோழநாஸ்தீக வாதிகளே! நம்முடைய கடமையும் முக்கியவேலையுமென்ன? மதக்குருக்கள் கொண்டுள்ள கடவுள், ஆத்மா, தற்சுதந்திரம், அழியாத்தன்மை ஆகியவைகளின் மோசடிகளை வெளிப்படுத்தி பாதிரிகளுக்கு வேலை இல்லாமலாக்குவதேயாகும். மதத்துடன் எதிர்த்துப்போராட நீங்கள் எங்களுடன் சேரவேண்டுமென நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். வேத புத்தகம், மதகுரு, மதம்இவைகளைப்பற்றிய உண்மை விஷயங்களை நீங்கள் வெளியீடு மூலமாக பரப்பி, உதவிபுரியுங்கள். காலத்தின் வேகத்தோடு வரும் உயரிய புரட்சிகளை மூர்க்கத்தனமான மதக்குருக்கள் தடுத்துவிடமுடியாது. நாம் சாந்தமான முறையில் எதிர்த்த போதிலும் அமெரிக்காவில் உள்ள மாதாக்கோயில்களும், சகல நாடுகளிலுள்ள எல்லாக்கோவில் ஸ்தாபனங்களும் கொஞ்ச காலத்திற்குள்ளாகவே மக்களின் பொது ஸ்தாபனமாகவும், அறிவு வளர்ச்சிக்கான விஷயங்களை தர்க்கிக்கும்சிறந்தஇடங்களாக

தொடர்ச்சி 21ம் பக்கம் பார்க்க.

ஆயம்மாள் தேவை.

குழந்தைகளை வைத்திருப்பதற்கு ஒரு ஆயம்மாள் தேவை. சாப்பாடும் கொடுத்து மாதம் 1க்கு ரூ 5 முதல் ரூ. 10 வரை, கல்வி, நாகரீகம் ஆகிய யோக்கியதைக்குத் தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். படித்து லோயர் டிரெயினிங் பாஸ் செய்தவர் கிடைத்தால் நல்லது. எந்த "ஜாதி"யானாலும் குற்றமில்லை. வயது 20க்கு கீழ்ப்படாமலும் 40க்கு மேற்படாமலும் இருக்கவேண்டும். அடியில்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பங்கள் எழுதவும்.

A. B. C. D.

C/o, "குடி அரசு", ஈரோடு.

Mental Poverty of Tamil Nad Conference at Madura.

மதுரையில் கூடிய தமிழ் மாகாண மகாநாட்டினுடைய யோசனைக்குறைவு

(தோழர் ம. சிங்காரவேலு B. A., B. L.,)

மதுரையில் சென்ற வாரம் கூடிய தமிழ் மாகாண மகாநாட்டின் மனத்தின் வறுமை (அதாவது யோசனைக்குறைவு) அங்கு நடந்தேறின நடவடிக்கைகளாலேயே நன்கு விளங்குகிறது. இந்த மகாநாட்டின் மனத்தின் ஏழ்மைத்தனத்தைக் காட்டும், இரண்டொரு முக்கியத்தீர்மானங்களை எடுத்துக் கொள்ளுவோம். இந்து மகம்மதியர் ஒற்றுமையைப்பற்றிச் செய்துள்ள தீர்மானத்தைக் குழந்தைகள் கூட செய்யத்துணியாது. இவ்விரண்டு கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள வித்தியாசங்களையும், அவைகளின் ஏதுக்களையும், தெள்ளத்தெளிய விளக்கிக்காட்டி, அதற்குத்தகுந்த பரிகாரங்களைத் தேடாமல், கிளிப்பிள்ளைகள் "ஒற்றுமை ஒற்றுமை" என்று பேசுவதைப்போல் அந்த மகாநாட்டுச் சபைத் தலைவரும், அவரைச் சேர்ந்தவர்களும் பேசிமுடித்தார்கள். இவர்களுக்குத் தற்கால உலக அனுபவமாவது, அவைகளின் ஞானமும் சிறிதும் கிடையாது போலும். மகமதியர் சிறுபான்மையோர். இந்துக்கள் பெருங்கூட்டத்தவர். இதுவுமன்றி மத வைராக்கியத்திலும் இவ்விரண்டு தரத்தாரும் பெரிய வித்தியாசத்தைக் கொண்டுள்ளவர்கள். இவ்விருவரும் மசூதிக்குமுன் மேளமடித்தால் தலைகளை உடைத்துக் கொள்ளுகிறார்கள். பசுவைக்கொன்றாலும், தங்களைக் கொலை செய்துகொள்ளுகிறார்கள். பொருளாதார நிலைமையிலும் வித்தியாசப்பட்டுள்ளார்கள். மகமதியர்களில் அதிகமான செல்வத்தையும், செல்வாக்கையும் படைத்தவர்கள் அதிகமிலர். ஆனால், இந்துக்களிலோ இவை இரண்டிலும் சாய்கால் பெற்றுள்ளார்பலர் உளர். ஜனத்தொகைகளிலும், மதவித்தியாசத்திலும், பொருளாதார நிலைமையிலும் வேற்றுமையுள்ள இவ்விரண்டு சமூகத்தவர்கள் அரசியல் நிர்வாகங்களை ஒற்றுமைப்பட்டு எப்படி நடத்த முடியும்? இதனை உணராமல் அடுத்தடுத்துக் கிளிப்பிள்ளைகளைப்போல் "ஒற்றுமையுடனிருங்கள், ஒற்றுமையுடனிருங்கள்" என்று சொல்லிக் கொண்டிருப்பதில் யாது பிரயோஜனம்? இந்த "ஒற்றுமை" என்ற வார்த்தையைச் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே இவ்விரு கட்சியாரின் தலைகள் உடைந்து வருகின்றது.

இவ்வித வித்தியாசங்கொண்ட சமூகங்கள் உலகில் இருந்தே வருகின்றனர். ஐயர்லாந்து தேசத்தில் ஆயிரம் வருஷமாகப் போர்புரிந்து வந்த அல்ஸ்டர் கூட்டத்தார் எவ்விதமாகத் தற்போது தனி அரசை நடத்தி வருகின்றார்கள் என்ற சரித்திர ஞானத்தை நமது மாகாண மகாசபை பெறவில்லை போலும்! ரஷ்யாவில் பலசமூகங்கள் தன்னந்தனியே அரசியலை நடாத்தி வரவில்லையா? தற்காலம் நடந்துவரும் சரித்திரங்களை நன்குபடித்துணரலாகாதா? மகமதியர்களுக்குத் தனி உரிமை கொடுத்தால் என்ன ஆபத்து ஏற்பட்டுவிடும்? இதில் என்ன பயம்? தனி உரிமையுடன் 556 சிற்றரசுகள் அன்றுமின்றும் இந்தியாவில் அரசு புரிந்து வரவில்லையா? அதே பிரகாரம் மகமதியர் தனி ஆதிக்கத்தைப் பெற்றால்

பொன்னம்பலனார் — சுலோச்சனா.

என்ன? எங்கெங்கு வேறு பான்மையோர் வசிக்கின்றார்களோ, அங்கெல்லாம் அதனதன் பாதுகாப்புக்குரிய ஆதிக்கங்களைக் கொடுப்பதுதான் புத்திசாலித்தனமாகும். இதைவிட்டுவிட்டு "ஒற்றுமையாய் இருங்கள், ஒற்றுமையாய் இருங்கள்" என்று வெறும் வாய்ப் பேச்சுப் பேசுவதால் என்ன ஒற்றுமை ஏற்படும்? உலகில் ஒற்றுமை ஏற்படவேண்டியிருந்தாலும், அல்லது வித்தியாசப்பட்டுள்ளவர்களின் சமூக ஒற்றுமை உண்டாக்கவேண்டி இருந்தாலும், இவர்களுக்குள் பொருளாதார ஒற்றுமை ஏற்படவேண்டும். அதுவரையில் அவரவர்கள் தனித்தனியே தங்கள் நன்மைகளை ஆதரித்துக் கொள்ளவிடுவதுதான் மனுஷ தர்மமாகும்.

நமது துர்ப்பாக்கியமாக, நாம் மதங்களில் வேற்றுமை அடைந்துள்ளதோடு, ஒருசமூகத்தவருக்குள்ளேயே பல ஜாதி வித்தியாசங்களும் ஏற்பட்டுள்ளன. இந்து சமூகத்தவர்களில் பிராமணர் என்றும், பிராமணர் அல்லாதார்கள் என்றும் இவ்விருவருக்குள்ளே இன்னும் பல வித்தியாசங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த ஜாதி வித்தியாசங்களுக்குப் பரிகாரமென்ன? தற்போது ஜாதி இல்லாத அரசின்கீழ் ஜாதியுடையோர் ஆளப்பட்டு வருகின்றமையால் ஏறக்குறையப்பொதுவாக நடத்தப்பட்டு வருகின்றார்கள். இந்த நிலைமை மாறி, ஜாதி வித்தியாசமுடையவர்களின் ராஜாங்கம் ஏற்பட்டுமேயாகில் வேறுபட்ட பலஜாதியார்கள் எவ்விதம் ஒற்றவாழ்வார்கள்? அந்தந்த ஜாதியாரின் மனப்பான்மை எப்படி ஒற்றுமைப்படும்? ஜாதி வருணாசிரமத்தில் மூழ்கிக் கிடப்பவனுக்கு அதிகாரம் வந்தால், அதற்கு அதிதப் பட்டவர்களை எவ்விதம் நடத்துவான்? ஜாதிகளில் கட்டுண்ட ஒருவனுக்கு அரசியலில் பெரும்பதவி கொடுப்பது அபாயகரமானதென்றே அறிஞர் கருதுவார்கள்.

ஜாதிமத வித்தியாசங்கள் முற்றிலும் ஒழிந்தால்தான் நமது இந்தியாவுக்குச் சுதந்திரம் தகுதியாகுமென்று சொல்லவரவில்லை என்றாலும், இந்திய சுதந்திரத்தைக் கோரும் பெரியோர் இந்தக் கஷ்டங்களைத் தீர்க்க யோசிப்பதோடு, இவைகளுக்குச் சரியான பரிகாரமும் தேடவேண்டும். ஜாதி, மதம் இவை இரண்டும் அநாகரீகக் கொள்கைகளாகும். இவ்விரண்டு கொள்கைகளை ஆதரித்துக்கொண்டு, எவ்விதம் நாகரீக அரசியலை நடத்த முடியும்? இவ்விரண்டையும் அதாவது ஜாதியையும், மதத்தையும் அதிகாரத்தை வகிக்கக்கோருவோர் தவிர்க்கவேண்டியதே நியாயமாகும். பூரண சுயராஜியத்தை விரும்புவோரும், அதற்கு முயற்சிப்போரும் ஜாதி, மதத்தை விட்டொழித்தோம் என்று பிரசித்தப்படுத்தும் வரை தேச மக்கள் அவர்கள் மேல் பூரண நம்பிக்கை வைக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

பூர்வத்தில், உலகில் விளைந்த கேடுகளுக்கெல்லாம் முதற்காரணமாய் நின்றது ஜாதியும், மதமுமேயாகும். இவ்விரண்டு மனப்பான்மையில் ஆழ்ந்து கிடக்கும் சிலரை, அதிகாரவர்க்கத்தில் சேர்ப்பது சமூக வாழ்க்கைக்கு அபாயகரமேயொழிய வேறில்லை. இவ்விரண்டையும் நீக்கியவர்களுக்குத்தான் எந்தப் பதவியும் அளித்தல் வேண்டும், இல்லாவிடில் மதச்சண்டைகளும், ஜாதிச் சண்டைகளும் இந்தியாவை விட்டு ஒருநாளும் ஒழியாது. சிலர் ஜாதிமதப்பித்தங்களிலிருந்துகொண்டே அரசியலை நடத்த முடியுமென்பார். "குடியைக் குடித்துவிட்டு குடிவெறியனாயிருந்துகொண்டே சமுசார வாழ்க்கையை நடத்தவல்லேன்" என்னும் குடியனுக்கு இத்தகையோர் சமானமாவார்.

"ஜாதிமதங்களுக்கு அதீதப்பட்டவன்தான், அரசுரிமையைப் பெறத்தகுந்தவன்" என்பதற்கு சந்தேகமென்ன? புராணபுரட்டுகளில் நம்பிக்கைவைத்துக்கொண்டு, பொய் எண்ணங்களாகிய-பேய், பிசாசு, தேவர், கடவுள், மறுஜன்மம், கர்மம், விதி முதலிய கட்டுவார்த்தைகளின்மேல் நம்பிக்கையுள்ளவன், அரசியலுக்கு அருகனல்ல. இத்தியாதி மயக்க வார்த்தைகளை அடுத்தடுத்து சொல்லிக்கொண்டு, ஏழை ஜனங்களை பொய் நம்பிக்கைகளில், தூங்கவைத்துக் கொண்டிருப்பவர்களால்தான், இந்த உலகம் துக்கத்தில் ஆழ்ந்து கிடக்கின்றது. உள்ளதை உள்ளபடி உரைக்காமல், வார்த்தை ஜாலத்தால் மயக்குகின்றவர்களே, இன்றைக்கும் உலகம் அஞ்ஞானத்தில் மூழ்கிக்கிடப்பதற்குக் காரணக் கர்த்தர்களாவர். நமது இந்தியர் சுகப்படவேண்டுமானால் முதலில் மூடபக்தியிலிருந்து விழிக்கவேண்டும். விக்கிரக பூசையைவிட்டு சுத்தம், சுகாதாரத்தைநாட வேண்டும். கோயில் குளங்களைச்சுற்றுவதைவிட்டு, மெய்ஞானத்தைப் பெறவேண்டும். இந்தியத்தலைவர்கள்

(தொடர்ச்சி 20ம் பக்கம் பார்க்க)

Best copy available.

5. கடவுள் நம்பிக்கை அவசியமா?

எல்லா மதங்களும் கடவுளினுடைய தத்துவத்தைப்பற்றியும் மனிதனுடைய தத்துவத்தைப்பற்றியும் இவ்விரண்டிற்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றியுமே கூறுகின்றன. இவ்விஷயங்களினுடைய உண்மையைத்தெரிய வேண்டுமானால் கடவுள் தத்துவத்தைப்பற்றித்தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமல்லவா? ஆனால் கடவுளினுடைய சூக்ஷ்மம் ஒருவராலும் அறிய முடியாதது என்று எல்லோரும் சொல்கிறார்கள். பிறகு இப்படிச் சொல்பவர்களே அறிய முடியாத கடவுளுக்குக் குணங்களை கற்பிப்பதில் சற்றும் தயங்குவதில்லை. நினைக்கவே முடியாத இக்கடவுளைப்பற்றி மனிதன் கட்டாயம் தெரிந்துகொள்ளவேண்டியது கடமையென்றும் இவர்களே சொல்லுகிறார்கள். மனிதனுக்கு ரொம்பவும் புரியாத விஷயம் எதுவோ அதைப்பற்றி அறிய வேண்டியதே ரொம்பவும் முக்கியம் என்று கூறப்படுகிறது! கடவுள் விஷயமானது மனிதன் அறிவுக்கு அகப்படாததாக இருப்பதால் அதைப்பற்றி நினைக்காமலே இருப்பதுதானே அறிவுடைமையாகும்? அப்படியிருக்க, மதமோ, மனிதன் ஒரு க்ஷணமாவது கடவுளை மறந்திருந்தாலும், அவன் குற்றவாளியென்று கூறுகிறது.

6. மதம் குருட்டு நம்பிக்கையின் மீதே கட்டப்பட்டிருக்கிறது.

வரம்புக்கு உட்பட்ட நமது மனதினால் வரம்பில்லாத கடவுளின் குணங்களை உணர்தல் என்பது முடியாத காரியம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதிலிருந்து விளங்குகிறதென்னவென்றால், வரம்பிலகப்பட்ட நமது மூளைக்காக கடவுள் என்பது கற்பிக்கப்படவில்லை என்பது வெளிப்படை. ஆனால் மதமோ அறிய முடியாத ஒன்றைப்பற்றி நாம் அவசியம் உணரவேண்டுமென்று வற்புறுத்துகிறது. இதிலிருந்து மதமென்பது மனிதனால் முடியாத ஒன்றை, மனதில் அகப்படாத ஒன்றை, வற்புறுத்தும் ஒரு கலை யென்பது தெளிவாகும்.

7. எல்லா மதங்களும் அபத்தமே.

மதமானது மனிதனைக் கடவுளோடு சம்பந்தப்படுத்துகிறது. ஆனால் கடவுளோ முடிவற்றவர் என்று கூறப்படுகிறது. கடவுள் முடிவற்றவரானால் முடிவுள்ள

பகுத்தறிவு

(அல்லது) கத்தோலிக்க குருவின் மரணசாஸனம்.

(மொழிபெயர்ப்பாளர் S. குருசாமி B. A.)

(காப்பிரைட்)

சென்ற வாரத்தொடர்ச்சி.

எந்த ஜீவனும் அவரோடு சம்பந்தம் வைத்துக்கொள்ள முடியாது; சொந்தம் பாராட்டவும் முடியாது. எப்பொழுது சம்பந்தம் வைத்துக்கொள்ள முடியாதோ, அப்போது உணர்ச்சியிருக்க முடியாது, கடமைகளும் எதுவும் இருக்க முடியாது. ஆகவே, எப்போது கடவுளுக்கும் மனிதனுக்கும் மத்தியில் கடமைகள் ஒன்றுமில்லையோ அப்போதே மதம் என்பது மனிதனுக்கு அவசியமில்லை யென்பதும் ஏற்படுகிறது. எனவே கடவுள் என்பவர் அழிவில்லாதவர் என்று சொல்லுவதானால், அழிவுள்ள ஜீவனாகிய மனிதனுக்கும் அதற்கும் எத்தகைய சம்பந்தமும் கிடையாது என்பது தானாகவே ஏற்பட்டு விடுகிறது. அழிவில்லாதது என்கிற எண்ணமே நமக்குப் புலப்படாததும் விளங்காததுமாக இருக்கிறது.

8. கடவுளைப்பற்றிய எண்ணத்திற்கே அர்த்தமில்லை.

கடவுள் அழிவில்லாதவர் என்றால், இவ்வுலகத்திலோ, அல்லது எவ்வுலகத்திலோ மனிதனுக்கும் அதற்கும் எந்தவித சம்பந்தமும் வைத்துக்கொள்ள முடியாது; இந்தக்காரணத்தால் கடவுளைப்பற்றிய எண்ணமே மனிதனுடைய மூளையில் நுழைய முடியாததொன்றாகும்என்பதும் ஏற்படுகிறது. மனிதனுடைய அழியுந்தன்மைக்கும் கடவுளினுடைய அழியாத்தன்மைக்கும் சம்பந்தப்படுத்த முடியாமலிருக்கிறபடியால், இவ்வுலகத்தில் எப்படி அக்கடவுளை அறியமுடியவில்லையோ, அதைப்போலவே தான் மறு உலகம் என்று சொல்லப்படுவதிலும் அறிய முடியாது. ஆகவே, மறு உலகம் என்பதிலும் கடவுளுணர்ச்சி என்பது மனிதனுக்குப் பொருந்தாததாகவே இருக்கிறது. எனவே கடவுள் மனிதனுக்காக ஏற்பட்டதல்லவென்பதும், சாதாரண மனிதனைவிட அதிக ஞானிகளாகச் சொல்லப்படும், ரிஷிகள், முனிவர்கள், தேவ தூதர்கள், மகாத்மாக்கள் என்பவர்களுக்குக்கூட கடவுள் என்பதைப்பற்றியதொன்றும் தெரிய முடியாது என்பதும் புலனாகின்றது.

9. மூட நம்பிக்கையின் மூலகாரணம்

கடவுள் தன்மை இவ்வாறிருக்க எது அறிவதற்கு முடியவே முடியாததோ அதுவே மனிதனுக்கு மிக்க அவசியம் என்பதை அறிவுள்ள மனிதனிடத்தில் புகுத்தப்பட்டிருப்பது எப்படி யென்பதை யோசிப்போம். இதற்குக்காரணம் என்னவென்றால், மக்களுடைய பயமேயாகும் எப்பொழுது மனிதன் பயப்பட ஆரம்பிக்கிறானோ அப்போதே அவனுடைய பகுத்தறிவை இழக்கிறான், ஏனெனில் பகுத்தறிவை நம்பக்கூடாதென்று அவன் கற்பிக்கப்படுகிறான். ஆகவே எப்பொழுது அறிவுக்குக் குழப்பம் ஏற்படுகிறதோ அப்பொழுதே ஒன்றையும் பரிசோதித்துப் பார்க்காமல் கண்மூடித்தனமாய் நம்ப ஆரம்பித்து விடுகிறான்.

10. மதம் எப்படி ஏற்பட்டது?

எல்லா மதங்களும் அறிவீனம், பயம் ஆகிய இவ்விரண்டு கடையாணிகளில் சுற்றுகின்றன, கடவுளுக்கும் மனிதனுக்கும் இருக்கும் ஒரு நிச்சயமற்ற சம்பந்தத்தினால் தான் மனிதன் மதத்தையும் பிடித்துக்கொண்டிருக்கிறான். மனிதன் இருட்டில் இருக்கும் வரையில்—சரீரசம்பந்தமான இருட்டாயினும் சரி, மனதுசம்பந்தமான இருட்டாயினும் சரி—அவன் பயங்காளியாகவே இருப்பான். அந்தப்பயமானது அவனுக்கு வழக்கமாகப்போய், நாளடைவில் ஒரு அவசியமாகவும் ஏற்பட்டு விடுகிறது; தான் ஒன்றுக்கும் பயப்படாமலிருந்தால், ஏதோ ஒரு குறை இருப்பதாகவே நம்ப ஆரம்பித்துவிடுகிறான்.

11. மதத்தின் பேரால் வஞ்சகர்கள் பிழைப்பது.

எவனொருவன் தனது குழந்தைப்பருவத்திலிருந்தே ஏதோ சில வார்த்தைகளைக் கேட்கும்போதெல்லாம் பயந்து நடுங்கும்படியான பழக்கத்திலிருந்து வந்தானோ, அவன் ஆயுள் முழுவதும் அவ்வார்த்தைகளைக்கேட்கவும், கேட்டு நடுங்கவும் ஆசைகொண்டு விடுகிறான். இவ்விதமாகவேப்பழகி, நாளடைவில் யாரார் அவனுடைய பயத்தை அதிகப்படுத்துகிறார்களோ, அவர்கள் வார்த்தையைக் கேட்க விரும்புகிறானே யொழிய, யாரார் அவனுடைய பயத்தை அகற்ற எண்ணுகிறார்களோ, அவர்களுடைய வார்த்தைகளுக்குச் செவி சாய்க்க விரும்பாமல் போய்விடுகிறான். மூட நம்பிக்கையில் அழுந்திய மனிதன் என்றும் பயங்காளியாகவே இருக்க விரும்புகிறான்; அவனுடைய கற்பனா சக்தியும் அதை விரும்புகிறது. அவன் பயப்படாத எந்தவஸ்துவுமே கிடையாது என்பதும் ஏற்பட்டு விடுகிறது. மனிதர்கள் கற்பனையால் ஏற்பட்ட நோயாளிகளை ஒத்திருக்கின்றார்கள்; இந்நோயாளிகளின் பலஹீனத்தை யறிந்த சுயநலமான போலிவைத்தியர்கள், தங்கள் போலி மருந்துகள் விலையாகும்பொருட்டு, இந்நோயாளிகளின் பலஹீனத்தை விருத்தி செய்கிறார்கள். அதிக மருந்துகளைக்கொடுக்கும் போலிவைத்தியர்களை இந்நோயாளிகள் கவனிக்கிறார்களே யொழிய, நல்ல பத்திய உணவையும், இயற்கைச் சிகிச்சை முறையையும் விதிக்கும் உண்மை வைத்தியர்கள் வார்த்தையைக் கவனிப்பதில்லை

12 & 13, அற்புதத்தின் துணையால் மதம் அறிவீனத்தை வளர்க்கிறது.

மதம் என்பது தெளிவானதாயிருந்திருந்தால் பாமர ஜனங்களுக்கு அதில் எவ்வித பிரேமையும் இருக்காது. பாமர ஜனங்களுக்கு இரகசியங்களிலும், அற்புதங்களிலும், கட்டுக்கதைகளிலும், அதிசயங்களிலும் நம்பமுடியாத விஷயங்களிலும் அதிகப்பிரியமுண்டு; ஏனெனில் அவைகள் தான் அவர்களுடைய மனதிற்கு எப்போதும் வேலை கொடுத்துக்கொண்டிருக்கக்கூடியவை. உண்மைச்சரித்திரத்தைவிட விசித்திரக் கதைகளும், சோம்பேறி புராணங்களும், பேய் பிசாசுகளைப்பற்றிய வரலாறுகளுமே மூட ஜனங்களுக்கு அதிக விருப்பத்தைத் தருகின்றன.

ஆகவே மனிதர்கள் மத விஷ

தொடர்ச்சி 20-ம பக்கம் பார்க்க

தூத்துக்குடி, ஹிந்து நாடார் மகமை தர்மக்காரப்பேட்டை பரிமாலன சங்கம்

ஒன்பதாவது வருடப் பூர்த்தி விழா.

அருப்புக்கோட்டை "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர் உயர்திரு.

சூ. ஆ. முத்து நாடார் அவர்களின் அக்கிராசனப் பிரசங்கம்.

அன்புள்ள பெரியோர்களே!
கனவான்களே!!

இந்த வருடப்பூர்த்தி விழாவிற்கு என்னை அக்கிராசனம் வகிக்கும்படி தேர்ந்தெடுத்த உங்களுக்கு எனது வந்தனம்.

கனவான்களே!

தனக்கு வேண்டியதை சோம்பலின்றி அலைந்து தேடிக்கொள்ளும் ஜந்துக்களில் தேனீயும் முக்கியமான ஜந்துவென்று சொல்லுகின்றார்கள். 16 அவுன்ஸ் தேனைச் சேர்ப்பதற்கு ஒரு தேனீ 4000 மைல் பிரயாணம் செய்கிறது என்று பத்திரிகை வாயிலாகப் பார்த்திருக்கிறோம். அத்தேன் அவ்வீக்களுக்குப் பிரயோசனப்படுவதுடன் மக்களுக்கும் மிக்க பிரயோசனத்தைக்கொடுத்துவருகிறது. தேனீக்களைப்போல் தைரியமாக உலகத்தைச் சுற்றி பண்டமாற்றுதல் செய்து வருகின்றவர்கள் வியாபாரிகளே. வியாபாரிகளுடைய சுற்றுப் பிரயாணத்தினாலே சகல ஜீவர்களுக்கும் பல நன்மையும் மேன்மையும் அடைந்து வந்திருக்கிறது.

சேர, சோழ, பாண்டி மண்டலங்களாகிய மூத்தமிழ் நாடு முழுதும் அடுத்த நாட்டார் படையெடுப்பால், நமது முன்னோர்களுடைய உன்னத வாழ்க்கை நிலையும் சீர்குலைந்தது. அதனாலவர்கள் தைரியமாக வியாபார உலகத்திற் பிரவேசித்திருகின்றார்கள். டச்சுக்காரரும் பிரிட்டிஷாரும், பிரஞ்சுக்காரரும் 4000, 5000 மைலுக்கப்பாலுள்ள நம் நாட்டில் வியாபாரிகளாக வந்து தங்கள் தங்கள் வியாபாரப் பாதுகாப்புக்காக எவ்வாறு கோட்டைகளைக் கட்டிக்கொண்டார்களோ, அவ்வாறே நம் முன்னோர்களும் வியாபாரப் பாதுகாப்பினிமித்தம் சென்ற விடங்கள் தோறும் சிறப்பான பேட்டைகளாகிய கோட்டைகளைக்கட்டி முடித்திருக்கின்றார்கள். அவ்வண்ணம் வடதிசை இந்து நாடார்கள் கட்டிய பல கோட்டைகளில் இத்திருமந்திரமாநகரெனும் தூத்துக்குடி காரப்பேட்டையே முக்கியமான கோட்டையாகும். அடித்தவர்க்குத் தொண்டாகி, பிடித்தவற்குப் பெண்டாகி, அனேக காலம் வடித்த கண்ணீர் சமுத்திரமாய், மதியுற்ற இந்தியாவின் வாட்டந்தீரக் கெடித்தலத்திற் கோட்டைகட்டி, வேட்டெழுப்பி, பகைவென்று, கிரீடம் பூண்டு, குடித்தனத்தார் சமாதானத்துடன் வாழ வைத்திருக்கும் பிரிட்டிஷ் இராஜாங்கம் இந்தியாவுக்குள் நுழைந்தபோதே நமது முன்னோர்களும் தைரிய சீலர்களாய் வெளியேறி வியாபாரத்தை தமிழ்நாட்டில் விருத்தியடையச் செய்து வந்திருக்கின்றார்கள். வியாபாரப் பெருமையினாலேதான் இக்கோட்டை நமக்குப் பலமுள்ள அரணாக விளங்குகின்றது.

ஆனால் சுமார் முப்பது வருடங்களுக்கு முன் இப்பேட்டை இருந்து வந்த நிலையும், இப்போதிருந்து வருகிற நிலையும் நானறிவேன். இவ்விடத்தில் சட்டியும் பெட்டியும் வைத்து சமையல் செய்து சாப்பிட்டவர்களில் நானுமொருவன். அப்போது சமையலறையாக விருந்தது இப்போது கலைமகள் நிலையமாய் காண்கிறது. சைவப்பிரையாகவிருந்தது அறிவு வளர்ச்சிக்கழகமாய் காண்கிறது. சாணிக்குவியலும் குப்பைக் குவியலுமாயிருந்த விடங்களெல்லாம் மாட மாளிகையாகவும், பெண்ணுலகம் முன்னமரும் பொன்னெழில் மண்டபங்கொண்டதாகவுமிருக்கிறது. இம்மாறுதலுக்குக் காரணமாகி நின்ற நமது வாலிபர்களை மிகவும் பாராட்டுகிறேன். ஒரு சமயம் நமக்குள் ஒற்றுமைக் குறைவினாலும் சில சுயநலக்காரர்களின் பிடிவாதத்தினாலும் பேட்டையின் நிலைமை சீர்கெட்டுப்போயிருந்ததைத் திருத்தி காலத்திற்கேற்றவாறு நிர்வாக ஒழுங்கமைத்து மேம்பாடுறச் செய்தது நம்மில் அதிதீவிரமும் பொதுஜன சேவைப் பிரியமுமுள்ள வாலிபர்களென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. மாறுதல் செய்வதில் அவர்கள் தைரியமாக முன் வந்ததற்கு மறுமுறையும் பாராட்டுதல் வேண்டும்.

நமது முன்னோர்கள் சென்ற வழியேதான் செல்லவேண்டும்; சிறிதும் மாறுதல் செய்யக்கூடாது; செய்தால் வழக்கத்துக்கு விரோதம்; மதத்திற்குத் துரோகம் எனச் சொல்பவர்களைக் கண்டித்து மூடப்பழக்கம் முன்னோர் வழக்கமாயிருந்தால் அதைத் தொலைத்துவிடவேண்டும் என்று பகுத்தறிவியக்கத்தார் பகர்வதை ஒரு சார்பார் குறை கூறுகின்றார்கள். வழக்கம் எதுவானாலும் வழக்கத்திற் கடிமையாயிருக்கவேண்டியதென்றே வழக்காடுகின்றார்கள். சமையலறையையும் சைவப்பிரையையும் சாணிக் குவியலையும் கல்விக்கழகமாய்ச் செய்ததில் என்ன குறைந்துவிட்டதென்றுதான் கேட்கிறேன். பழைய நிலையை மாற்றி இக்கோட்டையைக்கட்டிய நமதுமுன்னோர்களுடைய புகழ் இதனால் உயர்ந்திருக்கிறதேயொழிய தாழ்ந்துபோகவில்லை. நம் முன்னோர்கள் கட்டிய பலமான அஸ்திவாரத்தின்மீது நமது வாலிபர்கள் அலங்காரமான கோபுரத்தை யெழுப்பியதாகவே காண்கிறோம். ஆகையால் காலத்திற்கேற்றவாறு ஞாலத்தில் நலம்பெற யாவையும் மாற்றியமைப்பதுதான் புத்திசாலித்தனமென்று நன்கு புலனாகிறது. பெரியோர்களே!

வழக்கம் நம்மை பின்னுக்கிழுத்தன்ளுகிறது. அறிவு முன்னுக்கிழுக்கிறது. சாதி ஆண்களை ஒருவிதமாகவும் பெண்களை ஒருவிதமாகவும் நமது வழக்கம் நடத்துகிறது. இது நீதியாவென்று அறிவு கேட்கிறது; வழக்கம் பிரதானமாகுமாவென்று அறிவு இடித்துரைக்கிறது; அன்பே மயம், அறிவே துணையென்று ஆன்றோரும், சான்றோரும் கூறியிருக்கின்றார்கள். 'என் சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே' என்று தாயுமானவரும் கதறிப்பாடியிருக்கின்றார். நமக்குத் துணைபுரியும் அறிவுத்தெய்வத்தை வழக்கத்திற்கடிமைப்படுத்தக்கூடாதென்று பகுத்தறிவியக்கம் உலகமெங்கும் பரவி வருகிறது. போலிச் சம்பங்களெல்லாம் புதைக்கப்பட்டு வருகிறது. மூடப்பழக்க வழக்கங்களுக்கெல்லாம் சாவு மணியடித்து வருகிறது. எழுகோடி மக்கள் புழுவாய்த் துடித்துக்கொண்டிருக்கும் போது சுயராஜ்யம் பெற்று சுகமாய் வாழலாமென்று ஒரு சார்பார் பரபரப்புக் காட்டுகிறார்கள். இனி வரக்கூடிய ராஜ்யம் சுயராஜ்யமா? ராம ராஜ்யமா? வென்று எல்லோரும் கேட்கின்றார்கள். ஆனால் மகாத்மாகாந்தி "ராம ராஜ்யந்தான் வரப்போகிறது; ஆடவர்களெல்லாம் ராமனைப்போலிருங்கள், பெண்களெல்லாம் சீதையைப்போலிருங்க"ளென்று அடிக்கடி கூறி வருகிறார். "சூத்திரன்" (தொழிலாளி) தவம் செய்த குற்றத்திற்காக தலைவாங்கப்பட்ட ராம ராஜ்யத்தில் எழுகோடி தீண்டாத மக்கள், 10 கோடி "சூத்திரர்கள்" (தொழிலாளிகள்) எவ்வாறிருந்து ஜீவிக்க முடியுமென்று சந்தேகங்கொண்டு எல்லோரும் கமால்பாட்சாவாகலாமாவென்று யோசிக்கின்றார்கள்.

உலகமானது பற்பலப்புதுமைகளைக்கண்டு பழமைகளையெல்லாம் பாழ்படுத்தி நவீன உலகமாக மாறிக்கொண்டு வருவதை நாம் பிரத்தியட்சமாகப் பார்த்திருந்தும் நம்மில் ஒரு சிலர் பழமையேநமக்குப்பிரதானமாகுமென்று பலமாக வாதிக்கிறார்கள். ஆனால் ஜாதி சமயம் சாமி சடங்கு முதலிய சில வழக்கங்களைத் தவிர நடைமுறையில் பழமை பாழ்பட்டு விட்டதென்றுதான் சொல்லவேண்டும். பழமை பல்லவி பாடுகின்றவர்களை பழமையென்பது எதுவென்று கேட்டால் சரியான பதில் கூறுகின்றார்களுமில்லை, ஆகையால்பழமைபழமை என்று சொல்லுவதில் பிரயோசனமில்லை. உதாரணமாக வியாபார நிலை மாறினதைபற்றி சில கூறுகிறேன்.

தலைச்சுமை சுமந்து பண்டமாற்றுதல் செய்த ஒரு வியாபாரியை பொதிமாட்டுக்காரன் வந்து பழமையென்று தள்ளிவிட்டான். பொதிமாட்டுக்காரனுக்கோ மாட்டுவண்டிக்காரன் புதுமையாய்க் காணப்பட்டான். அவ்வண்ணமே ரெயில் வந்து மாட்டு வண்டியை பழமையாக்கி விட்டது. ரெயிலை மோட்டார் லாரி பழமையாக்கி வருகிறது. இப்போது அதையும் விட்டு ஆகாயக்கப்பலில் வியாபாரப் போக்கு வரத்துச் செய்யலாமாவென்று நிபுணர்கள் ஆலோசனை செய்துகொண்டு வருகிறார்கள். ஆகாயக்கப்பலையும் பழமையாக்குவதற்கு இன்னும் என்னென்ன புதுமைகள் தோற்றப் போகிறதென்று நமக்குப் புலப்படவில்லை. ஐரோப்பாவிலிருந்து ஆஸ்டிரேலியாவிற்கு ஆகாயத்தின் வழியாக ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்த ஆமீசான்சன் என்னும் வீரமாதரசி காலத்தில் தலைச்சுமையிற் பண்ட மாற்றுதல்செய்தபழமையை நினைத்துக் கொண்டிருப்பது பொருந்துமாவென்பதை நீங்களே ஆலோசித்துக் கொள்ள வேண்டுகிறேன்.

'நேற்று கடந்து போனதைப் பற்றிச் சிந்தியாதே; நாளைக்கென்ன வருமோவென்று யோசிக்காதே; இன்று உன் முன் எது வந்து நிற்கிறதோ அதை தைரியமாகச் செய்து முடிப்பதில் உன் சித்தத்தை செலுத்துவாயாக' என்று சுவாமி விவேகானந்தர் கூறியிருப்பதற் கேற்ப நாமும் அருத்தமில்லாமற் பழைமையைப் பற்றிக்கொண்டே ஸ்தம்பித்துப் போகாமல்புது உலகத்தோடு உறவு கொண்டு புது மனிதர்களாக வேண்டுமென்பதே என்னுடைய பணிவான எண்ணமென்பதை இங்கே துணிவாகச் சொல்லிக் கொள்கிறேன்.

இவ்வாறு மண்ணும் விண்ணும் நீரும் நிலமும் ஜீவர்களும் ஜீவத்தன்மைகளுந் தொன்மைகளும் மாறிக்கொண்டும் உண்மையுணர்ந்து கொண்டு வரும் இவ்விருபதாம் நூற்றாண்டில் வியாபார வுலகத்திற் பெருமைபெற்ற நாடார்கள் வாளாவிருக்க முடியுமா? நமது ஆண்களும் பெண்களும் அறிவும் ஆற்றலும் பெறுவதற்கு கல்வி நிலையங்கள் ஸ்தாபிக்கவேண்டியதே அவசியமென்பதை உணர்ந்து, நமது காரப்பேட்டையின் மூலப்பொருள் சிதைந்து போகாமல் ஒருங்குசேர்த்து ஆண் பெண் கலாசாலைகள் ஏற்படுத்தி யிருப்பது போற்றத்தக்கது. நமது சிறு மதலைகளுக்கு நமது தாய்ப் பாஷையும், ராஜபாஷையாகிய இங்கிலீஷ் பாஷையுங் கற்றுக்கொடுத்து வரத்தக்க ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். வியாபாரிகளாகிய நமக்குப் பல பாஷைகளும் அறிந்திருக்கவேண்டியது அவசியமென்பதை நான் அதிகம் சொல்லத்தேவையில்லை.

வெகுதூரங்களிலிருந்து இங்கு

[தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க]

ரோஜா முத்தையா

மாமிச உணவைப்பற்றிய சில குறிப்புகள்.

(மயிலை. சீனி. வேங்கடசாமி.)

தேக சுகத்துக்கேற்ற உணவு எது என்பதை யாராய்ந்தமேல்நாட்டு அறிஞர்கள் கலப்பு ஆகாரந்தான் [அதாவது மாமிசமும், மரக்கறியும்] சிறந்தது என்று முடிவு செய்திருக்கிறார்கள். மாமிச உணவு மனிதருக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு மரக்கறி உணவு மனிதருக்கு இன்றியமையாததாகும். ஏனெனில் மாமிச உணவில் இருக்கும் சத்துக்கள் மரக்கறி உணவில் கிடையாது. மரக்கறி உணவில் இருக்கும் சத்துக்கள் மாமிச உணவில் இல்லை. ஆகவே மாமிச உணவையும், காய்கறிகளையும் கலந்து சாப்பிட வேண்டியது அவசியமாகிறது.

மாமிச உணவைச் சாப்பிடுவது இழிவானது, தாழ்வானது, பாவமானது என்று இந்துக்களில் ஒரு மூடக்கொள்கை இருந்து வருகிறது. மாமிசஞ் சாப்பிடுவதனால் தாமச குணமும், ரஜோ குணமும் ஏற்டுவதாகச் சொல்லுகிறார்கள். சாந்தகுணம் ஏற்படுவதற்காக காய்கறிகளைச் சாப்பிடவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்துக்களுக்கு வீரம் அற்றுப்போனதும் ரோஷமற்றுப் போனதும் அன்னிய அரசாங்கத்துக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதும் மரக்கறி உணவினால் ஏற்பட்ட சாந்த குணத்தின் பயனாகும். பௌத்தம், ஜைனம், இந்துமதம் ஆகிய இம்மூன்று சமயங்களும் சேர்ந்து இந்தியரை மரக்கறி உணவுசாப்பிடச்செய்தது அதன் பயனாக இந்தியரை மீளா அடிமைக் குழியில் அமிழ்த்தி விட்டது. மரக்கறி உணவு [சைவசாப்பாடு] மாத்திரம் சாப்பிடுவதனால் இந்துக்கள் தேகபலமும் அறிவு பலமும் குறைந்து நாளுக்கு நாள் க்ஷீணித்துப்போகிறார்கள். இனியாவது ஆகாரத்தைச் சீர்திருத்திக்கொண்டு தேக சுகமும் அறிவும் ஆண்மையும் பெற்று வாழ்வார்களென்று நம்புகிறேன்.

மாமிச போஜனம் செய்கிறவர்களை சைவபோஜனம் செய்கிறவர்கள் தாழ்வாக நினைக்கிறார்கள். மாமிச போசனம் செய்கிறவர்களில் சிலர், மற்றவர் தங்களை இழிவாகக் கருதுவார்களென்று நினைத்துத் தாங்கள் சைவர்கள் [மரக்கறி புசிக்கிறவர்கள்] என்று சொல்லிக் கொண்டு மறைவாக மாமிசம் புசிக்கிறார்கள். இவ்விதம் செய்வது அறிவீனமாகும். உண்மையில் மாமிசபோசனம் செய்வோர் தாழ்ந்தவரல்லர். மரக்கறிஆகாரம் சாப்பிடுகின்றவர்கள் தான் மாமிசம் புசிப்போரை விடத்தாழ்ந்தவராவார். எப்படியென்றால், மாமிசம் புசிப்போர் மரக்கறி உணவையும் சாப்பிடுகிறார்கள். ஆகையால் அவர்கள் உண்ணும் ஆகாரத்தில் தேகசுகத்துக்கு வேண்டிய எல்லா ஜீவ சத்துக்களும் அமைந்திருக்கின்றன. ஆனால், மரக்கறிமாத்திரம்புசிக்கிறசைவர்களின்சாப்பாட்டில்எல்லா ஜீவ சத்துக்களும் (Vitamins) அமைந்திருக்கவில்லை. ஆகவே சைவர்கள் குறைந்த சத்துள்ள ஆகாரத்தைப் புசிப்பதனால் நிறைந்த சத்துள்ள ஆகாரத்தைப் புசிக்கும் மாமிசம் சாப்பிடுவோருக்கு தாழ்ந்தவராவார்.

இனி மாமிச போசனத்திலுள்ள சில குணங்களை இங்கு எழுதுவோம். இங்கு எழுதப்படும் விஷயங்கள் என் அபிப்பிராயம் அல்ல. உலகோரால் நன்கு மதிக்கப்பட்டு புகழ் பெற்ற மேனாட்டு டாக்டர்கள் ஆராய்ச்சி மூலமாகக் கண்டறிந்த உண்மைகளையே இங்கு எழுதுகிறேன்.

முதலில் நெய் அல்லது கொழுப்புகளை எடுத்துக்கொள்ளுவோம். கொழுப்புகள் இரண்டுவகைப்படும். அதாவது தாவரக்கொழுப்பு, மிருகக்கொழுப்பு என்பன. தாவரங்களில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய், பருத்திக் கொட்டைநெய், தேங்காயெண்ணெய் முதலியன தாவரக்கொழுப்புகளாம். மிருகங்களிலிருந்து கிடைக்கும் வெண்ணெய், நெய், மீன் எண்ணெய் (Cod-liver oil) மாமிசங்களிலிருக்கும் கொழுப்புகள் முதலியவைகளை மிருகக்கொழுப்பு எனப்படும். இந்த இரண்டு விதக்கொழுப்புகளில் மாமிசக் கொழுப்புகள்தான் [வெண்ணெய், நெய், மீன் எண்ணெய் முதலன] உடம்புக்கு அதிக நன்மை செய்வதாக் கண்டறிந்திருக்கிறார்கள், இன்னும் விளக்கமாகச் சொல்லவேண்டும் என்றால் தாவரக் கொழுப்பாகிய எண்ணெய்வகைகளில் (Vitamin A) என்னும் ஜீவசத்துப்பொருள் கிடையாது. வெண்ணெய், நெய், மீன் எண்ணெய் முதலிய மிருகக் கொழுப்புகளில் (Vitamin A) என்னும் ஜீவசத்துப்பொருள்கள் ஏராளமாயிருக்கின்றன. அன்றியும் மீன் எண்ணெயில் (Cod-liver oil Vitamin D) என்னும் ஜீவசத்தும் இருக்கிறது. (Vitamins) ஜீவசத்துப் பொருள்களைப்பற்றி தனியே பிறகு எழுதப்படும்.

ஈரல் (liver) என்பது ஆடு மாடு பறவை முதலிய எல்லாப் பிராணிகளின் உடம்பில் உள்ள ஒரு உறுப்பாகும். இதைச் சாப்பிடுவதனால் மிகவும் நன்மை உண்டாகும் என்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். இதில் நான்குவகை ஜீவசத்துப் பொருள்கள் (Vitamins-A, B, C, and D.) இருக்கின்றனவாம். அன்றியும் (Manganese) என்னும் உலோகசத்தும், (Iron) அயம் என்னும் இரும்புச்சத்தும் இருக்கின்றன. இது மிகவும் முக்கியமான ஆகாரம் என்றும் இதை மனிதர் வாரத்துக்கொருமுறையாவது சாப்பிடவேண்டும் என்றும் பிரபல டாக்டர்கள் சிபாரிசு செய்கிறார்கள்.

மாமிசம் (Meat) ஆடு முதலிய பிராணிகளின் மாமிசம் உடம்புக்கு பலம் தருவதாகச் சொல்லுகிறார்கள். அன்றியும்மாமிசத்தில் (Phosphorus என்னும் ஒருவகை உப்பு இருக்கிறது. இந்த உப்பு தேகத்திலுள்ள ஜீவ அணுக்கள் வளர்வதற்கு அவசியமானது. இன்னும் இரத்தத்திலும் இந்த உப்பு ஓரளவு இருக்க வேண்டியது அவசியமானது.

மூளையிலும் (Phosphorus) என்னும் உப்பு இருக்கிறது. அன்றியும் தேகத்துக்கு நன்மை தரக்கூடிய அனேகவித கொழுப்புகளும் இதில் உள்ளன. இன்னும் மூளையில் [Copper] தாம்பரம் என்னும் செம்புச்சத்தும், (Zink) துத்தநாகச்சத்தும் இருக்கின்றன.

மீன்கள். மீன்வகைகளில் A, B. D. என்னும் மூன்றுவகை ஜீவசத்துக்களும் இருக்கின்றன. அன்றியும் அயோடின் (Iodine) என்னும் உப்பும், தாம்பரம (Copper) என்னும் செம்புச்சத்தும் இருக்கின்றன.

முட்டை இதில் கொழுப்புவகைகள், கால்ஸியம் [Calcium] பாஸ் பாஸ் [Phosphorus] என்னும் உப்புகள், இரும்பு [Iron] சத்து ஆகிய இவைகள் இருக்கின்றன. முட்டை பாலுக்கும், ஈரலுக்கும் [Lever] அடுத்தபடியான முக்கியமான ஆகாரம். ஆனால் இதை ஒருநாளைக்கு இரண்டு அல்லது மூன்றுக்குமேல் சாப்பிடக்கூடாது. சைவர்கள் முக்கியமாக பிராமணர்கள் தற்காலத்தில் வெளிப்படையாகச்சாப்பிடும் மாமிச ஆகாரம் முட்டையே. முட்டை பறவைகளின் வயிற்றிலிருந்து வெளிப்படுகிறதை யறிந்திருந்தும அவர்கள் இதை தாவர உணவு [Vegetable food] என்று சொல்லுகிறாகள். நமது நாட்டில் கோழி முதலிய பறவைகளை வளர்த்து போதிய அளவு முட்டையை உற்பத்தி செய்யவில்லையென்று டாக்டர்கள் வருத்தப்படுகிறார்கள்.

மாமிச உணவை உண்ணும்போது முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்று உண்டு. அதாவது மாமிசங்களோடு காய்கறி கீரை முதலிய தாவரங்களையும் கலந்து சாப்பிட வேண்டும். மாமிசத்தை மாத்திரம் தனியாகச் சாப்பிடக்கூடாது. மாமிச உணவுடன் மரக்கறிகளையும் கலந்து சாப்பிடுவதால் உடம்புக்கு அதிக நன்மை உண்டாகிறது.

மூளையை உழைத்து வேலைசெய்கிறவர்கள் மாமிச உணவைப் பகற்காலத்தில் சாப்பிடக்கூடாது. ஏனென்றால் மாமிசம் ஜீரணமாவதற்கு அதிக நேரங்கொள்ளும். ஆகவே அதை சாப்பிட்டவுடன் மூளைக்கு வேலை கொடுத்தால் அது சரியாக ஜீரணமாகாமல் கஷ்டப்படுத்தக்கூடும். ஆகவே மூளை வேலை செய்கிறவர்கள் ஓய்வாக இருக்கிற மாலைகாலத்தில் மாமிசம் சாப்பிடுவது நல்லது. அதாவது இராப்போஜனத்தில் மாமிச உணவைச் சாப்பிடலாம்.

மூளையை உழைத்து வேலைசெய்கிறவர்கள் மீன் சாப்பிடுவது நல்லது என்று டாக்டர்கள் சிபாரிசுசெய்கிறார்கள். ஏனென்றால் மாமிச உணவுகளில் எளிதில் ஜீரணமாகக்கூடியது மீன்தான். ஆகையால் ஓடி ஆடிப் பாடுபடாமல் ஓரிடத்தில் உட்கார்ந்து மூளையைச் செலுத்தி வேலை செய்கிறவர்கள் மீன் உண்பதால் அவர்களுக்கு அஜீரணம் முதலிய துன்பங்கள் உண்டாகாது.

பால், தயிர், மோர் முதலியவைகளும் மாமிச உணவேயாகும். சைவர்கள் இவைகளை மாமிசம் என்று நினைக்கிறதில்லை. இதைச் சைவர்கள் தாங்கள் உண்பது மட்டுமல்லாமல் சுவாமிக்கு அபிஷேகமும் செய்கிறார்கள். சைவர்கள் மாமிச உணவாகிய பால், தயிர், நெய்களைச் சாப்பிடாமல் இருந்தால் அவர்கள் கதி அதோகதியாய் விடும். பால், தயிர்களை அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். உஷ்ணதேசமாகிய இந்தியாவில் பாலைத் தயிராக்கிச் சாப்பிடுவதுதான் நல்லது என்று டாக்டர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். தயிரைச் சாப்பிடுவதால் தேக சுகம்பெற்று அதிகநாள் ஜீவித்திருக்கமுடியும் என்பது அறிஞர்களின் அபிப்பிராயம். பசும் புல், பச்சை இலை தழை முதலியவைகளை மேயும் பசுவின்பால் அதிக சத்துள்ளதாக இருக்கும். காய்ந்த வைக்கோல் முதலியவைகளைத்தின்னும் பசுவின் பாலில் அதிக சத்துகள் கிடையா.

புரோகிதம்ஒழிந்த திருமணம்.

திருமங்கலம் தாலூகாவைச்சேர்ந்த குன்னத்தூரில், சங்கரையா நாயுடு குமாரர் திரு. சங்கரையா நாயுடுவுக்கும் நாட்டாபட்டி காலஞ்சென்ற திருவாளர் பெருமாள் நாயுடு புத்திரி திருமதி. சீதாலட்சுமியம்மாளுக்கும் நடந்த திருமணத்தில் புரோகிதனை நீக்கி உயர் திரு. ஆர். நரசிம்மலு நாயுடு அவர்களால் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றதென ஒரு நிருபர்எழுதுகிறார்.

ஆதிதிராவிடர்மகாநாடு

திருநெல்வேலி ஆதிதிராவிடர் மூன்றாவது மகாநாடு தென்காசியில் 31.5.31 ந்தேதி மாலை 2-மணிக்கு திரு எம். தேவதாசன் பி. ஏ. பி. எல். எம். எல். சி. அவர்களின் தலைமையில் கூடி சிலமுக்கியமான தீர்மானங்கள் நிறைவேறியதென ஒருநிருபர்எழுதுகிறார்.

கோவை ஜில்லா முஸ்லீம் மகாநாட்டின் அழைப்புக்கு திரு. ஈ. வெ. இராமசாமி சென்றிருந்தபொழுது அவரை மகாநாட்டுப்பிரமுகர்களும் தலைவரும் 2ம் நாள் நடவடிக்கை ஆரம்பத்திலும் முடிவிலும் சில வார்த்தைகள் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டபொழுது திரு. ஈ. வெ. இராமசாமி நிகழ்த்திய இரண்டு சொற்பொழிவுகளுடையவும் சாராம்சம்.

முஸ்லீம் மகாநாட்டில்

திரு. ஈ. வெ. இராமசாமி

சொற்பொழிவு.

ஈ. வெ. இராமசாமி.

தலைவரவர்களே! கனவான்களே!!

இந்தப்பெரிய மகாநாட்டில் என்னை சில வார்த்தைகள் பேசும்படி அழைத்ததற்கு நன்றிசெலுத்துகிறேன். இந்தச் சமயமானது அரசியல் சம்பந்தமான ஒரு நெருக்கடியான சமயம் என்பதை முஸ்லீம் சமூகமானது உணர்ந்து ஆங்காங்கு மகாநாடுகளை கூட்டி தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை தெரிவித்துக்கொண்டு வருகின்றன. அபிப்பிராயங்களில் சற்று ஒருவருக்கொருவர்-மாறுபட்டவர்களாயிருக்கலாம். ஆனாலும், விஷயத்தின் நெருக்கடியை உணராதவர்கள் இல்லை. இந்தச் சமயத்தில் எல்லா முஸ்லீம் மகாநாட்டிலும், சமீபத்தில் வருவதாயிருக்கும் அரசியல் சீர்திருத்தத்தில் முஸ்லீம்களின் நிலை என்ன என்பதே முக்கிய பிரசினையாய் இருக்கின்றது. அதிலும் முக்கியமாய் இருப்பது அச்சீர்திருத்தங்களுக்கு முஸ்லீம் பிரதிநிதிகளாய் தேர்தலில் பிரதிநிதித்துவம் பெறுவதா? அல்லது இந்துக்களின் பிரதிநிதியாய் பிரதிநிதித்துவம் பெறுவதா? என்பதே முக்கிய பிரச்சினையாய் இருந்து வருகின்றது. உண்மையை யோக்கியமாய்ப் பேசவேண்டுமானால் முஸ்லீம்கள் முஸ்லீம் பிரதிநிதிகளாய் முஸ்லீம்களின் ஓட்டைக்கொண்டே பிரதிநிதிகளாக அங்கம் பெறவேண்டும் என்பதாகவே இந்தியாவின் பெரும்பான்மையாகிய முஸ்லீம்கள் விரும்புகின்றார்கள் என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். இது சரியா? தப்பா? என்பது வேறு விஷயம். அதோடு அது சரியா? தப்பா? என்று முடிவு சொல்லுவதற்கு யாருக்கு உரிமை உண்டு என்பதைப்பொருத்தே தப்பு, சரி, என்கின்ற முடிவைப் பற்றியும் பேசவேண்டியதாகும்.

இதற்க இவ்வளவு விஷமப் பிரசாரம் வெளிப்படையான ஒரு உண்மையை அதாவது முஸ்லீம்களின் பெரும்பான்மையான மக்கள் தனித்தொகுதியை விரும்புகின்றார்கள் என்பது குருடனும் அறியும்படியாக இருந்தும் ஒரு சில இந்து தேசிய பிழைப்புக்காரர்களும் தங்கள் சுயநலவாழ்வுக்கு தேசியத்தை ஏற்படுத்தி அதை நம்பிஇருக்கின்றவர்களும் இவ்வளவுபெரிய உண்மையை மறைத்துப்பிரசாரம் செய்கின்றார்கள். இந்த ஆட்களே இந்திய தேசியத்தலைவர்களானால் இவர்களால் நடைபெறும் தேசிய ஆக்ஷியில் எவ்வளவு நாணயமும் யோக்கியமும் இருக்கும் என்பதை யோசித்துப்பாருங்கள். பொதுவாகவே இந்துக்களும் முஸ்லீம்களும் மதத்திலும், ஆச்சார அனுஷ்டானங்களிலும் மற்றும் எவ்வளவோ விஷயங்களிலும் பிரிவுபட்டு இருக்கின்றார்கள். இரண்டு சமூகங்களும் ஒன்றுபடுவது என்பது சுலபத்தில் முடியாத காரியமாகும். வரப்போகும் சீர்திருத்தத்திலும் இவ்விரண்டு சமூகங்களும் ஒன்றுசேர முடியாதபடி அதாவது அவரவர்கள் மதத்திற்கும ஆச்சார அனுஷ்டானத்திற்கும் சிறிதும் பங்கம் ஏற்படாதபடி பத்திரமாய் காப்பாற்றப்படவேண்டும் என்பதே முக்கிய நிபந்தனையாகும். ஆகவே, இரண்டு நேர்கோடுகள் எப்படி ஒன்றுசேர முடியாதோ அப்படிப்போல் ஜாக்ரதையாய் காப்பாற்றப்படும் ஒன்றுக்கொன்று மாறான மதத்தை சேர்ந்த மக்கள் ஒருநாளும் ஒன்று சேர முடியாது. அப்படி இருக்கவேண்டி ஏற்பட்ட இரு சமூகங்களும் அவரவர்கள் பிரதிநிதிகளை அவரவர்களே தெரிந்தெடுத்துக் கொள்வதன் மூலம்தான் "பத்திரமாய்" இருக்கமுடியும்.

ஆகவே இந்த நிலையில் முஸ்லீம்கள் தனித்தொகுதி கேட்பதில் பிசகு ஒன்றும் இல்லை. ஆனால் அதற்கு ஆக்ஷேபனை சொல்லுவதில் தான் எனக்கு நியாயமிருப்பதாகப் புலப்படவில்லை.

வாயில் வேண்டுமானால் "இந்து முஸ்லீம் சகோதரர்கள். இந்து முஸ்லீம் ஒற்றுமை" என்று பேசலாம். அதில் ஒரு சிறிதும் நாணயமே இருக்கமுடியாது. ஏனெனில் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் உள்ள மத சம்பந்தமான சமூக சம்பந்தமான, கொள்கைகள் சம்பந்தமான ஒற்றுமைகள் எப்படிப்பட்டது என்பது எனக்கும் கொஞ்சம் தெரியும்.

இந்து முஸ்லீம் ஒற்றுமையும் நம்பிக்கைக்கு பாத்திரமான சகோதரத் தன்மையும் வேண்டுமானால் அதற்கு இடையூறாயிருக்கும் மதக் கொள்கைகளில் முதலில் திருத்தம் ஏற்படவேண்டும். அப்படிக்கில்லாமல் இருவர் மதக் கொள்கைகளையும் பத்திரமாய்க் காப்பாற்ற வேண்டும் என்பதில் "யார்கழுத்தையார் அறுப்பது?" என்கின்ற உண்மைதான் அதில் தொக்கியிருக்கின்றது. அதுவேதான் அதற்கு அருத்தமாய் இருக்கமுடியும். ஏனெனில் இன்றையதினம் அரசியல் துறையில் இருக்கும் மக்கள் அரசியலைவிட மதத்தையே பிரதானமாய்க் கருதி இருக்கின்றார்கள் அதுமாத்திரமல்லாமல் மத ஆதிக்கத்தை நிலை நிறுத்தவே அரசியல் ஆதிக்கம் வேண்டுமென்கின்றவர்களாய் இருக்கின்றார்கள். ஆகவே இந்தக்கூட்டத்தார்கள் "தேசியம் முக்கியமானது, அரசியல் முக்கியமானது" வெள்ளைக்காரனை இந்த நாட்டை விட்டு ஒழிப்பது முக்கியமானது, என்று சொல்லுவதை நான் ஹம்பக்-புரட்டு என்றே கருதுகின்றேன். ஆதலால் சிறுபான்மையாய் இருக்கின்றவர்களுக்கு ஒன்று போதுமான பாதுகாப்புவேண்டும், அல்லது இருவருக்கும் பொதுவாய் இருவரும் அல்லாதவரான மத்தியஸ்தர் ஒருவர் வேண்டும். மத்தியஸ்தருக்கு கூலிகொடுத்துத்தான் ஆகவேண்டும். அதற்கு யார் என்ன செய்வது? ஆகையால் இன்றையதினம் நமக்கு மத்தியஸ்தன் வேண்டாம் என்றால் கட்டாயம் பங்கோபஸ்து வேண்டியதுதான். ஆதலால் முஸ்லீம்கள் தங்களுக்குத் தனித்தொகுதியையேதான் கேட்கும் என்பதில் குற்றமில்லை.

இந்து முஸ்லீம்களில் இந்தியாவுக்கு இவர்கள்தான் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ள யாருக்கும் உரிமை இல்லை. உரிமை இருக்கின்றது என்றால் இருவருக்குமே உரிமை இருக்கின்றது. இந்தியாவில் இருக்கும் எழரைக்கோடி முஸ்லீம்களில் முக்கால்வாசிக்கு மேற்பட்டவர்கள் இஸ்லாம் மார்க்கம் ஏற்படுவதற்கு முன்பே இந்தியாவிலேயே பிறந்துவளர்ந்த சமூகத்தின் பரம்பரையார் ஆவார்கள். அவர்களது மார்க்கம் வேறானதினாலேயே அவர்கள் இந்தியர்களல்லாதவர்களாய்ப் போய்விடமுடியாது. இந்தியாவில் உள்ள யாருடைய உரிமைக்கும் அவர்களது உரிமை இளைத்ததாகிவிடாது. இந்துக்கள் என்று சொல்லப்படுகின்றவர்களும் இந்துமதம் என்பது தோன்றுவதற்கு முன்பே இங்கு பிறந்து வளர்ந்துவரும் சமூகத்தைச்சேர்ந்தவர்களானவர்கள். அவர்களுக்கும் சகல உரிமையும் உண்டு. ஆதலால் இதில் ஒருவர்மேல் ஒருவர் கீழ் அல்லது ஒருவர் சொந்தக்காரர், ஒருவர் அன்னியர் என்று பேசுவதெல்லாம் கையில் வலுத்தவன் காரியமாகுமே ஒழிய நியாயமான காரியமாகாது.

ஆதலால் முஸ்லீம்கள் இந்தச் சமயம் ஏமாந்து போகக்கூடாது என்றே சொல்லுவேன். "விடிய விடிய கண் விழித்து இருந்து விடியற்காலம் திருடன் வருகின்ற நேரத்தில் தூங்கி ஏமார்ந்து விடாதீர்கள்" என்றே சொல்லுகின்றேன். எப்பொழுது "தேசியவாதிகளும் மகாத்மாக்களும்" எங்களுக்கு மதத்தைப்பற்றிக் கவலை இல்லை என்கின்றார்களோ அப்பொழுது வேண்டுமானால் தனித்தொகுதியைப்பற்றிக் கவலை இல்லை என்று சொல்லிவிடலாம். அதுவரை பத்திரமாகத்தான் இருக்கவேண்டும்.

ஏனெனில் நமது பிரதிநிதி என்பதாக தேர்தலுக்கு நிற்பவர்கள் எல்லாம் நிற்கின்றவரை, ஓட்டு கேட்கின்றவரையில், வெற்றிபெற்று அங்கத்தினராகின்றவரையில் நமது பிரதிநிதி என்றுதான் சொல்லிக்கொள்ளுகிறார்கள். வேலை ஆனவுடன் பிறகு அவர்களுக்குமாத்திரம்தான் அவர்கள் பிரதிநிதிகளாகி அவர்கள்சொந்தசௌகரியத்திற்காக அந்தப்பதவியை எவ்வளவு இழிவாய் வேண்டுமானாலும் உபயோகப்படுத்திவிடுகின்றார்கள். இப்படிப்பட்ட மக்கள்தான் இன்று எந்த சமூகத்திலும் பிரதிநிதியாகத் தகுந்தவர்களாய் இருக்கின்றார்கள்.

இம்மாதிரி ஆட்களுக்கு தனித்தொகுதி இல்லாவிட்டால் அச்சமூகத்திற்கு பெரிய ஆபத்து என்றுதான் சொல்லுவேன். இப்பொழுதே தனித்தொகுதியின் மூலம் பிரதிநிதிகளானவர்களே அந்த ஸ்தானத்தை எவ்வளவு தப்பாய் உபயோகிக்கின்றார்கள் என்றும் தெரிந்தெடுத்த மக்களின் அபிப்பிராயத்திற்கு எவ்வளவு விரோதமாய் இருக்கின்றார்கள் என்றும் பாருங்கள்.

ஆகவே பொதுத்தொகுதியில் தெரிந்தெடுக்கப்படும் 33 பிரதிநிதிகளால் ஒரு சமூகத்திற்கு ஏற்படும் நன்மையை விட தனித்தொகுதியால் தெரிந்தெடுக்கப்படும் 23 பிரதிநிதிகள் இருந்தால் அதிகமான நன்மையே ஏற்படும். என்ன நன்மை என்று சிலர் கேட்பார்கள். நன்மை என்ன என்பது யாருக்கும் தெரிந்ததுதான். உத்தியோகங்கள், பதவிபட்டம், பணம் சம்பாதிக்க சௌகரியங்கள் ஆகியவைகள்தான் தேசியமாகவும் அரசியல் சீர்திருத்தமாகவும் இருந்து வருகின்றது. இதுதான் இனி வரப்போகின்ற தேசியத்திலும், சீர்திருத்தத்திலும் கிடைக்கப்போகின்றது. இதை மறைப்பது ஜாலவித்தையாகுமே ஒழிய நாணயமாகாது. ஆகவே இவை எல்லோருக்கும் சரிசமமாய் கிடைக்க வேண்டும் என்பதற்குத்தான் தனித்தொகுதி வேண்டுமென்பதாகும்.

தவிர, தனித்தொகுதியால் ஒற்றுமை ஏற்படாது என்கின்றார்கள். இதிலும் சிறிதுகூட அர்த்தமில்லை என்றுதான் சொல்லுவேன். இப்போது சுமார் 20 வருஷகாலமாய் தனித்தொகுதிதான் இருந்துவருகின்றது. இதனால் என்ன விரோதம் ஏற்பட்டுவிட்டது? என்ன ஒற்றுமையில்லாமல் போய்விட்டது? என்று கேட்கின்றேன். இப்போது இதை மாற்றவேண்டிய அவசியமானகாரியமென்ன? என்றும் கேட்கின்றேன். கூட்டுத்தொகுதியாயிருந்தால் எவ்வளவோ கலவரங்கள் ஏற்பட்டு இருக்கும். உதாரணமாக கூட்டுத்தொகுதி உள்ள முனிசிபாலிட்டிகளில் இந்து முஸ்

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க

கும்பகோணம் சாக்கோட்டையில் சுயமரியாதைத் திருமணம்

கும்பகோணத்திற்கடுத்த சாக்கோட்டையில் திருவாளர் சாமிநாதவாண்டையார் குமாரர் திரு. ராமசாமிக்கும் திருவாளர் துரைசாமி கரடி அவர்கள் குமாரத்தி திருச்செல்வி பாக்கியத்திற்கும் சுயமரியாதை திருமணம் 12-6-31ந்தேதி வெள்ளிக்கிழமை மாலை 11 மணிக்கு நல்ல "ராகு கால" சமயத்தில் நடந்தேறியது. அதற்காக திரு. ஈ. வெ. இராமசாமியும் சென்றிருந்தார். திரு. ஈ. வெ. இராமசாமியை கும்பகோணம் இரயில் ஸ்டேஷனில் வரவேற்று சாக்கோட்டை பள்ளிக்கூட மண்டபத்திலிருந்து மோட்டாரில் ஊர்வலமாக மேள வாத்தியங்களுடன் அழைத்துச் செல்லப்பட்டார்கள். கல்யாணப் பந்தல் சேர்ந்ததும் கும்பகோணம் சுற்றுப்பக்கங்களிலிருந்து அநேக கனவான்கள் வந்திருந்தார்கள். பந்தலில் ஆண் பெண் சுமார் 1000 பேர்கள் இருந்தார்கள். அதில் முக்கியமானவர்கள் திருவாளர்கள்,

சாக்கோட்டை வீரப்ப நாயக்கர், முல்லவண நாயக்கர், கணபதி நாயக்கர், ராஜகோபால நாயக்கர், ரெத்தினசாமி, மளிகைசுத்தியார், மாரிமுத்துவாண்டையார், முத்து மட்டயா, கோபாலகிருஷ்ண நாயக்கர், கும்பகோணம் ரயிலடி தெரு கோ. ராமலிங்கம் நாயக்கர், குஞ்சிதபாதம் பிள்ளை, சாமிநாத பிள்ளை, கிருஷ்ண பிள்ளை செருவலிங்கம், யூனிஸ்கான் சாயபு, திருநாராயணபுரம் சடகோப நாயுடு, ராமு, பி. ஏ., உப்புக்கார தெரு கோவிந்தராஜுலு நாயுடு, தீனதயாள நாயுடு, ரொட்டிக் கிடங்கு சுந்திரராஜுலு, கடலங்குடி தெரு குப்புசாமி பெரியார், பாண்டுரங்க நாயுடு, கடைதெரு மளிகை மாரிமுத்து ஷை மளிகை எல். கோவிந்தசாமி, கே. காதர்பாஷா, மேலக்காவேரி முகமது இப்ராகிம் இன்னும் சில முஸ்லீமாவார்கள். திபபுராஜபுரம் கிருஷ்ணமூர்த்தி அய்யர், ஆரியன் பிரஸ் பக்கிரிசாமி நாயக்கர், சுருட்டுக்கடை கோவிந்தசாமி நாயக்கர், சுப்பிரமணிய பத்தர், லட்சுமணன், ராமநாத சேட்டு முதலியவர்களாவார்கள்.

ஆரம்பத்தில் கும்பகோணம் கடலங்குடி தெரு திரு. குப்புசாமியவர்கள் சுயமரியாதைத் திருமணம் என்பதுபற்றி சில வார்த்தைகள் சொல்லும்படி திரு. ஈ. வெ. இராமசாமியைக் கேட்டுக்கொண்டார்.

ஈ. வெ. இராமசாமி.

திரு. ஈ. வெ. இராமசாமி எழுந்து திருமணத்திற்கு முன்னும் பின்னும் பேசியதாவது:--

சகோதரிகளே! சகோதரர்களே!! இன்று இங்கு நடக்கும் திருமணம் சுயமரியாதைத் திருமணம் என்று சொல்லப்படுகின்றது. இதை நான் முழு சுயமரியாதைத் திருமணம் என்று ஒப்புக்கொள்ள முடியாது. பார்ப்பான் வரவில்லை என்பதையும், அர்த்தமற்ற சடங்குகள் அநேகமாயில்லை என்பதையும், வீண் மெனக்கேடான காரியமும் வீண் செலவுமான காரியமும் இல்லை யென்பதையும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் தாலிகட்டத் தயாராயிருப்பதாகத் தெரிகிறேன். பெண் உட்கார்ந்திருக்கும் மாதிரியைப்பார்த்தால் பெண்ணும் மாப்பிள்ளையும் இதற்குமுன் அறிமுகமகூட ஆனதில்லை போல் காணப்படுகின்றது. சுயமரியாதைக் கல்யாணத்தின் முறைகள் இவ்வளவினது என்று இப்போது வரையறுப்பது என்பது காதால சேட்பதற்கே முடியாத காரியமாயிருக்கும். கல்யாணம் என்பதே வேண்டியதில்லை என்று சொல்லக்கூடிய திட்டம சுயமரியாதை இயக்கக்கொள்கையில் ஒரு காலத்தில் வரக்கூடும். எந்தப்பெண்ணும் எந்த மாப்பிள்ளையும புருஷனை பெண்ஜாதிகளாகப் போகிறார்கள் என்று பெற்றோர்களுக்குக்கூட தெரிய முடியாத நிலைமை ஏற்படும். இந்த மாப்பிள்ளைக்கு இதற்கு முன் எத்தனை பெண் கல்யாணமாயிற்று? இந்தப் பெண்ணுக்கு இதற்குமுன் எத்தனை புருஷன் கல்யாணம் ஆயிற்று? என்கின்ற கணக்குப்போடக் கூடிய காலம் வரும். மற்றும் அதைப்பற்றியே மக்கள் விசாரிக்க-யோசனைசெய்கூடிய அவசியமேஇல்லாமலும் போகக்கூடும். அந்தமாதிரி கல்யாண முறையும இன்றைய குடும்ப வாழ்க்கை முறைகள் ஒழிந்து ஆணும் ஆணும் சிநேகமாய், அன்பாயிருப்பது போலவே ஏதோ ஒரு பெண்ணும் ஏதோ ஒருஆணும்பெண்ணும்சிநேகமாயிருக்கின்றார்கள் என்கின்ற அளவிலமாத்திரமே சம்பந்தமிருக்கும் படியான காலமும்வரும் இவைகளெலாம் அநேகமாய் பெண் மக்களுக்கு பகுத்தறிவு உணர்ச்சியும, சுயமரியாதை உணர்ச்சியும்உண்மைச்சுதந்திரமென்பதுஎன்னஎன்கின்றஉணர்ச்சியுமஉண்டானவுடனே ஏற்பட்டு விடும். இப்போது பெண்கள் அடிமைப் பொருள்களென்றும தாங்கள் மற்றவன் அனுபவிக்கும் பொருள் என்றும் தான் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ள நினைப்பதே அவர்களின அடிமை உணர்ச்சியின் அறிகுறியாகும. அந்தக் கருத்துக்கொண்டு தான் அவர்களுக்கு நடை, உடை, அணி முதலியவைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஒரு தாசி என்பவள் அதாவதுதான் பிறர் அனுபவிப்பதற்காக இருக்கின்றவள், அதனால் பயனாய் ஜீவிக்கின்றவள் என்று எண்ணிகொண்டிருக்கும்ஒருத்தி தன்னை அலங்கரித்துக் கொள்வதில் இருக்கும மனோபாவத்திற்கும் மற்றப் பெண்கள் அலங்கரித்துக்கொள்ளுவதில இருக்கும மனோபாவத்திற்கும் அதிக வித்தியாசமிருப்பதாக நான் கருதுவதில்லை. மிருகம், பட்சி ஆகியவைகள் ஆணைவிட பெண் தாழ்ந்ததென்றுகருதுவதில்லை. "ஆணுக்காகத்தான் பெண் இருக்கிறோம்" என்றுகருதி, தங்கள்மீது ஆண்கள் ஆசைப்பட வேண்டும் என்று சிறிதும் முயற்சிப்பதில்லை. ஆண்கள் ஆசைப்படும்படி நடந்துகொள்ள வேண்டும் என்று கருதுவதுமில்லை. ஆனால் பெண்ஜன்மம் எடுத்து தாங்கள் அலங்கரித்துக்கொண்டு ஆண்கள் ஆசையை எதிர்பார்ப்பதற்கே ஏற்பட்டதென்பதாய் கருதுகிறார்கள். தன் சொந்தப் புருஷனை சந்தோஷிக்கச் செய்யவோ திருப்தி அடையச் செய்யவோ என்று செய்யுங்காரியங்களும் கூட ஒருவித அடிமை எண்ணத்தில் பட்டதே ஆகும். நடை உடை பாவனைகளில் புருஷனைவிட மாறுபட்டிருக்க வேண்டும் என்கின்ற மனப்பான்மையும் அடிமை மோகமேயாகும். இவைகள் எல்லாம் இப்படிக்கு மாறுபட்டதையே யாகும். எப்படியோ ஆதியில் இம்மாதிரி ஏற்பாடுசெய்து விட்டதால் அந்தபத்தின் இனியும் நடந்து வருகின்றன. ஆண்களும் அனேகமாய் தனது வீட்டை, வண்டியை, மாட்டை அலங்கரிப்பதில் என்ன மனோ பாவம் கொள்ளுகின்றார்களோ அதே மனோ பாவத்தான் தன் பெண்ஜாதியை சிங்காரிப்பதிலும் கொள்ளுகிறான். ஆகையால் பெண்கள் தங்களை அலங்கரித்துக்கொள்வது என்கின்ற மனப்பான்மையை ஒழிக்க வேண்டியது பெண்கள் விடுதலையில்—சுதந்திரத்தில் ஒரு திட்டமாகும்.

தவிர திருமணம், கல்யாணம், என்பவைகள் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வது என்பது தவிர மற்றபடி இதில் வேறு ஒன்றுமே இல்லை. இந்த ஒப்பந்தமும இருவர் சௌகரியத்தை பொருத்த காரியங்களுக்கு மாத்திரமே அல்லாமல் மற்றொன்றுக்கும் இல்லை. அதுவும் இருவருடைய சமமான சௌகரியத்திற்குத் தானேயொழிய ஒருவருக்கு அதிக சௌகரியமஒருவருக்குகுறைந்தசௌகரியம் என்பதாக சிறிது வித்தியாசங்கூட கொண்டதாயிருப்பதல்ல. அதிலும் இருவரது சுதந்திரங்களும சமமாய்க் கருதப்பட்டதாகவும் அதற்கு எவ்வித தடையும் இருப்பதாகவும் இருக்கக்கூடாததாகும. அனேகமாய் இந்த ஒப்பந்தங்கள் எழுதி ரிஜிஸ்டர் செய்வதுதான் இனிபொறுத்தமானதாக இருக்கும். வேண்டுமானால் புதுவீடு குடிபோதல், புதிய தொழில், வியாபாரம் முதலிய காரியங்கள் துவக்கப்படுபவை ஆகியவைகளுக்காக எப்படி முதலிலேயே சற்று விளம்பரம இருந்தால் அனுகூலம என்று கருதுகின்றோமோ அதுபோல் நண்பர்கள், பந்துக்கள், அக்கம் பக்கத்தார்கள் ஆகியவர்களுக்கு தெரியக்கூடியதாய இருப்பதும நன்மையானதுதான். அதிலும் ரிஜிஸ்டர் இல்லாத திருமணங்களுக்கு சாக்ஷிகள் இருக்கவேண்டியது அவசியம என்கின்ற முறையில் பலர் அழைக்கப்படுவதும சரிதான். ஆனால் இதற்காகவே அதிகச்செலவும மெனக்கேடும் கூடாது என்பது மாத்திரம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். திருமணச்சடங்கு என்று ஒன்றை தனிப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டியதில்லை.

மணமக்கள் சபைக்கு வந்து தங்கள் தங்கள் ஒப்பந்தங்களைச் சொல்லி ஒப்புக்கொண்டதற்கு அறிகுறியாய் தங்கள் தங்கள் கருக்கெழுத்துள்ள மோதிரம் மாற்றிக்கொள்வதோ மாலைமாற்றிக்கொள்வதோ போதுமானதேயாகும். இதற்காகவென்று ஏன் அதிகப்பணச் செலவு செய்ய வேண்டும்? என்பதுதான் எனக்கும் புரியவில்லை. புதுச்சேலை, புது நகை, தாம்பூலம் இவைகளெல்லாம் பயனற்ற செலவாகவே ஆகின்றன. அநேக சுயமரியாதை கல்யாணங்களில் மாப்பிள்ளை சாதாரண உடுப்புடன் இருந்திருக்கிறார்கள். பெண்கள் தான் உயர்ந்த சேலையும், விலையுயர்ந்த நகைகளும் அணிந்து ஒரு ஆணானவன் பெண் வேஷம் போட்டிருப்பதுபோல் விளங்குகின்றார்கள். இவையெல்லாம் நாகரீகம் என்பதோடு பெண்மக்களின் தன்மையையே குறைத்துவிடுகின்றது. பெண்கள் சுதந்திரத்துக்கும், பெண்கள் விடுதலைக்கும் அவர்கள் மனப்பான்மை சற்று மாறியேயாக வேண்டும். "நான் அடிமையாய்த்தான் இருப்பேன் நீ மாத்திரம் எனக்கு எஜமானனாய் இருக்கக்கூடாது" என்பதில் அர்த்தமே யில்லை.

தவிர பெண்களுக்கு பிள்ளைப்பைத்தியம் இருப்பது மிகவும் புத்திகெட்டத்தனமாகும். பிள்ளைகள் பெறாமல் இருப்பதற்கு எவ்வளவு சௌகரியம் செய்து கொள்ளக்கூடுமோ அவைகளை செய்துகொள்ள வேண்டும். கொஞ்சுவதற்கென்று பிள்ளைகளைப்பெற்று அவற்றைக்காப்பாற்றுவதற்கு என்று அதற்கு நேர் விரோதமாய் என்னென்னமோ செய்து அஞ்சவேண்டியதாகி விடுகிறது எவ்விதத்திலும் பொறுப்பில்லாதவர்கள் வெகுதாராளமாய் "16 பிள்ளைகள் பெற்று பெருவாழ்வு வாழவேண்டும்" என்று ஆசீர்வாதம் செய்து விடுகிறார்கள். பிள்ளைபெற்று வளர்க்கக் கஷ்டப்படுகின்றவர்கள் யாரென்பதை யோசித்துப்பாருங்கள். நமது அறிவீனமானது இக்கஷ்டங்களை உணரச்செய்யாமல் செய்துவிடுகிறது. உணர்ந்தாலும் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல என்று நினைத்துக்கொள்வதால் அக்கஷ்டத்திலிருந்து விலக முடிவதில்லை. என்பதாக பேசியதோடு மற்றும் சுயமரியாதை இயக்கக்கொள்கைகள் என்பது பற்றியும் நீண்டநேரம் பேசினார்.

பிறகு எஸ். இராமசாமி நாயுடு பி. ஏ. அவர்கள் வெகு அழகாக சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி வந்தனோபசாரம் சொன்னார்.

பிறகு பகல் சாப்பாடு நடந்தது. பிற்பகல் 4.30 மணிக்கு திருவாளர் இராமநாதசேட் அவர்களால் பள்ளிக்கூட மண்டபத்தில் திரு. ஈ. வெ. இராமசாமிக்கு ஒரு பெரிய

ரோஜா முத்தையா ஆய்ச்சி நூலக அறக்கட்டளை

கோவை ஜில்லா முஸ்லீம் மகாநாடு.

கோயமுத்தூர் ஜில்லா முஸ்லீம் மகாநாடு, கோயமுத்தூர் சாமிபிச்சர் பாலசில் ஜூன் 13 14ந் தேதிகளில் பெங்களூர் ஜனாப் அப்துல் கபூர் சாயபு அவர்கள் தலைமையில் கூடிற்று. ஜனாப் உமர் பூரா சேட் வரவேற்புத் தலைவராயிருந்தார்.

மகாநாட்டுக்கு ஜில்லாவின் பலபாகங்களிலுமிருந்தும் சுமார் 1500 முஸ்லீம் கனவான்களுக்கு மேலாகவே விஜயம் செய்திருந்தார்கள். இந்து கனவான்களும் அநேகர் வந்திருந்தார்கள். ஊர்வலம் வெகுவிமரிசையாய் நடந்தது. தெருக்களில் நெடுக பெரிய பெரிய வளைவுகள் போடப்பட்டு தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. மகாநாட்டுக்கு மௌலானா அப்துல் ஜாபர் சாயபு, ஜமால்தீன் சாயபு, ஷெர்புதீன் சாயபு, அப்துல் லத்திப் பசரி, சையத் முர்துசா சாயபு ஆகியவர்களும் ஜனாப் அப்துல் ஹகீம். யாகூப் உசேன் சேட், அப்துல் அமீத்கான், பஷீர் அஹம்மது சையத், மீரான் ருவுத்தர் பியாபாணி ஆகிய எம். எல். சிக்களும் பாரிஸ்டர். மூசான் முதலிய பல முஸ்லீம் கனவான்களும், திருவாளர்கள் வெரிவாடு செட்டியார், வி எல்.ஏ. செகோட்டையா, ஏ. டி. டி. லக்ஷ்மணசாமி முதலியார், ஜே. எல். கண்ணப்பர், சி. பி. சுப்பையா, ஈரோடு ஈ. வெ. ராமசாமி, நாராயண அய்யர், சி. எல். இரத்தினசபாபதிமுதலியார் எம். எல். சி. சேர்மென், வி. அருணாசலம் செட்டியார் வைஸ்சேர்மென், வி. சி. வெள்ளிங்கிரி கவுண்டர், மாதவராவ், கிருஷ்ண போயன், கே. சுப்ரி முதலிய பல இந்து கனவான்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

ஆரம்பத்தில் திருச்சி மௌலானா சையத் முர்துசா சாயபு எம். எல். ஏ. மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

பிறகு வரவேற்புத்தலைவர் ஜனாப் உமர்போரா சேட் சாயபு வரவேற்பு உபன்யாசம்படித்தார். அதைத்தமிழில் ஜனாப்கள் முகம்மது யூசுப்பும், ஈரோடு ஆலீம் சாயபும் படித்தார்கள். பிறகு தலைவா ஜனாப் அப்துல் கபூர் சாயபு தலைமை உபன்யாசம் படித்தார். முதல்நாள் நடவடிக்கை முடிந்தது. மறுநாள் காலை கூட்டம் ஆரம்பமானதும் திரு ஈ. வெ. ராமசாமியை பிரதிநிதிகளுக்கு சில வார்த்தைகள் சொல்லும்படி தலைவர் கேட்டுக்கொண்டார். அந்த உபன்யாசம் மற்றொரு பக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. பிறகு

சில தீர்மானங்கள் நிறைவேறின. பிறகு திரு. சி. எல். இரத்தினசபாபதி முதலியார் அவர்களை சில வார்த்தைகள் சொல்லும்படி தலைவர் கேட்டுக்கொண்டார். அதில் முஸ்லீம்களின் நன்மைக்கு என்று செய்யப்பட்ட தீர்மானங்கள் விஷயமாய் முனிசிபாலிட்டியார், ஜில்லா போர்டாரும் ஏற்கனவே செய்த காரியங்களையும் இனியும் செய்ய இருக்கும் காரியங்களையும் எடுத்துச் சொன்னார். இது பிரதிநிதிகளுக்கு மிகவும் குதூகலத்தைக் கொடுத்தது. பிறகும் சில தீர்மானங்கள் நிறைவேறியது. சென்னை ஜனாப் யாகூப் உசேன் சேட் அவர்கள் ஒரு உபன்யாசம் செய்தார்கள். எல்லா தீர்மானங்களும் நிறைவேற்றி முடிந்ததும் திரு. ஈ. வெ. ராமசாமி ஒரு உபன்யாசம் செய்தார். பின்னால் தலைவர் முடிவுரை கூறினார். பிறகு ஜனாப் யாகூப் சாயபு வந்தனோபசாரம் கூறினார். மாலை 6 மணிக்கு மகாநாடு இனிது முடிந்தது. மாநாட்டில் நடைபெற்ற தீர்மானங்களில் முஸ்லீம்களுக்கு எலக்ஷன்களில் தனித்தொகுதியே வேண்டும் என்ற தீர்மானமே முக்கியமானது. தனித்தொகுதிதான் வேண்டும் என்பதைப்பற்றி பிரதிநிதிகளுக்கு திரு. ஈ. வெ இராமசாமி எடுத்துச்சொன்னார். கூட்டுத்தொகுதி வேண்டுமென்று ஜனாப் யாகூப்உசேன் சேட் அவர்கள் எடுத்துச்சொன்னார். கடைசியில் தீர்மானம் ஏகமனதாய் பெரிய கரகோஷத்தினிடையே நிறைவேறிற்று. இத்தீர்மான விஷயத்தில் கடைசிவரை மகாநாட்டில் உள்ள யாவருக்கும் தலைவர் காரியதரிசிகள் உள்பட கவலையாகவே இருந்தார்கள். மற்றும் ஒரு நாள் ஒத்திப்போடவும் முயற்சித்தார்கள். ஆனாலும் ஒரு ஓட்டுகூட விரோதமில்லாமல் ஏகமனதாகவே நிறைவேறிவிட்டது.

மற்ற தீர்மானங்கள்:—

1. முடிவெய்திய தலைவர்களுக்கு அனுதாபம்.

2. சாம்பியன் ரிபோர்ட்டை அமுலுக்கு கொண்டுவரக்கூடாது.

3. முஸ்லீம்களுக்கென்றே தனிப்பட்ட ஹைஸ்கூல்கள் வேண்டும்.

4. முஸ்லீம்களுக்கு தனிபோதனுமுறைபாடசாலை வேண்டும்.

5. முஸ்லீம் சமூகத்திற்கு தனிக்கல்வி ஏற்படுத்தவேண்டும்.

6. காலேஜ்களிலும், ஹைஸ்கூலிலும் உருதுகற்றுக் கொடுக்கவேண்டும்.

7. முஸ்லீம்களுக்கு பள்ளிக்கூடங்களில் மதக்கல்வியும் பெண்களுக்குப் பள்ளிக்கூடம் போகவண்டியும் வேண்டும்.

8. முஸ்லீம் சிறுவர்களுக்கு ஒரு கைத்தொழில் பாடசாலை வேண்டும்.

9. முஸ்லீம்களுக்கு உபகார சம்பளநிதி வேண்டும்.

10. இட்டாலிசரக்குகளை பகிஷ்காரம் செய்யவேண்டும்.

11. முஸ்லீம்களுக்கு தனித்தொகுதியே வேண்டும்.

12. முஸ்லீம் மத தர்ம பரிபாலன சட்டம் வேண்டும்.

13. முஸ்லீம் சபை ஸ்தாபிக்க வேண்டும்.

14. முஸ்லீம்களுக்காக கூட்டுறவு சங்கம் வேண்டும்.

15. மாப்பிள்ளை கைதிகளை விடுதலை செய்யவேண்டும்

16. சிறைசாலைக்கு முஸ்லீம்களையும் விசிட்டர்களாக நியமிக்கவேண்டும்.

17. சுதேசி ஆடைகளைவாங்க வேண்டும்.

18. ஜில்லா போர்டு, முனிசிபாலிடி ஆகியவைகளில் முறையே ஒவ்வொன்றிலும் 4 ஸ்தானங்கள் கொடுக்கவேண்டும்.

19. கோயமுத்தூரில் ஒரு யூனானி வைத்தியசாலை வேண்டும்.

என்கின்ற தீர்மானங்களாகும். ஜில்லாபோர்டுகள் பிரசிடெண்டுக்கும் மற்றவர்களுக்கும் நன்றிசெலுத்தி மாலைகள் சூட்டப்பட்டது.

டீபார்ட்டி நடந்தது. அதில் சுமார் 250 பேர்கள் கலந்துகொண்டார்கள். ஆங்கிலமுறைப்படியும், நாட்டு முறைப்படியும் வெகு அன்புடனும் சேட் அவர்கள் டீபார்ட்டி நடத்தியது குறிப்பிடத்தக்கது. சுயமரியாதைப் பாட்டுகள் பாடப்பட்டது. அன்று மாலை திரு ஈ. வெ. ரா. முதலியவர்கள் ஊருக்குப்போய்விட்டார்கள்.

ஏன் தோல்வி அடைந்தேன்?

மதுரையில் கூடிய தமிழ்நாடு கான்பரன்சில் கதர் தீர்மானம் தோல்வியடைந்ததின் காரணம் அநேகருக்குத்தெரியாது என்றே நினைக்கின்றேன். கதர் ஸ்தாபனத்தைக் கண்டிக்கும் தீர்மானம் வந்தவுடன் விஷயாலோசனைக்கமிட்டியிலேயே மக்கள் காட்டிய ஆரவாரத்திற்கு அளவேயில்லை. ஆனால் அங்கிருந்த முக்கிய பார்ப்பனத்தலைவர்கள் இவ்விஷயத்தைப் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் விஷயமாகச் செய்து விட்டதினால பார்ப்பனர்கள் எல்லோருமே இத்தீர்மானத்தை ஒழிக்க சூட்சி செய்து விட்டார்கள். பார்ப்பனரல்லாத பிரதிநிதிகள் திரு. முத்துரங்க முதலியார் அவரது மருமகன் ஆகிய இரண்டொருவர் அதுவும் பார்ப்பன தாட்சண்ணியத்திற்குப் பயப்பட்டுக் தீரவேண்டியவர்கள் போக மற்றவர்கள் எல்லோருமே கதர் ஸ்தாபனத்திற்கு எதிராகவேயிருந்தார்கள். ஏனெனில் அவர்களில் பலர் "கதர் திட்டமே புரட்டாயிருக்க கதர் ஸ்தாபனத்தில் இவ்விதக் கொடுமை இருப்பது சகிக்க முடியாதது" என்றே சொன்னார்கள். எவ்வளவு சூட்சிகள் செய்தும் கதர் ஸ்தாபனத்தை அகில பாரத சர்க்கா சங்கத்தைக் கண்டிக்கும் தன்மையும் வகுப்புவாரி உரிமையும் கொண்ட தீர்மானம் விஷயாலோசனைக் கமிட்டியில் பாசானவுடன் திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் பட்டபாட்டுக்கு அளவேயில்லை. அவர் தனது ஆயுள் காலத்தில் இதுவரை இப்படிப்பட்ட கஷ்டப்பட்டேயிருக்கமாட்டார்.

இதைப் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் விஷயமாக்கினதாலும் இது நிறைவேறினால் மகாத்மா காந்தி பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் செய்தது போலாகிவிடும் என்று சொன்னதினாலும், சுயமரியாதை இயக்கம் தலை நிமிர்ந்து விடும் என்று பிரசாரம் செய்ததாலும், இவ்வளவும் செய்தும் பயன்படவில்லையே என்று சந்தேகித்து கதர் ஸ்தாபனங்களிலிருக்கும் ஆட்களைமிரட்டியும், நயந்தும், பிரமோஷன் ஜாடை காட்டியும் அவர்களில் சிலரைத் தங்கள் பக்கத்திற்கும் சிலரைப் பங்கெடுக்காமல் இருக்கும்படி செய்தும் பிரசிடெண்ட். சத்திய மூர்த்தியிடம் திரு. ராஜகோபாலாச்சாரியார் சரணாகதி அடைந்தும் அத்தீர்மானம் தோற்கச்செய்யப்பட்டது. என்றாலும் இத்தீர்மானத்தின் தோல்வியானது வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தின் அவசியம் பார்ப்பனரல்லாத பிரதி நிதிகள் எல்லோராலும் உணரப்பட்டுவிட்டது. பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் உணர்ச்சியை வலுக்கச் செய்துவிட்டது.

இத்தீர்மானம் சில ஓட்டுகளால்தோற்றுப்போனதாகச் சொல்லியும் பார்ப்பனருக்குச் சிறிதும் சந்தோஷமேயில்லை. ஏனெனில் பிரசிடெண்டின் சூக்ஷியால் தோற்றுப்போனதாக சொல்லப்பட்டதே ஒழிய உண்மையில் தோற்றுப்போகவில்லை என்று அவர்களே நம்பினார்கள்.

இதன் காரணமாகவே சில தொண்டர்கள் வேறு கிலகிளர்ச்சி செய்யப்போகின்றார்கள்.

"தீர்மானத்தில் கலந்திருந்தவன்"

வருஷ மீ உமாறுதல்.

1934ம் வருஷம் முதல் எல்லாமாதத்திற்கும் 28தேதிகள். வருஷத்திற்கு 13 மாதங்கள் ஆகவும் ஒவ்வொரு மாதமும் முதல்தேதி ஞாயிற்றுக்கிழமையாகவும் இருக்குமாம். வருஷத்தில் உள்ள மொத்தம் 365நாளில் மீதிப்படும் ஒருநாளை "வருஷதினம்" என்னும் பெயரால் உலக விடுமுறை நாளாக்கப்படும். "லோகோபகாரி"

(லண்டன் டெய்லி எக்ஸ் பிரஸ்)

குடி அரசு

ஈரோடு 1931௵ ஜூன்௴ 21உ

திரு. காந்தியின் உண்மைத் தோற்றம்.

தொழிலாளர்களுக்கு எச்சரிக்கை.

உயர்திரு. காந்தியவர்கள் மக்கள் கள்ளு, சாராயம் குடிக்கப்படவேண்டியதின் உண்மையான அவசியத்தைப்பற்றியும், அதை எப்படி, எப்போது நிறுத்தமுடியுமென்பதைப்பற்றியும், மற்றும் தான் கேட்கும் சுயராஜியத்தின் தத்துவத்தைப் பற்றியும் தமது அபிப்பிராயத்தை விளக்கமாக வெளியிட்டிருக்கிறார்.

இந்த அபிப்பிராயங்களை அவர் பரோடா சமஸ்தானத்திற்கு இம்மாதம் 12-ந்தேதி திருவாளர்கள் வல்லப ராய் பட்டேல், அப்துல் கபூர்கான் ஆகியவர்களுடன் சென்றபொழுது அங்குள்ள மக்கள் அளித்த வரவேற்புக்குப் பதில் சொன்ன முறையில் வெளியிடப்பட்டதாகும். அதாவது,

"கதரில்லாமல் வெறும் மதுவிலக்கு ஒரு நாளும் வெற்றிபெறாது

2. கள்ளு, சாராயக் கடைகளை மூடிவிடுவது நம்முடைய வேலையல்ல.

3. குடிகாரர்கள் தாங்கள் குடிக்கும் பழக்கத்தை அவர்களாகவே விட்டுவிட்டாலொழிய, திருட்டுத் தனமாய் கள், சாராயம் உற்பத்திசெய்து, எப்படியாவது குடித்துத்தான் தீருவார்கள்.

4. கள்ளு, சாராயக் கடைகள் மூடப்பட்டுவிட்டாலும், இப்பொழுதிருப்பது போலவே திருட்டுத்தனமாய் கள்ளு, சாரயம் விற்பனையாகிக்கொண்டு தானிருக்கும்.

5, குடி வழக்கம் நிற்க வேண்டுமென்றால் குடிகாரர்களுக்குக் கைத்தொழில் கற்றுக்கொடுத்தால்தான் நிறுத்தமுடியும். இல்லையாகில் அவர்கள் தாங்கள் குடிக்கும் வழககத்தை ஒரு நாளும் விடமாட்டார்கள்.

6. பெரிய தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்குத் தங்களது களைப்பையும், ஆயாசத்தையும் தீர்த்துக்கொள்ள மதுபானம் வேண்டியதாயிருக்கிறது.

7. நான் தென்னாப்பிரிக்காவிலிருந்தபொழுதும், வேலைசெய்து களைத்துப் போனவர்களுக்கு வெகு அன்புடன் சாராய வகைகள் வாங்கிக் கொடுத்து வந்திருக்கிறேன்.

8. அங்கு (தென்னாப்பிரிக்காவில்) என்னுடன் இருந்த கூலிகளுக்கும் அவர்கள் சாராயம் கேட்டபொழுதெல்லாம் நானே கடைக்குப் போய் சாராய வகைகளை வாங்கி வந்து பிரியமாகக் கொடுத்திருக்கிறேன்.

9. மிருகங்களைப்போல் வேலை செய்யும் உழைப்பாளிகளுக்கு மதுபானங்கள் அவசியமாய் வேண்டியிருக்கிறது.

10 தங்கள், தங்கள் வீடுகளிலேயே ஏதாவது ஒரு தொழில் செய்கின்றதொழிலாளிகள் தான் எளிதிற்குடியை விட்டுவிட முடியும்.''

என்று பேசிவிட்டுத் தனது சுயராஜியத் திட்டத்தைப் பற்றி பேசியிருப்பதாவது.

குடிசைத் தொழில்.

"கிராம வாசிகளுக்கு அவர்கள் தங்கள் வீட்டிலேயே கை இராட்டினத்தால் நூல் நூற்றல், தரிபோட்டு நெசவு நெய்தல், செருப்புத் தைத்தல், பால், தயிர், வெண்ணை ஆகியவைகளைச் செய்தல், மற்று மிதுபோன்ற வேலைகளை மீண்டும் புதுப்பிப்பதின் மூலமே கிராமஜனங்களைச் செல்வவான்களாக்கவேண்டும்.

2. இந்தத் தொழிலால் வரும் வரும்படியே அவர்களுககுப் போதுமானது.

3. மற்றபடி இவர்கள் பம்பாய் வர்த்தகர்களைப் போல பெரும், பெரும் பணக்காரர்களாக இருக்கவேண்டியதில்லை.

4. அவர்களது பணப்பெட்டிகளில் வெள்ளி நாணயங்கள் கொஞ்சமாகவே இருக்கவேண்டும்.

5. இதுதான் சுயராஜிய வேலைத் திட்டமாகும்.

6. சென்ற வருடம் நாம் செய்தவேலை இந்த சுயராஜியத்திற்கு அஸ்திவாரமானது" என்று பேசியிருக்கிறார்.

இந்த விபரங்கள் இம்மாதம் 13-ந்தேதி வெளியிடப்பட்ட, தினசரிப் பத்திரிகைகளாகிய "சுதேசமித்திரன்" 5வது பக்கம் 2வது கலத்திலும், "திராவிடன்"4வது பக்கம் 3வது கலத்திலும், 12-ந்தேதி "தமிழ்நாடு" 8வது பக்கம் 4வது கலத்திலும், 12-ந்தேதி "ஹிந்து" 8வது பக்கம் 2வது கலத்திலும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

ஆகவே, திரு. காந்தி அவர்கள் கள்ளு, சாராயம் குடிப்பவர்களின் அனுபவத்தைச் சொல்லி அதை யொழிக்கக் கண்டு பிடித்திருக்கும் திட்டங்களென்னவென்றால் "பெரிய தொழிற் சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தங்கள், தங்கள் களைப்பையும், ஆயாசத்தையும் போக்கிக்கொள்வதற்கு அவர்கள் கள், சாராயம்குடித்துத் தானகவேண்டும்—குடித்துத்தான் தீருவார்களென்பதோடு, அவர்களுக்கது வேண்டியதாகவு மிருக்கின்றது" என்பதாகவும் முடிவுகட்டி, தொழில் செய்து களைப்படைந்த மக்களுக்குத் தானே சாராயமும், வாங்கி நேரிலேயே கொடுத்திருப்பதாகத் தனது சுய அனுபோகத்தையும் சொல்லியிருக்கிறார்.

இந்தப்படி இவர் சொல்லுவதில் நமக்கு இப்பொழுது ஆக்ஷேபனையில்லை. ஆனால் கள்ளை நிறுத்துவதின் தத்துவமிப்படி யிருக்கையில் இப்பொழுது தொண்டர்களென்பவர்களை ஏவி விட்டு, கள்ளு சாராயக கடைகளண்டைப்போய் நின்றுகொண்டு, மறியல் செய்யும்படி சொல்லுவது எதை யுத்தேசித்து என்று தான்கேட்கின்றோம்.

"குழந்தைகளிடம் பிரியமிருப்பவர்களுக்கு அக்குழந்தைகளது மலத்தினிடமும் அசிங்கம் தோன்றுவதில்லை" என்பதுபோல் மகாத்மாவிடமிருக்கும்--இருந்து தீரவேண்டிய "பக்தி"யினால்,சில தொண்டர்களவரது வார்த்தைகளின் யோக்கியதையையே உணரமுடியாமல் போக வேண்டியவர்களாகி விடுகிறார்கள்.

மதுவிலக்கு செய்வதானது மக்கள் ஒழுக்கத்தையும், சன்மார்க்கத்தையு முத்தேசித்தேயொழிய, அரசியல் காரணங்களுக்காகவல்லவென்று திரு. காந்தியாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அப்படி யிருக்க இப்போது செய்யப்படும் கள்ளுக்கடை மறியலானது சன்மார்க்கத்திற்கு அதாவது மக்களை கள், சாராயக் குடியிலிருந்து விலக்குவதற்கு அடியோடு பயன்படாதென்று மனதாரத் தெரிந்த பிறகும் கள்ளுக் கடை மறியல்களெதற்காக நடை பெறச்செய்து வருகின்றன? என்பது ஒவ்வொருவரும் முக்கியமாய் யோசித்துப்பார்க்கவேண்டியவேலையாகும்.

இது ஒரு புறமிருக்க, குடியொழிப்பதென்கின்ற காரணத்தின்பேரில் திரு காந்தியவர்கள் சொல்லும் மற்றொரு யோசனை எவ்வளவு மோசமானதாக யிருக்கின்றது என்பதையும் பொதுமக்களுணரவேண்டுமென்று விரும்புகின்றோம்.

அஃதென்னவெனில்,ஒருதொழிலாளி இயந்திரத் தொழிற்சாலையில் வேலை செய்தால் அவனுக்கு அதிக களைப்பும், ஆயாசமுமேற்படுமென்றும், அப்போது அவ்வாயாசத்தைத் தீர்த்துக்கொள்ள அவனுக்குக் கள்ளு, சாராயம் அவசியமாகத் தானிருக்குமென்றும், இதற்கு மறியல் செய்வதால் பலன் ஏற்படாதென்றும், ஒவ்வொருவனும் அவனவன் வீட்டிலேயே ஏதாவதொரு தொழிலைச் செய்தால்தான் அவனுக்குக் களைப்பு இருக்க முடியாதென்றும், அப்பொழுதுதான் அத்தொழிலாளி குடிக்காமலிருக்க முடியுமென்றும் சொல்லுகிறார்.

இது, தொழிலாளர் ஒரு பக்கம் சேர்ந்து வேலை செய்ய ஆரம்பித்தால் அவர்களொன்றுகூடி முதலாளிகளுக்குக் காபத்தையுண்டாக்கி விடுவார்களென்றும், தொழிலாளிகள் சங்கமுடைய நிலைமையை யுயர்த்திக்கொள்ள யோசனை செய்து,தொழிலாளித் தன்மையை ஒழித்துவிடுவார்களென்றும் பயந்துகொண்டு, முதலாளிகளுக் கனுகூலமாகவும், தொழிலாளிகளின் முன்னேற்றத்திற்கு விரோதமாகவும், அதாவது வருணாச்சிரமத்தைப் பிரசாரம் செய்யும் சூட்சித்திட்டமே தவிர, மற்றெவ்வித நியாயமோ, நாணயமோ இதிலிருப்பதாக நினைகக முடிகின்றதா? என்று கேட்கின்றோம்.

ஏனெனில், இன்றைய தினம் கைத்தொழிலாளிகளென்பவர்கள், அதுவுமவரவர்கள் வீடுகளிலிருந்துகொண்டு. சொந்தத்திலேயே ஒரு தொழில் செய்பவர்களென்பவர்கள் 100க்கு 90 பெயாகள் குடிகாரராகவே யிருக்கிறார்கள். உதாரணமாக நெசவுத்

தொழிலிலீடுபட்ட, தங்களைப் பிராமணர்களென்று சொல்லிக் கொள்ளுபவர்கள் முதற்கொண்டு சகல வகுப்பாரும் 100க்கு 75 பெயர்கள் குடிகாரர்களாகவே தானிருக்கிறார்கள். உதாரணமாக மதுரை, சேலம், கோயமுத்தூர் முதலாகிய ஜில்லாக்களைப் பார்த்தாலே இவ்வுண்மையை யாவருமெளிதிலறியலாம். மற்றும்,

கொல்லுவேலை, தச்சுவேலை, தட்டாரவேலை, சித்திரவேலை, கொத்துவேலை, கொல்லத்துவேலை, கருங்கல் கட்டடவேலை, தோல் பதனிடும்வேலை, மற்றும் செருப்புத்தைக்கும்வேலை முதலாகிய வீட்டுத்தொழிலாளிகளும் பெரும்பாலும் குடிகாரர்களாகவேயிருக்கிறார்கள் அப்படிப்பட்டத்தொழிலாளிகளையும், "நீங்கள் ஏன் குடிக்கின்றீர்கள்?" என்றுகாரணம்கேட்டால் திரு. காந்தியவர்கள் சொல்லும் சமாதானத்தையே தான் அவர்களும் சொல்லுகிறார்கள். அதாவது, "பாடுபட்டு உழைப்பவனுக்கு ஏதாவது பரிகாரம் வேண்டாமா?" வென்று தான் சொல்லுகின்றார்கள்.

தவிரவும், தொழிற்சாலை தொழிலாளிகளைவிட இந்தமாதிரியான தொழிலாளிகளுக்குத் தான் குடிப்பதற்கு சௌகரியமு மதிகமேற்படுகின்றது. எப்படியெனில், அன்றாடகமிவர்கள் கைகளுக்குக் காசு கிடைக்கின்றது. இவர்களிஷ்டம் போல் குடித்துவிட்டுத்திரிய நேரமும் கிடைக்கின்றது ஆகவே "குடிசைத் தொழிலாளிகள் குடிக்கமாட்டார்கள்" என்றும், "குடியை சீக்கிரம் விட்டுவிட முடியு"மென்றும் திரு. காந்தி அவர்கள் சொல்லுவது அவ்வளவு நியாயமும், பொறுத்தமுமான வார்த்தைகளாகுமாயென்பதை யோசித்துப் பார்க்கும்படி விரும்புகின்றோம்.

அன்றியும் திரு. காந்தி அவர்கள் மதுவிலக்குக்கும், கதர் பிரசாரம் அவசியம் என்று ஒரு புதிய சம்பந்தத்தை ஏற்படுத்துகின்றார். அதாவது "கதரைப் பரப்பாமல் குடியை நிறுத்த முடியா" தென்கிறார். இது "ஆடி அமாவாசைக்கும், அப்துல் காதருக்குமுள்ள சம்பந்தம்" போலவேயிருக்கின்றது.

எந்தக் கருத்திலிவ்விரண்டையுமொன்றுக்கிப் பேசுகிறாரென்பது நமக்கு விளங்கவில்லை. ஒரு சமயம் கதர் பரவினால் தொழிலாளிகளுக்கு வரும்படி கிடைக்காது, ஆதலால் குடிப்பதற்கு அவர்களுக்குக் காசில்லாமல் போவதன்மூலம் குடி நின்றுவிடுமென்று கருதி, இப்படிச் சொல்லியிருந்தா லிருக்கலாமேயொழிய மற்றபடி வேறு நியாயம் இருப்பதாகக் காணமுடியாது. ஆனாலும் கதர் பரவியிருக்கும் திருப்பூரில்தான் குடிகாரர்கள் மறியல் செய்பவர்களை யுதைத்து, காந்திக்கும் கொடும்பாவி கட்டி இழுத்ததுடன், அதற்குக் கள்ளு அபிஷேகமும் செய்தார்கள் என்று தெரியவருகிறது. இது எப்படியோ இருக்கட்டும்.

திரு. காந்தி அவர்களிஷ்டப்படியே பார்த்தாலும், கதர் பரவாமலிருக்கும்போது ஏன் குடி நிறுத்தும் வேலையை (மறியலை)ச்செய்கிறாரென்பது நமக்கு விளங்கவில்லை.

"கடை மூடப்படுவதனால் குடி நின்றுவிடா"தென்று தெரிந்தும் காங்கிரசுக்காரர்களால் ஏன் கள்ளுக்கடைகளின்முன் மறியல் செய்து, கலகமுண்டாக்கப் படுகின்றதென்பதும் நமக்கு விளங்கவில்லை.

சர்க்கார் சட்டம்செய்து, கள்ளு, சாரய முற்பத்தியும், விற்பனையும் நிறுத்தப்பட்டு விட்டாலும், மற்ற மக்களால் "திருட்டுத்தனமா யுற்பத்திசெய்து, இப்போதைய அளவே திருட்டுத்தனமாய் விற்கப்பட்டுதான் வரு"மென்று தெரிந்தும், சர்க்காரானைக் குற்றம்சொல்லுவதையே மதுவிலக்குப் பிரசாரமாய் ஏன் செய்யப்படுகிறதென்பது நமக்கு விளங்கவில்லை.

'வேலை செய்து களைத்துப் போன தொழிலாளிக்கு களைப்புதீரக் கள்ளு, சாராயம் வேண்டியதுதா"னென்று தெரிந்துமிதை யுண்மையாகவே நம்பியும் தானே அதாவது திரு. காந்தியவர்களே தொழிலாளிகளுக்குக் கள்ளு,சாராயம் முதலியவைகளை வாங்கிக்கொடுத்து, அதன் மூலமாயவர்களுடைய களைப்பையுமாயாசத்தையும் தீர்த்திருந்தும்,எதற்காகத்தொழிலாளிகள் குடிக்கப்போகும் இடங்களில் தொண்டர்களை நிறுத்தி மறியல் செய்யச் செய்கிறாரென்பதும், தொண்டர்களை அடிபடச் செய்கிறாரென்பதும் நமக்குப் புரியவில்லை.

இந்த அபிப்பிராயங்களையேதான் சென்ற வாரம் "தமிழ் நாடு" பத்திரிகையில் திரு. வரதராஜுலுநாயுடுவும் மெழுதியிருந்தார். மந்திரிகளானவர்களுமிதையேத் தான் சொல்லுகின்றார்கள். பிரத்தியக்ஷ அனுபவத்திலுமிப்படித்தான் காணப்படுகின்றது. மற்றபடி இதிலுள்ள வித்தியாசமெல்லாம் மேற்கண்டவர்கள் முன்னாலேயே சொல்லிவிட்டார்கள். ஆனால், திரு. காந்தியவர்கள் இம்மாதம் 12-ம் தேதி தானிதைச் சொன்னாரென்பதைத் தவிர்த்து, வேறு வித்தியாசமில்லை.

அன்றியும், மற்றவர்கள் இவ்விஷயத்தில் வாயில் சொல்லுவதுபோல் செய்கையிலும் செய்கின்றார்கள். திரு. காந்தியோ தான் சொல்லுவதற்கும், தான் செய்யச் செய்வதற்கும்பொறுத்தமில்லாமல் நடந்து கொள்ளுகிறாரென்பதுதான் வித்தியாசமாகும்.

ஆகவே மதுவிலக்கு மறியல் விஷயத்தில் திரு. காந்தியவர்களிடந்தானிந்தப்படி வித்தியாசமிருந்தாலும், மறியல் செய்யும் தொண்டர்களுக்காவது பகுத்தறிவில்லையா? அல்லது சுதந்திரவுணர்ச்சியில்லையா? அல்லது தங்களபிப்பிராயத்திற்கு மதிப்பில்லையா? அல்லது வேறு வழி இல்லையா? என்று கேட்கின்றோம்.

காந்தி சுயராஜியம்.

மறியல் விஷயமிப்படியிருக்க, இனித் திரு. காந்தியவர்களின் சுயாராஜியத்தில் தொழிலாளர்களின் — கிராமங்களின் நிலைமையென்னவென்று பார்ப்போமானால், பரோடா ராஜ்யத்தில் பேசின மேற்கண்ட வாசகங்களின் பிற்பகுதியில் குடிசைத் தொழிலாகக் கிராமவாசிகள் "கை இராட்டினத்தில் நூல் நூற்க வேண்டியது"

"கைத்தறியில் நெசவு நெய்யவேண்டியது,"

"ஆடு, மாடுவாங்கி மேய்த்துப் பால், தயிர்,வெண்ணை ஆகியவைகளை யுண்டாக்கவேண்டியது,"

"செருப்புத்தைக்க வேண்டியது," மற்றும் "இதுபோன்றதொழில்களையே செய்யவேண்டிய"தென்றுரைத்திருக்கிறார். இப்படிச் சொல்லுவதற்குக் காரணமென்னவென்றால், அவர்களுக்கு அதாவது கிராமவாசிகளுக்கு— தொழிலாளர்கள், பம்பாயிலிருப்பவர்களைப்போல் அதிகப்பணக்காரர்களாகவேண்டியதில்லையாம். ஏனென்றால், அவர்களுடைய பெட்டிகளில் கொஞ்சமாகத்தான் பணமிருக்கவேண்டுமாம். இவ்வளவும் சொல்லிவிட்டு "இதுதான் வரப்போகும் சுயராஜியத்திட்ட"மென்றும் சொல்லிவிட்டார். அன்றியும், "இதற்காகவேதான் சென்ற வருஷம் கிளர்ச்சிகள் செய்யப்பட்டு, அதற்கேற்ற விதையும்போடப்பட்டிருக்கிற"தென்பதாகவும் கூறிவிட்டார்.

"குடி அர"சை வெகு கஷ்டத்தோடு வாசிக்கும் வாசகர்களே! மற்றும், "குடிஅர"சை வெறுக்கும் காங்கிரஸ் அபிமானிகளே!! காந்தி பக்தர்களே!!! தேசிய சுயமரியாதைக் காரர்களென்று சொல்லிக் கொள்ளுபவர்களே! இந்தக்கொள்கையை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா? என்றுதான் உங்களை நாம் வெள்ளையாய்க்கேட்கின்றோம். தத்துவார்த்தம் சொல்லவராதீர்கள். உண்மை[illegible]ங்கள். கிராமவாசிகள் செருப்புத்தைக்க வேண்டுமாம்! ஆடு,மாடுகள் மே

காந்தியின் வருணாச்சிரம தர்மம்.

:0:

உயர்திரு. காந்தியவர்கள் தமது "யங் இந்தியா"வில் எழுதுவதின் குறிப்புகள்.

வருணாச்சிரம தர்மங்களில் கூறப்படும் நான்கு வருணங்களிலும் எனக்கு நம்பிக்கையுண்டு.

அந்த வருணப்பாகுபாடுகள் பரம்பரையான தொழில்களைப்பொருந்தே ஏற்பட்டவை. அதாவது பிராமணர், க்ஷத்திரியர், வைசியர்,சூத்திரர் என்பவை.

பிராமணர். கல்வி கற்பித்தல்

க்ஷத்திரியர். பகைவர்களினின்று காத்தல்.

வைசியர். வியாபாரம், விவசாயம் செய்தல்.

சூத்திரன். சரீரத்தால் உழைத்து,சொன்ன வேலை செய்தல்.

இதுதான் எனது வருணாச்சிரம முறை. இந்த முறையை இந்து சமூகம் தவறி நடக்க ஆரம்பித்ததினாலேயே வருண தர்மம் அழிந்து விட்டது. கலப்பு விவாகத்தால் நாட்டில் ஒற்றுமையும் சாந்தமும் ஏற்பட்டு விடாது.

ய்க்கவேண்டுமாம்! இராட்டினத்தில் நூல் நூற்க வேண்டுமாம்! கைத்தறியில் நெசவு நெய்யவேண்டுமாம்! ஆனால் பம்பாய் வாசிகள் கோடீஸ்வரர்களாகி, அதற்குத்தகுந்த போக போக்கியங்களையனுபவிக்க வேண்டுமாம்! இது தான் சுயராஜ்யத்திட்டமாம்! ஆகவே இந்தப்படியான மனோ பாவங்கொண்ட திரு. காந்தியைப் "பாரத நவஜவான்" உண்மை வீரர்கள் "காந்தி ஒழிக!", "காந்தீயம் ஒழிக!!", "காங்கிரஸ் ஒழிக!!!" என்று சொன்னதிலென்ன தப்பிதமிருக்கின்றது? காந்திக்கு வேண்டுமானால், காந்தீயமொழியாதென்பதில் நம்பிக்கையிருக்கலாம். ஆனால், நமக்கு இப்படிப்பட்ட காந்தீயம் ஒழியவேண்டுமா? வேண்டாமா? ஒழியாமல் சமதர்மம் ஏற்படுமா? என்று கேட்கின்றோம். "திரு. காந்தி, இந்தியாவை வெள்ளைக்கார ஆட்சிக்கு முன்னிருந்த பழைய அதாவது ஆதிகாலத்து இந்தியாவுக்குக் கொண்டு போகப்பார்க்கின்றார்" என்று திருவாளர் பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப் அவர்கள் சொன்னதிலென்ன தப்பிதமிருக்கின்றது? என்று கேட்கின்றோம்.

ருஷியப் பொதுவுடைமைக்காரர்கள் "இந்திய கிராம வாசிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் திரு. காந்தி அவர்கள் ஒரு பெரிய துரோகி" என்றும், "காங்கிரஸ், தொழிலாளிகளுக்கும், பாமர மக்களுக்கு மேற்பட வேண்டிய முன்னேற்றத்திற்கு ஒரு பெரிய முட்டுக்கட்டை" என்றும் சொன்னதிலென்ன தப்பிதமிருக்கின்றதென்று கேட்பதுடன், நாமிதுவரை சொல்லி வந்த விஷயங்களிலெந்தவெழுத்துக்குற்றமானதென்றும் கேட்கின்றோம்.

இதைப்படிக்கின்ற காந்தி பக்தர்கள், நம்மீது காய்ந்து விழலாம். நமது குடலைப்பிடுங்கி மாலையாகப்போடவெண்ணலாம். இந்தப்படிஎழுதியதாலேயேஒரு பத்து சந்தாதாரர்கள் குறையலாமென்பவைகளெல்லாம் நமக்குத்தெரியும். தெரிந்தேதானெழுதுகின்றோம்.

ஆனால் நமது இலட்சியமெல்லாம், "இன்று நம்மை யாரும் "மகாத்மா" வென்றோ, "தேசபக்தன்", "தேசியத்தலைவன்", "தேசீயத் தொண்டன்" என்றோ சொல்ல வேண்டுமென்பதல்ல. நமது "குடி அரசு" பத்திரிகைக்கு 15,000 சந்தாதாரர்கள் வேண்டுமென்றஆசையுமல்ல" வென்பதை வாசகர்களுக்கு நம் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஆனால், திரு. காந்தியைப் பற்றி, காந்தீயத்தைப்பற்றி நாம் கொண்ட அபிப்பிராயம் சரியா? தப்பா? என்பதை மக்களின்னும் கொஞ்சகாலம் சென்றுவதுணர்ந்தாலும் போதும். அல்லது இந்த மக்களின் சந்ததிகளாவது உணர்ந்தாலும் போதுமென்பது ஒரு லக்ஷியமாயும், அதையுணராத மக்களால், இந்தியாவிலொருநாளும் சமதர்மக்கொள்கை ஏற்படுத்த முடியாதென்பதும் நமது முடிவாகும். கடவுளையும், மதத்தையும், வேதத்தையும், தெய்வத்தன்மை பொருந்திய பெரியார்களென்பவர்களையும் பற்றிப்பேசுவதற்கு வேண்டிய அறிவையும், தைரியத்தையும்விட, திரு. காந்தியைப்பற்றியும், காங்கிரசைப் பற்றியும் பேசுவதற்கு சற்று அதிக அறிவும், அதிக தைரியமும் வேண்டியிருக்குமென்பதாக நாம் சிறிதும் கருதவில்லை. நிற்க,

மதத்தில் பார்ப்பனன்—பறையனென்கின்ற இருபாகுபாடுகளுமொழிவதற்கு இருவருடைய கூட்டமுமொழிந்தாக வேண்டுமென்று எப்படி விரும்புகின்றோமோ, அப்படியேதான் சமூக வாழ்வு என்பதிலும், முதலாளி-தொழிலாளி யென்பதாகிய பாகுபாடுமடியோடொழிவதற்கு இருபெயரையுடைய இரு கூட்டமுமொழிந்தாக வேண்டுமென்கிறோம். ஏனென்றால், முதலாளி-தொழிலாளி என்கின்ற பதமே வைசியன்-சூத்திரன் என்று சொல்லப்படும் வருணாச்சிரம தர்மக்கொள்கைக்கு ஏற்படுத்தப்பட்டதேயாகும். வைசியன்-சூத்திரனென்பது வடமொழிப் பதங்கள். அதாவது சமஸ்கிருத வார்த்தைகள். முதலாளி-தொழிலாளியென்பது தென்மொழிப் பதங்கள். அதாவது தமிழ்வார்த்தைகள். ஆகவே, இவ்விரண்டிலும் பாஷை வித்தியாசமென்பது மாத்திரம் தவிர, கருத்து வித்தியாசமென்பது சிறிதுமில்லையென்று உறுதியாய்ச்சொல்லுவோம்.

சூத்திரனென்றால், சரீரத்தில் வேலை செய்பவன்-முதல் மூன்று பேருக்கும் தொண்டு செய்பவன்-அடிமையென்பவைகளே, அதையுண்டாக்கியவர்களின் வியாக்யானமாகும். அதுபோலவே தொழிலாளி யென்றாலும் சரீரத்தில் வேலை செய்பவன்-மற்றவர்கள் அவசியத்திற்கும், வாழ்க்கையின் தேவைக்குமே வேலை செய்யும் வேலையாள்-தொண்டனெயென்பவைகளேயாகும். அவனுக்கும் உணவுமட்டுந்தானளிக்க வேண்டும். இவனுக்கும் ஜீவனத்திற்குப் போதுமான அளவுதான் ஏதாவதுகொடுக்கவேண்டும். ஆகவே, இந்தப்பாகுபாடுகளை சனாதன மகாநாட்டிலும், ஆரியதரும பரிபாலன மகாநாட்டிலும், பிராமண மகாநாட்டிலும் பேசும்போது "மனுதர்மம்," "வருணாச்சிரம பாது காப்பு" ஆகிவிடுகின்றது. இவைகளைவிட்டு காங்கிரஸ் மகாநாட்டிலும், அரசியல் மகாநாட்டிலும் பேசும்போது "சுயராஜியம்" "முதலாளி-தொழிலாளித்தன்மை பாதுகாப்பு" ஆகிவிடுகின்றது. ஆகவே, இரண்டு மகாநாடுகளிலும் ஒரே கருத்தின்மீதுதான், ஒரேமனப்பான்மையுள்ள மக்களால்தான் பேசப்பட்டும், தீர்மானிக்கப்பட்டும் வருணாச்சிரமதர்மம் வெற்றிபெற்று வருகின்றது.

இந்தத்தருமம் வியாபார முறையில் மாத்திரமல்லாமல், விவசாய முறையிலுமிந்தக் கருத்துடனேயே தானிருந்து வருகின்றது. அதாவது, ஜமீன்தாரன், மிராசுதாரன் யென்பவர்களாகின்ற பூமிக்குச் சொந்தக்காரர்களும், விவசாயத்தொழில் செய்யும் கூலியும், அதாவது பண்ணையும்—பண்ணையாளுமாகிய இரண்டு பிரிவுகளும்கூட வைசியன்-சூத்திரனென்கின்றப் பதங்களின்-தத்துவத்தின் கருத்தேயாகும்.

அதனால்தான், வருணாச்சிரம தரும முறையில் பூமியுடையவர்களையும், வைசியவருணத்திலேயே சேர்க்கப்பட்டிருக்கின்றது. அதனாலேயேதான், திரு காந்தியும், பூமியுடையவர்களையும் அதாவது ஜமீன்தாரர்கள் முறைமையையும் காப்பாற்றப் பாடுபடுகின்றேனென்று அடிக்கடி சொல்லிவருகிறார்.

உதாரணமாக அதே 2ந்தேதி "சுதேசமித்திரன்" பத்திரிகையின் 5-வது பக்கம், 6-வது கலத்தில் "மகாத்மாவும் ஜமீன்தாரர்களும்" என்கின்ற தலைப்பின் கீழ் தனது கருத்தை விளக்கமாய் தெரிவித்திருக்கின்றார்.

அதாவது, ஜமீன்தாரர்களின் கோஷ்டியொன்று, தங்களுடைய நன்மைகளைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காக திரு காந்தி அவர்களை, இம்மாதம் 10ந்தேதி பம்பாயில் கண்டு கேட்டபொழுது "ஜமீன்தாரர்களுடைய சொத்துரிமைகளுக்குத் தீங்கிழைக்க நான் கனவிலும் கருதவில்லை" யென்று சொல்லியிருக்கின்றார்.

இதனாலேயேதான் வருணாச்சிரமதருமம், பிறவியிலானாலும் சரி, தொழில் முறைமையிலானாலும்சரி, அடியோடு ஒழிக்கப்பட்டாலொழிய சமதர்மமேற்பட முடியாதென உரைக்கின்றோம். ஆனால்; திரு காந்தியவர்களோ இந்த "வருணாச்சிரம மென்பதைத்தொழில் முறையில்தான், நான் சொல்லுகிறேன்" என்பதாகச் சொல்லிவிட்டு, உடனேயே, அதற்கடுத்தவாக்கியத்தில் "ஆனால் தொழில் முறையென்பது பரம்பரைக்கிரமமாக இருக்கவேண்டு" மென்று சொல்லிவருகின்றார். இதற்கும் காரணம் சொல்லும்பொழு , இந்தப்படி அதாவது "தொழிலானது பரம்பரைத்தொழில் முறையைக் கொண்டதாயிருந்தால் தான் உலகம் கிரமமாய் நடைபெறமுடியும். தொழிலுமொழுங்காய் நடைபெறு" மென்று சொல்லிவருகிறார்.

ஆகவே, எந்தக்காரணத்தைக் கொண்டானாலும்சரி, எந்த முறைமையிலிருப்பதானாலும் சரி, வருணாச்சிரம தருமமென்பதையடியோடொழித்தாக வேண்டியதுதான் மக்களின் முக்கியக் கடமை யாகும். வருணாச்சிரம மொழிந்த இடந்தான் விடுதலை—சமதர்ம நிலையமாகும்.

ஆதலால், முதலாளி—தொழிலாளி யென்கின்றத் தன்மை எக்காரணத்தைக்கொண்டும், எம்மாதிரியிலுமிருக்க விடக்கூடாதென்றேதான், பொது மக்களுக்கு நாம் யெடுத்துச் சொல்லுகிறோம்.

காங்கிரசில், தொழிலாளர்களுடைய யோக்கியதையுயர்த்தப் படுமென்று சொல்லுவதெல்லாம், ஒருமனிதனை "நல்ல தொழிலாளியாயிருக்கச்செய்யப்படு' மென்று சொல்லுவதுபோல் தானேயொழிய, வேறில்லை.

தொழிலாளிகள் என்று ஒரு தனி வகுப்பு இருக்கும்படி செய்து, அவர்களுக்கு எவ்வளவுதான் உயர்ந்தநிலைமை ஏற்படுத்திக்கொடுத்தாலும், அந்த நிலைமையிலும் சரீரப்பாடு படுவதொரு கூட்டமாகவும், அதன் பயனையடைவது மற்றொரு கூட்டமாகவுமிருக்கத் தக்கப் பாகுபாடுகளிருக்கின்றதா? இல்லையா? என்றுதான் கேட்கின்றோம். "நாட்டுக்கு நல்லதுரை வந்தாலும், தோட்டிக்குப் புல் சுமக்கும் வேலை மட்டும் போகா" தென்பதுபோல், இந்தத்திட்ட மடியோடு மாறவில்லையானால் எந்த ஆக்ஷி வந்துதானென்ன பயன்? யாரைத்தான் இந்த நாட்டை விட்டு விறட்டி என்ன பயன்? என்று கேட்கின்றோம்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

"ஒவ்வொருவருடைய உரிமைகளும் பாதுகாக்கபடு" மென்கின்ற சுயராஜ்யத்திட்டமே சூதும், வஞ்சகமும் நிறைந்ததும், கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களின் கழுத்துக்குச் சுருக்குப் போடும் திட்டமாகுமேயல்லாமல் எந்தவிதத்திலும் சுருக்கைத்தளர்த்தும் திட்டமாகாது. ஊரார் உழைப்பில் வாழ்ந்துகொண்டிருப்பவர்களுக்கு இப்போதுள்ள பாத்தியதைகள் சிறிதாவது மாறக்கூடியதுமாகாது.

ஆகையால், ஆங்காங்குள்ள அறிவுள்ள மக்கள், பொது ஜனங்களுக்கும், இந்த அபிப்பிராயங்களை தைரியமாய் வெளியில் எடுத்துச் சொல்லவேண்டும். மறியலைக் கண்டு மக்களேமாந்துபோகாமல், அதிலுள்ள முரண்பாடுகளையும், புரட்டுகளையும், உள்ளெண்ணங்களையும தைரியமாய் வெளியாக்கவேண்டியது மிக்க அவசியமாகும்.

அதாவது, ஒவ்வொரு ஊரிலும் தைரியமாய்க் கூட்டங்கள் போட்டோ, அல்லது துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்தோ இவ்விஷயங்களைப் பரப்பவேண்டும். விவரங்களறியாப் பாமர மக்கள் 'கள்ளுக்கடைக்காரனுக்கனுகூலக்கார'' னென்றோ, "சர்க்காராருக்கனுகூலக்கார" னென்றோ, தங்களைச் சொல்லுவார்களென்று யாரும் பயந்து கொள்ளக்கூடாது. சொன்னால் சொல்லிக்கொண்டு போகட்டும. அதற்காக, நமது கடமையை நாம் விட்டு விடக்கூடாது. இந்த இருபதாவது நூற்றாண்டில், அதுவும மேல் நாடுகளிலெல்லாம் தொழில் முறையிலும் வருணாச்சிரம தர்மதத்துவமடியோடொழிந்து வருமிக்காலத்தில் இந்த நாட்டில், வருணாச்சிரம தருமம் பரம்பரை முறையில் இருந்துவர முயற்சிகள் நடப்பதென்றால இந்நாட்டு மக்களின் கேவலமான நிலைமைக்கும், முட்டாள்தனத்திற்கும் வேறு அத்தாக்ஷியே வேண்டியதில்லை.

கடைசியாக ஒரு வார்த்தை, அதென்னவென்றால், தொழிலாள சகோதரர்களும தொழிலாளிகளிட மனுதாபமுள்ளவர்களென்பவர்களுமெந்த விதத்திலிந்தக்காங்கிரசையும், காந்தீயத்தையுமாதரிக்கின்றார்களென்பதுதான் நமக்கு ஆச்சரியமாயிருக்கின்றது.

தொழிலாளர்கள் காங்கிரசையும், காந்தியத்தையுமாதரிப்பதும், அவைகளுக்கனுசரணையாயிருப்பதுமென்பது "உதைக்கின்ற கால்களுக்கு முத்தம கொடுப்பதை"யே யொக்கும்.

தொழிலாளிகள் ; எதாகிலும் தங்களுடைய நிலைமையை உயர்த்திக்கொள்ள வேண்டுமானால் இதுதான் அவர்களுக்குத் தக்க சமய மென்பதை ஞாபகப்படுத்துகின்றோம்.

இந்தத்தொழிலாளிகளொன்றுகூடி, தொழிலாளர்களென்பதாக ஒரு பிரிவோ, அல்லது அவர்களுக்கென்று ஒரு தனி சட்டமோ யில்லாமலிருக்கவும் பார்த்துக்கொள்ளவேண்டியக் குறிப்பை மனதில் வைத்தே, வேலை செய்யவேண்டு மென்பதையும் குறிப்பிட்டுவிட்டு, இதை முடித்துக்கொள்ளுகின்றோம்.

சுயமரியாதை உதயம்.

பெண்கள் சுதந்திரம்.

சொத்து உரிமை.

மைசூர் சமஸ் தானத்தில் பெண்மக்களுக்கு சொத்து உரிமை அதாவது தகப்பன் சொத்தில் பெண்களும் பங்குபெறவும் சொத்துக்களை வைத்து சுதந்திரமாய் அனுபவிக்கவும் உரிமை பெற்றுவிட்டார்கள்.

கல்யாண ரத்து.

பரோடா சமஸ்தானத்தில் ஆணும் பெண்ணும் கல்யாண ரத்துசெய்து விலகிக்கொள்ள சட்டம் கொண்டுவர அனுமதிக்கப்பட்டாய் விட்டது.

அதாவது, தம்பதிகளில் ஆணோ பெண்ணோ 7வருஷகாலம் இருக்குமிடம் தெரியாமல் பிரிந்து இருந்தாலும், வேறுமதத்தை தழுவிக் கொள்வதால் இஷ்டமில்லாவிட்டாலும், சன்னியாசியாகிவிட்டாலும், 3வருஷகாலம் ஒற்றுமையின்றி சதா குடும்பத்தில் சண்டிப்பாயிருந்தாலும், வேண்டாம் என்று பிரிந்துபோய் விட்டாலோ, குடியில் மூழ்கினவர்களாயிருந்தாலோ, சதா பிறர் மீது காதலுள்ளவர்களாக இருந்தாலோ ஆகிய காரணங்களால் துன்பப்படும் புருஷனோ மனைவியோ தங்கள் விவாகங்களை சட்டமூலம் ரத்து செய்து கொள்ளலாம்.

மற்றும் கல்யாணமாகும் சமயத்தில் தம்பதிகளில் யாராவது செவிடு, ஊமை, வியாதி, குருடு, பைத்தியம் ஆகியவைகள் இருந்ததாகவோ அல்லது மைனராக இருந்ததாகவோ தெரியவந்தாலும் இஷடப்படாதவர்கள் தன்னை கல்யாணபந்தத்தில் இருந்து விலக்கிக் கொள்ளலாம். இந்தப்படி விலக்கிக்கொண்ட 6மாதம் பொருத்து அவரவர்கள் இஷ்டப்படி வேறு கல்யாணம் செய்து கொள்ளலாம்.

மைசூரில் கல்யாண வயது.

மைசூர் சமஸ்தானத்தில் பெண்களுக்கு 14வயது ஆனபிறகுதான் கல்யாணம் செய்யவேண்டும் என்று சட்டம் கொண்டுவர ஏற்பாடாயிருக்கிறது.

செங்கல் பட்டுத்தீர்மானங்களை பார்த்த கனவான்கள் ஜஸ்டிஸ் பேப்பர் உள்பட, "சுயமரியாதை இயக்கம் மத சமூகத்தைக் கட்டுத்திட்டமில்லாமல் செய்கின்றது" என்று சொல்லிக்கொண்டிருப்பவர்கள் இப்போது இந்திய சமஸ்தானங்களைப் பார்த்தாவது புத்தி பெறுவார்கள் என்றுகருதுகின்றோம்.

சுயமரியாதைச் சங்க

நிர்வாகசபை மீட்டிங்

கொடைக்கானல்.

1931-ம் வருஷம் ஜூன் மாதம் 23-ந் தேதி பிற்பகல் 2 மணிக்குக் கொடைக்கானலில் எனது பங்களாவில் சுயமரியாதைச் சங்க நிர்வாக சபை மீட்டிங் நடைபெறும். நிர்வாகசபை அங்கத்தவர் தயவுசெய்து அவசியம் வரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

W. P. A. சௌந்திரபாண்டியன்,
தலைவர்.

துருக்கியில் பெண்கள் முன்னேற்றம்.

திரைமறைவில்உரைபோட்டுக்கொண்டு இருக்கவேண்டிய பெண்கள் இன்று துருக்கியில் பிறந்ததின் பயனாய்த் திரையை அவிழ்த்துத்தள்ளிஉரையைக்கழட்டி எறிந்து விட்டதோடல்லாமல் "எங்களுக்குக்கல்யாணம் வேண்டாம். கல்யாணம் செய்துகொள்ளுவதன் மூலம் புருஷர்களுக்கு அடிமையாய் இருக்க இனி நாங்கள் சம்மதிக்கமாட்டோம்"

என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். இதோடுநிற்காமல்'எங்களுக்குஉத்தியோகம்வேண்டும்' என்றும் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். பர்தாவை—கோஷாவை—படுதாவை "மதக்கட்டளை" என்று சொல்லப்பட்ட மார்க்கத்தி பிறந்தும்—இஸ்லாம் மார்க்கத்தின் பிரமுகரான கலீபா இருந்த பிரதான நகரமாகிய துருக்கியில்பிறந்தும்துருக்கியானது கமால்பாஷாஎன்கின்ற ஒப்பற்றஒருவீரரின் ஆட்சியில் இருக்கநேர்ந்ததின் பயனாய்இன்று அப்பெண்மணிகள் "எங்களுக்கு கல்யாணம் வேண்டாம், உத்தியோகம் வேண்டும்''என்றுசொல்லக்கூடிய யோக்கியதை அடைந்து விட்டார்கள். அவ்வளவோடுமாத்திரமல்லாமல் பாங்கி முதலிய வியாபார ஸ்தலங்களிலும் அதாவது சதா பல புருஷர்கள் நடமாடும் இடங்களிலும் தங்கள் தலையைக் கத்தரித்துக்கொண்ட அழகான முஸ்லீம் பெண்கள் தாராளமாய் வேலையில் அமர்ந்திருக்கிறார்கள். மெடிக்கல் காலேஜ் (வைத்தியக்கலாசாலை) லா காலேஜ் (சட்டக்கலாசாலை) முதலிய இடங்களில் பெண்கள் அதிகமாக சேர்ந்து படிக்கிறார்கள். அவர்களில் பலர் "ஆண்கள் பலபேர் கல்யாணம் இல்லாமல் இருக்கும்போது நாங்கள் ஏன் கல்யாணம் இல்லாலாமல் இருக்கக்கூடாது?'' என்று கேட்கின்றார்களாம்.

மற்றும் பலர் "நாங்கள் கல்யாணம்செய்து கொள்ளுவதாயிருந்தால் நன்றாய்ப் பழகி சகல குணமும் தெரிய நேர்ந்த புருஷர்களைத்தான் கல்யாணம் செய்து கொள்வோம்'' என்று சொல்லுகின்றார்களாம்.

மற்றும் பலர் "நாங்கள் 40 வயது ஆனபிறகுதான் கல்யாணத்தைப் பற்றி யோசிக்கத்துடங்குவோம்'' என்று சொல்லுகின்றார்களாம். பெண்கள் முன்னேற்றம் என்னும் துறையில் துருக்கிப் பெண்கள்தான் உலகத்திற்கே வழிகாட்டிகளாக ஏற்படக்கூடும் என்றே நினைக்கின்றோம். ஆகவேஇந்தியாவில்உள்ளசகலபெண்மணிகளும்ஒன்று துருக்கிப்பெண்களைப் பின்பற்றவேண்டும். அல்லது துருக்கியில் பிறக்காததற்காக ஒப்பாரிவைத்து அழவேண்டும். இல்லையேல் மதக்கட்டளைகளுக்குத் தாங்களே (பெண்கள்) வியாக்கியானம் சொல்லப் புறப்படவேண்டும்.இம்மூன்றைத் தவிர வேறு மார்க்கம் இல்லை

சுயமரியாதை பிரசார போதனாமுறை.

ஈரோடு சுயமரியாதை பிரசார போதனாமுறைப் பள்ளிக்கூடம் ஜூலை மீ 1ந்தேதி முதல் ஆரம்பிக்கப்படும். விண்ணப்பம் போட்டிருக்கின்ற 30-பேர்களும் 1ந்தேதிஇவ்விடம் இருக்கும்படியாக பார்த்துக்கொள்ளவேண்டியது. படுக்கைகளுடன்வரவேண்டும். 1-மீ அல்லது $1\frac{1}{2}$ மாதத்திற்குஅதிகப்படாமல் இருக்க வேண்டியதாக இருக்கும். மற்றவிபரங்கள் நேரில்.

ஈ. வெ. இராமசாமி சுற்றுப்பிரயாணம்.

திரு. ஈ. வெ. இராமசாமி இம்மாதம் 20 தேதி திருப்பூருக்கடுத்த அனுப்பபாளையம், 21 தேதி ஈரோடு, 22 தேதி மதுரை ஜில்லா அத்தையன் கோட்டை, 23 தேதி கொடைக்கானல், 28தேதி கோவை ஜில்லா சென்னிமலை, 29மீ சேலம், ஜூலை 2தேதி மதுரை ஜில்லா நாகசுரபுரம், சென்று ஈரோட்டிற்கு 4தேதி திரும்பிவரக்கூடும். சுயமரியாதை பிரசார போதனா முறை கற்பிப்பதை உத்தேசித்து ஜூலை மாதம் முழுவதும் வெளியிடங்களின் அழைப்புகளுக்குச்செல்ல முடியாது.

திவான் பகதூர் C. S. R.

உயர் திரு. கோவை திவான் பகதூர் C. S. இரத்தினசபாபதி முதலியார் அவர்களது உருவப்படமானது தாராபுரம் ஹைஸ்கூலில் ஜில்லாக்கல்வி ஆபீசர் திரு. டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி அய்யரால் ஜூன் 27ந்தேதி திறந்துவைக்கப்படும். அதுசமயம் அப்பள்ளிக்கூட ஹெட்மாஸ்டராயிருந்த திரு பஞ்சாபிகேச அய்யர் உருவப்படமும் திறந்து வைக்கப்படும்.

வைசு. ஷண்முகம்.

உயர் திருவாளர் கானாடு காத்தான் வைசு, ஷண்முகம் அவர்கள் இம்மாதம் 12ந்தேதி மலாய் நாட்டுக்கு புறப்பட்டு விட்டார்.

பெண்ணுரிமை.

புருஷர்கள் பெண்களின் சொத்து.

ருஷியாவின் வடக்கே யுள்ள ஒரு நாட்டில் பெண்கள் ஆண்களை தங்கள் சொத்துக்கள் போல் பாவித்து, தங்கள் இஷ்டப்படி நடத்துகிறார்கள். பெண்கள் தங்களுக்கு வேண்டிய ஆண்களை தெரிந்தெடுத்து, கல்யாணம் செய்துகொண்டு, ஆண்களை வீட்டில் பத்திரப்படுத்தி வைப்பதுடன், அவர்கள் ஓடிவிடாமலும் பார்த்துக் கொள்ளுகிறார்களாம். பெண்களுக்குப்புருஷன் சலித்துப்போய் விட்டால் இரண்டு சாக்ஷிகளை வைத்துக்கொண்டு புருஷனைக் கூப்பிட்டு "போ வெளியில்" என்று சொன்னவுடன் ஆண் வெளியில் போய்விடுவான்.

லோகோபகாரி.

திரு. சி. இராஜகோபாலாச்சாரியாரின் பண்டையபிரசாரம்.

திருவாளர் சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் திருமங்கலத்தில் பேசும்போது,

"கனவான்களே நான் ஒருநாட்டுப்புறவாசி. உங்கள் கிராமத்தைப்பார்க்கும்போழுது பண்டைய நாட்டுப் பெருமையை பார்க்கும்படியான சின்னங்களைப்பார்க்கிறேன்"

என்று பேசியிருக்கிறார். இது 15-ந்தேதி 'இந்தியா' பத்திரிகையில் காணப்படுகிறது. ஆகவே திரு இராஜகோபாலாச்சாரியார் 2000-வருஷத்திற்கு முந்திய நிலைமையைபிரசாரம்செய்வதின்போக்கைப்பாருங்கள்! இதற்காகதானும் தன்னை ஒரு கிராமவாசி என்றுசொல்லிக்கொண்டு பண்டைய நிலைமையைப் பெருமைப்படுத்தி பேசுகிறார் ஆகவே இது சூக்ஷிமுறையில் வருணாச்சிரமதர்மபிரசாரமா? இல்லையா என்பதை யோசித்துப் பாருங்கள்.

தென்னிந்திய வர்த்தக சங்கம், சென்னை.

ஜனாப் M. ஜமால் முகம்மது சாயபு பகதூர் அவர்கள், இந்திய வர்த்தகர்களின் பிரதிநிதியாக, போட்டியின்றி டில்லி சட்டசபைக்கும், அகில இந்திய வர்த்தக சங்கத்தின் பிரசிடெண்டாகவும், நடைபெறவிருக்கும் வட்டமேஜை மகாநாட்டில் இந்திய வர்த்தகர்களினுடையவும், இந்தியக்கைத்தொழில் ஆலைகளினுடையவும் பிரதிநிதியாக, கவர்ன்மெண்டார் விரும்பும் பக்ஷத்தில் லண்டனுக்குச் செல்வதற்கும் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதால் ஜூலைமாதத்தில அன்னாருக்கு ஓர் பாராட்டு விருந்து நடத்துவதாக சங்க அங்கத்தினர்களால் நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறது. சங்கத்தின் வலிமையையும், கௌரவத்தையுமுத் தேசித்து அவரைத் தகுந்த முறையிலுபசரிக்க வேண்டியிருப்பதால், ஒவ்வொரு சங்க அங்கத்தினரும் வேண்டிய அளவு உதவிபுரிவார்களென எதிர்பார்க்கப்படுவதுடன், வெற்றிகரமாக நடைபெற உதவுவார்களெனவும் கருதப்படுகின்றது.

இட்டாலியில்கிறிஸ்துமத ஸ்தாபனங்கள் அடைக்கப்படுகின்றன.

இட்டாலி சர்க்கார் ரோமிலுள்ள ஸல்லாரோமன்கத்தோலிக்கிறிஸ்தவமத ஸ்தாபனங்களை யெல்லாம் பறிமுதல்செய்து விட்டார்கள்.

சேலம் செவ்வாய்ப் பேட்டை சுயமரியாதைச் சங்க புதுக்கட்டடத்திறப்பு விழா.

சேலம் செவ்வாய்ப்பேட்டை இரயில்வேஸ்டேஷனுக்குச் சமீபத்தில் புதிதாய்கட்டப்பட்டுள்ள சுயமரியாதைச்சங்கக்கட்டடத்திறப்பு விழா நாளது 29-6-31 தேதி உயர் திரு. ஈ. வெ. ராமசாமிப்பெரியார் அவர்களால் திறந்து வைக்கப்படும். அக்கட்டடத்தில் திரு. ஈ. வெ. இராமசாமிப்பெரியார் அவர்களுடைய திருஉருவப்படம் சென்னை அரசாங்க இரண்டாவது மந்திரி கனம். பி. டி. ராஜன் அவர்களால்திறந்துவைக்கப்படும் அவ்வமயம், திருவாளர்கள் ஆர். கே. ஷண்முகம் எம். எல். ஏ. ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனார் எம். எல். சி. காரைக்குடி சொ. முருகப்பா. எஸ். வி லிங்கம். கே. வி. அழகர்சாமி. ஸ்ரீமதி மரகதவல்லியம்மையார் முதலியோர்கள் வருவார்களென எதிர் பார்க்கப்படுகிறது. திறப்பு விழா அதிவிமரிசையாய் நடத்த எல்லா ஏற்பாடுகளும் நடந்து வருகிறது. என சேலம் சுயமரியாதை சங்கக்காரியதரிசி அறிவிக்கிறார்.

C. I. D.

திருகாந்தியின் தீண்டாமையின் திருகணிவியாக்கியானம்

உயர் திரு காந்தியவர்களை ஒரு தென்னாட்டுப்பார்ப்பனர் ஒருவர் தீண்டாமையைப்பற்றி சந்தேகம் தெரிவிக்குமாறு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். அதற்கு பதிலாக திரு காந்தி எழுதி இருப்பதில் காணும் குறிப்பாவது,

தீண்டாமை விஷயமான காங்கிரஸ் தீர்மானங்கள் இன்னும் அரசியல் திட்டத்தில் ஒன்றாகநிருவப்படவில்லை (அதாவது நான்சொல்லுவதுதானே ஒழியஇன்னமும், அரசியல் கொள்கையாக ஒப்புக்கொள்ளவில்லை. ப-ர்). அப்படி நிருவப்பட்டாலும்நீதிஸ்தலங்கள் (அதாவது கோர்ட்டுகள்) இவற்றைக்கவனித்துக்கொள்ளும். வேதங்களினுடையவும் சாஸ்திரங்களினுடையவும் கட்டளைகளை புறக்கணிக்கப்படமாட்டாது (அதாவது அவைகளுக்கு விரோதமாக ஒன்றும் செய்யப்படமாட்டாது ப-ர்) காங்கிரஸ் அமைப்பு போதுமான அளவு விரிவுள்ள தாகவே இருக்கின்றது. (அதாவது எப்படி வேண்டுமானாலும் வியாக்கியானம் செய்துகொள்ள தகுதியாகவே இருக்கின்றது ப-ர்.)

சீனாவில்பாதிரிகள்கொலை.

சீனாவில் பொது உடைமைக்காரர்கள் பாதிரிகளை கொலை செய்கிறார்கள். கோவில்களைஇடிக்கிறார்கள்.

உதிர்ந்த மலர்.

சொந்தத்தில் புத்தி இல்லாதவர்களும், சொந்தத்தில் யோக்கியதை இல்லாதவர்களும் முறையே "அவர்கள்இப்படிச் சொல்லுகிறார்கள், இவர்கள் அப்படிச்சொல்லுகிறார்கள்" என்பதாகவும் "முன்காலத்தில்இன்னயோக்கியதையில்இருந்தோம்" என்பதையுமே சொல்லிக்கொண்டு திரிவார்கள்.

ஈ. வெ. ரா.

(9ம பக்கத் தொடர்ச்சி)

லீம் கலகம் மனஸ்தாபம் அல்லது அபிப்பிராய பேதம் இல்லாத முனிசிபாலிட்டி ஒன்றைக்காட்டுங்கள். எலக்ஷன் காலத்தில் இந்து முஸ்லீம் மதத் துவேஷமே எலக்ஷன் பிரசாரமாய் இருந்ததும், இருப்பதும் எனக்கு நன்றாய்த்தெரியும். ஒரு வார்டில் ஒரு இந்துவும் ஒரு முஸ்லீமும் தேர்தலுக்கு நின்றால் இந்துவானவன் ஓட்டர்களிடம் சென்று 'துலுக்கனுக்கு ஓட்டுபோடாதே" என்பதை முதலில் சொல்லுகிறான் ஒரு முஸ்லீமானவன் "ஒரு காபிருக்கு ஓட்டுப் போடாதே" என்றுதான் சொல்லுகிறான். இப்படிச்சொல்ல பயப்படுகிற இடத்திலும்கூட "நான் ஒரு இந்துவாச்சே எனக்கு, ஓட்டுப் போடக்கூடாதா" "நான் ஒரு இஸ்லாமானவனுச்சுதே, எனக்கு ஓட்டுப் போடக்கூடாதா?" என்று கேட்பதோடு இருவர்களும் ஓட்டர்களை "நீயாருக்குப்பிறந்தவன்" என்றுகூட கேட்டுவிடுகின்றார்கள். ஆகவேகூட்டுத்தொகுதி தேர்தல்கள் மதத் துவேஷத்தையும வகுப்பு துவேஷத்தையும் கிளப்பிவிட்டுத் தீரவேண்டிய அவசிய முடையதாகவே ஆகிவிடுகின்றது. தமிழ் நாட்டில் கூட்டுத்தொகுதிகளே அநேக இடங்களில் மதத் துவேஷத்தை கிளப்பிவிட்டிருக்கின்றது. இந்து முஸ்லீம்கள் சகோதரர்கள் ஆகவேண்டுமானால் ஒற்றுமை யுடையவர்களாக வேண்டுமானால் முதலில் வெளி வேஷத்திலாவது நடை உடை பாவனைகளிலாவது ஒன்றுபோல காணப்பட இருசமூகமும ஒப்புமா என்று கேட்கின்றேன். வெளிக்குக்கூட ஒற்றுமையாக முடியாத சமூகம் பிறகு உள் அந்தரங்கத்தில் பரஸ்பரம் எப்படி ஒற்றுமையும் நம்பிக்கையும் அடைய முடியும்,? ஆகவே சகோதரர்களே! நீங்கள் தனித்தொகுதியே விரும்பி அதையே ஏகமனதாய் நிறைவேற்றிக் கொண்ட விஷயம் எனக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது இவ்வளவோடேயே நீங்கள் நின்றுவிடாமல் இதைக் கடைசிவரை கொண்டு செலுத்தி முடிவில வெற்றிபெற முனைந்துநில்லுங்கள் என்றுபேசினார்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

இந்திய மக்கட்கு முதலில் வேண்டுவது சுயமரியாதையா? சுயராஜியமா?

(பண்டிதர் திருஞான சம்பந்தர்)

நமது இந்திய நாட்டில் அரசியல் சுதந்திரத்தைக் குறித்து கிளர்ச்சி செய்யும் இயக்கங்கள் பலவாம். அவ்வியக்கங்களுள் காங்கிரஸ், முஸ்லிம் மிதவாதக் கட்சி, பிராமணரல்லாதார் கட்சி இவைகள் முதன்மையானவைகளாம். இக்கட்சிகளெல்லாம் அரசியல் ஒன்றையே பிரதானமாகக்கொண்டு தொழிலாளர் பிரச்சினைகளையும் சமூக சமய பிரச்சினைகளையும் மூடப்பழக்க வழக்கங்களின் விஷயங்களையும் சிறு விஷயங்களாகக்கொண்டு வேலைசெய்து வருகின்றன. இவ்வியக்கங்களில் காங்கிரஸ் கட்சிமட்டும் அகிம்சா தருமம் என்று சொல்லும் முறையில் சட்டமறப்பு சத்தியாக்கிரகம் அன்னியநாட்டு சாமான்களின் பகிஷ்காரம் முதலியவைகளைப் பாமர மக்களிடத்தில் காட்டி வீண் ஆடம்பரங்களோடு சர்க்காருக்கு தொல்லை விளைவிப்பது என்ற கருத்தில் மாத்திரம் செல்வாக்கைத் தேடிக்கொண்டு வருகின்றது. இதன் காரணமாய் பயனற்ற காந்தி இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டு அதனால் பாமர மக்களின் மனதில் வீண் ஆசையைக் கிளப்பிவிட்டுத் தலைவிரித்தாடுகின்றது. ஷை ஒப்பந்தம் லார்டு வெல்லிங்டன் சர்க்காரால் காற்றில் பறக்கவிடும் காலத்தை இந்திய மக்கள் யாவர்களும் கூடியவிரைவில் எதிர் பார்க்கலாம். அதற்கு ஏற்றாற்போல் இதுவரையிலும் இந்துமுஸ்லீம் ஒற்றுமை ஏற்படாதிருப்பதும் போதிய சான்றாம். ஆனால் காங்கிரஸ் தலைவர்களும், அவர்களின் சர்வாதிகாரியான திரு. காந்தியும் வட்டமேஜை மகாநாட்டிற்குப் போவதற்கு முன்னர் சாப்ரூ ஜெயகர் சந்திப்பிலிருந்து லார்டு வெல்லிங்டன் சந்திப்புவரையில் காந்திக்கும் மற்றவர்கட்கும் நிகழ்ந்த நிகழ்ச்சி முறைகளையும் முறையே ஆராய்ந்து பார்த்தால் சுயராஜ்ய உண்மை நன்கு புலப்படும். திரு. காந்தி அவர்கள் தனது ஆதிகொள்கையிலிருந்து படிப்படியாய் இறங்கி இப்போது சர்க்கார் அதிகாரிகளோடு நெருங்கி அளவளாவி வருவதில் நிற்கின்றார். முதலில் பூர்ண சுயேச்சையே நமது பிறப்புரிமை என்று சொல்லிய திரு. காந்தி அவர்கள் மிதவாதிகளிலும் பணிந்த மிதவாதியாய் வந்துவிட்டது வருந்தத்தக்கதே யாகும். ஆனால் இவ்வளவு பெரிய காரியங்கள் நடத்திவரும் திரு. காந்தி அவர்கள் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அவர்களால் கொடுக்கப்பெறும் சுயராஜ்யத்தைக்கொண்டு நமது இந்திய மக்கட்கு பிராமணீய மநுதர்ம சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டு ஏகாதிபத்ய அரசைச் செலுத்திய இராமராஜ்யத்தை ஸ்தாபிப்பதாகக் கூறிவிட்டார். இந்த இராம இராஜியம் ஒருக்கால் ஏற்பட்டால் அதனால்இந்திய மக்கள் அடையும் பயன் யாதுஎன்பதை நான் இங்கு விவரிக்க வேண்டியதில்லை. திரு. காந்தி அவர்கள் இந்திய மக்கட்கு சுயராஜியமென்னும் கட்டடத்தைக் கட்ட அடிகோலிய பொழுது அஸ்திவாரத்தைப் ப்பலப்படுத்த வேண்டியது அவசியமாகும். அஸ்திவாரமில்லாத கட்டடம் உடனே அழிந்துபோம் என்பது யாவரும் அறிந்ததே. இந்தியமக்கட்கு வரும் சுயராஜிய மென்னும் கட்டிடத்துள் ஒரே தாய் வயிற்றிற் பிறந்த சகோதரர்கள் போல் இருந்து சமத்துவ உரிமையோடு வாழவேண்டுவது அவசியமாகும். இவ்வித சுயராஜியக் கட்டடத்தைக் கட்டுகின்ற முறையில் தான் தென்னாட்டில் திரு. இராமசாமிப் பெரியாரால் நடத்திவரும் சுயமரியாதை இயக்கம் வேறுபட்டு நிற்கின்றது. சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையான தத்துவங்களையும் அதனுடைய வேலைகளையும் காங்கிரஸ் முதலிய அரசியல் கட்சித்தலைவர்கள் சிறிதும் உணராமல் தங்கள் ஏகபோக உரிமையில் காலம் கடத்தி வருகின்றார்கள். முதலில் இந்திய மக்கட்குள்ளிருக்கும் பற்பல சமூக வேற்றுமைகளை ஒன்றுபடுத்த முயற்சியுறல் வேண்டும். பின்னர் சமய சம்பந்தமான வேறுபாடுகளை ஒழித்து ஒரே சமயமாக மக்களை ஒன்றுபடுத்த முயலுதல் வேண்டும். அதன் பின்னர் இந்திய மக்களிடத்தில் இருக்கும் அறியாமையாலுண்டாகிய மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து நல்ல பகுத்தறிவு பெறும்படியாகச் செய்வித்தல் வேண்டும். கடவுள் பேராலும் மற்றைய உயர்வு தாழ்வின் காரணங்களாலும் நடத்திவரும் மூடச்செய்கைகளை அழித்தல் வேண்டும். தென்னாட்டிலும், வடநாட்டிலும் உள்ள ஆலயங்கட்குள்ள எல்லாவித சொத்துக்களையும் பாமர மக்களின் கல்விக்காக, பொருள்களின் ஆராய்ச்சி அறிவிற்காக, தொழிலாளிகளின் கஷ்டத்திற்காக உபயோகப்படுத்தும்படி செய்தல் வேண்டும். நமது நாட்டில் ஆண்கட்கும் பெண்கட்கும் வேற்றுமைகளையும் அடிமைத் தன்மையையும் ஒழித்து சொத்துக்கள் முதலிய எல்லா பாகங்களிலும் சமத்துவ உரிமைபெற முயற்சி செய்தல் வேண்டும், மேற்கூறிய இவ்வித காரியங்கள் இந்திய மக்களிடத்து என்று சீர்பட்டு நிலை நிற்கின்றதோ அன்று திரு காந்தி அவர்கள் போன்ற தலைவர்களின் முயற்சியின்றியே பூரண சுயேச்சையல்ல அதற்கு மேற்பட்ட வேறொரு சுயேச்சை அரசியலாயினும் தானே இந்திய மக்கட்கு வந்து சேர்ந்துவிடும். இதற்காக உப்பு சத்தியாக்கிரகம், வரி கொடாமை, சட்ட மறுப்பு முதலிய காரியங்களில் ஈடுபட்டு இந்திய மக்கள் ஜெயிலில் வாடவேண்டுவதில்லை. இந்த இடத்தில் அரசியல் நீதியில் பேரறிவு பெற்ற பெரியாராகிய திருவள்ளுவரின் திருவாக்கியத்தைக் குறிப்பிடுகின்றேன்' "வினைவலியுந்-தன். வலியும், மாற்றான் வலியும் துணைவலியுந் தூக்கிச் செயல்"

என்பது ஆராயத்தக்கதொன்றாம். இவற்றை ஆராயுமிடத்து தன்வலி, மாற்றான்வலி, வினைவலி, துணைவலி இந்நான்கில் தன்வலி ஒன்றே முதலில் ஆராய்ந்து உணரத்தக்கதாம். இந்திய மக்களுள் ஒற்றுமை வன்மை ஒன்றுபடாதிருப்பதற்குக் காரணம் யாது? சமூக வேற்றுமை, சமய வேற்றுமை, உயர்வு, தாழ்வு என்பதின் வேற்றுமைகளின் காரணங்களே யாவன. தனக்கு உரிய வன்மையில்லா ஒருவன் எவ்வாறு மாற்றானைத் தன் கீழ்ப்படுத்த முடியும்? தன் வலியை ஒன்றுபடுத்திக் கொள்ளமுடியா ஒருவன் எவ்வாறு வினையின் வன்மையை ஆராய்ந்து தெரிந்து கொள்ள முடியும்? ஆதலால் திரு காந்தி அவர்கள் போன்ற காங்கிரஸ் தலைவர்களோ அல்லது மற்றைய கட்சிததலைவர்களோ பெயருக்கும் புகழ்ச்சிக்கும் ஆசைப்படாது ஏழைமக்களின் சமத்துவ உரிமைக்கு உழைக்க முன் வருதல் வேண்டும்· எல்லா அரசியல் கட்சித்தலைவர்களும் தொண்டர்களும் ஒன்றுசேர்ந்து மக்களின் சுயமரியாதையை நமக்குள் ஏற்படுத்தி விடுவார்களேயானால் அப்பொழுதே சுயராஜ்யக்கட்டடத்தின் அஸ்திவாரம் பலவீனமின்றி அமைந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. ஆதலால் இந்திய மக்கட்கு முதலில் வேண்டுவது சுயமரியாதையா சுயராஜ்யமா?என்பதை எல்லா அன்பர்களும் யோசிக்க வேண்டுகின்றேன். நம் நாட்டிற்குள் இருக்கின்ற சிற்சில ஜாதியினர்கள் கொண்டிருக்கும் ஆதிக்கத்தை அழிப்பதற்கு முடியாமற்போனால், நம் நாட்டிற்குள் இருக்கின்ற மூடப்பழக்க வழக்கங்களினால் போகும் பணத்தைப் போகாமல் இருக்கும்படி செய்ய முடியவில்லையானால், நம் நாட்டிற்குள் இருக்கின்ற உயர்வு தாழ்வை நமக்குள் ஒழிக்க முடியாமற்போனால், நம் நாட்டில் ஆடம்பரங்களினால் அழியும் ஆலய சொத்துக்களை நமது மக்கட்கு உபயோகப்படுத்த முடியவில்லையானால் நமது நாட்டிற்குள்ளிருக்கின்ற ஒரு பகுதியினரைத் தெருவில் நடக்கவிடாமை, கோயிலுள் போகவிடாமை, கிணற்றில் தண்ணீர் முகக்க விடாமை, தீண்டாமை, பாராமை முதலியவற்றை ஒழிக்க முடியாமற் போனால், நமது நாட்டிற்குள் இருக்கின்ற முதலாளிகளின் ஆதிக்கத்தை ஒழித்து தொழிலாளிகளின் கஷ்டத்தை நீக்க முடியாமற்போனால், நமது நாட்டிற்குள் இருக்கின்றபெண்களின் அடிமைத் தன்மையை அழிக்க முடியாமற்போனால், நமது நாட்டிற்குள் இருக்கின்ற கடவுள் பெயராலும், புரோகிதச் சடங்குகளின் மூலமாகவும், அழிக்கப்பெறும் செல்வங்களை அடக்க முடியாமற்போனால் எவ்வாறு செல்வ பலம், உடல்பலம், ஆயுதவன்மை, தந்திரம், கட்டுப்பாடு இவைகளெல்லாம் ஒழுங்கு கொண்டிருக்கும் பிரிட்டிஷாரை வெற்றி கொள்ளமுடியும்? திரு. காந்தியவர்கள் ஸ்தாபிப்பதாகச் சொல்லும் இராம இராஜியம் வந்தால் இந்திய மக்கள் இப்பொழுதைக் காட்டிலும் கேவலமான நிலைமையை அடைவார்கள் என்று உறுதியாகச் சொல்லுகிறேன். இந்திய சட்டசபையில் டாக்டர் அரிசிங்கோர் கொண்டுவந்த இந்தியப் பெண்கள் சமத்துவ சொத்துரிமையின் மசோதாவானது சுயராஜியத்தலைவர்களால் சிதறடிக்கப்பட்டுவிட்டது யாருக்குத் தெரியாது? சாரதா மசோதாவின் நிலைமையும் சரியான முறையில் அனுஷ்டிக்கப்படாமல் இருப்பதின் காரணம் என்ன? தொழிலாளிகளின் நிலைமை கேவலமான ஸ்திதிக்கு வந்ததும் சுயராஜியத் தலைவர்கள் காரணமல்லவோ? சென்னை காங்கிரஸ் வாதிகள் சென்னைத் தொழிலாளர்களையும், இரயில்வேத் தொழிலாளர்களையும் தங்கள் கூப்பாட்டிற்கு கூட்டமாகச்சேர்த்துக் கொள்வதோடும், வாய்ப்பேச்சோடும் முடித்து விடுகிறார்கள். வடநாட்டின் நிலைமை இதற்கு மேலாகத்தானிருக்கின்றது. இக்காலத்திலும் சங்கராச்சாரியர்கட்கும், மடாதிபதிகட்கும் மரியாதை கொடுக்கும் பணக்காரர்களும், பகுத்தறிவற்ற படிப்பாளர்களும் இல்லாமற் போகவில்லை. மூடபக்தியில் ஆழ்ந்த புராணக்காரர்களும், சமயக்காரர்களும், படித்தவர்களும், நாகரீக முடையவர்களும் வதியும், சென்னையில்தான் நிறைந்து கிடக்கின்றார்கள். திரு. காந்தி அவர்கட்கு இராமன் பைத்தியம் இருந்தால், அவரின் சீடர்கட்கு கிருஷ்ணன் பைத்தியம் இருப்பது சொல்ல வேண்டுமோ? ஆதலால் இந்திய மக்கட்கு முதலில் சுயமரியாதை அவசியமா? சுயராஜியம் அவசியமா? என்பதை வாசகர்களே முடிவுக்கு வரவிட்டுவிடுகிறேன்.

புதியவாரப்பத்திரிகை.

21·6-31 ந்தேதியிலிருந்து "வெடிகுண்டு" என்னும் வாரப்பத்திரிகை ஒன்று மதுரையிலிருந்து வெளிவருமென ஷை பத்திரிகையின் மானேஜிங்எடிட்டர் எ. எஸ் ஆனந்தம் எழுதுகிறார்.

மதமே வேண்டாம், அதிலும் இந்துமதம் வேண்டவே வேண்டாம்.

மலையாளத்து தீயர் வகுப்பு பிரமுகர்களின் தீர்மானங்கள்.

—:0:—

தீயர் (ஈழவர்) தீயர் என்றாலும் ஈழவர் என்றாலும் ஒரேவகுப்புத் தான். மலையாளம் ஜில்லாவில் தீயர் என்றும் திருவாங்கூர் கொச்சி சமஸ்தானங்களில் ஈழவர் என்றும் அழைக்கப்படும் ஜாதியாருக்கு இந்து மதக்கொள்கையின்படி 'ஜாதி' இந்துக்களுக்கிருக்கும் சுதந்திரம் கிடையாது. தீயர்களால் ஸ்ரீநாராயணகுரு சுவாமியின் உதவியால் கேரளதேசமெங்கும் பண்டைக்காலம் முதற்கொண்டே சுயமரியாதை இயக்கம் துவக்கப்பட்டிருக்கின்றது சுவாமிகளை உலகம் இருக்கும் வரை தீயர் மறக்கமாட்டார்கள். ஈ. வெ. ராமசாமி பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தை மலையாளமெங்குமுள்ள பல தீயர் சபைகளும் அவர்களுடைய பத்திரிகைகளும் மிகவும் புகழ்ந்து சேபவும் அதைப்பற்றி நீண்ட வியாசங்களும் தலையங்கங்களும் எழுதத்தொடங்கியிருக்கின்றன திரு கே. அய்யப்பன் பி. ஏ., எம். எல். ஸி. அவர்களுடைய "சகோதரன்" பத்திரிகையின் வருஷாந்தர விசேஷப் பிரதியில் முதல் முகப்படமாக போட்டப்பட்டிருப்பது நமது தலைவர் உயர்திரு. இராமசாமி அவர்களுடையதாகும். தீயர் (ஈழவர்) களுடைய கேரளமெங்குமுள்ள ஜனதொகை 2000000 இருபது லக்ஷமாகும். ஆயிரக்கணக்கான பி ஏ பட்டதாரிகளும் பல மலையாள பண்டிதர்களும், பெரிய ஜமீன்களுமுடைய நாகரிக சமூகமும் தீயர்களாவார்கள். மலையாளத்தில் சுதேசி வைத்தியர்கள் அதிகமும் தீயர்கள் ஆவார்கள். மலையாள பாஷையிலுள்ள மஹா கவி என். குமாரனாசான் ஒரு ஈழவகனவானாகும். "நளினி, லீல, வீணபூ, சண்டாலபிக்ஷுகி, துரவஸ்த, கிராமவிருக்ஷத்திலகுயில், பிரரோதனம்" முதலான காவியங்கள் ஆசயபுஷ்டியால் மலையாளபாஷையில் முதல் தரமானது. ஆனால் ஜாதி அசூயையால் மேல் ஜாதிகள் அவருடைய புஸ்தகங்களை தாராளமாய் வாங்குவதில்லை. பார்த்தீர்களா ஜாதியால்வந்த விபத்து! ஆனாலும் மலையாளமெங்குமுள்ள ஜாதிகர்வமில்லாத சகல பண்டிதர்களும் மகாகவி குமாரன் ஆசானுடைய காவியங்களைப் புகழ்ந்து பேசுகின்றார்கள். ஸ்டீம் போட்டில் பிரயாணம் செய்யும் போது மூழ்கி அவர் காலகதி அடைந்தார். ஆனால் மலையாள பாஷை இருக்கும்வரைக்கும் என்னதான் ஜாதிப் பொறாமை இருந்தாலும் சஹிர்தய வித்வான்களால் அவர் கொண்டாடப்படுவார். தீயர் வகுப்பாரில் பிரபல பத்திராதிபர்களும் பிரசித்தி பெற்ற பாங்கு டைரக்டர்களும் இருக்கிறார்கள். "மிதவாதி" "சகோதரன்" "தேசாபிமானி" "கஜகேசரி" "கேரள கௌமுதி" "ஜினேகிதன்" முதலான வாரப்பத்திரிகைகள் தீயர் வகுப்பாரின் அபிவிருத்திக்காக நடத்தப்படுவதாகும். "மிதவாதி" 6 மாதவரைக்கும் தினசரியாக நடத்தப்பட்டு நாலாயிரம் ரூபாய் வரைக்கும் நஷ்டமேற்பட்டதால் வார பத்திரிகையாக மாற்றப்பட்டது. மலையாளமெங்கும் பிரசித்திப்பெற்றதும் சென்னை, கொளும்பு, ஊட்டி முதலான 14 கிளைகளுள்ள காலிகட்டு பாங்கு (Calicut Bank Ltd.) தீயர் வகுப்பாரால் நடத்தப்படுவதாகும். "மிதவாதி" பத்திராதிபர் ஸி. கிருஷ்ணன் பி. ஏ. பி. எல்., எம். எல். ஸி. இவருடைய மானேஜிங் டைரக்டர். வஜ்ர சூசி தேசசுதந்தி முதலானவைகளிலும், ஈழவர்கள் மலையாளத்தில் பிரசித்திப் பெற்றவர்கள். அடியில் காணும் மகான்கள் தீயர் (ஈழவர்) வகுப்பைச்சேர்ந்தவர்கள். காலம் சென்ற ஸ்ரீநாராயணகுரு சுவாமி, காலம் சென்ற ஜஸ்டிஸ் சர் ஸி. கிருஷ்ணன் எம். ஏ. பார்-அட்-லா, C. கிருஷ்ணன் பி. ஏ. பி. எல். மிதவாதிபத்திராதிபர், மகாகவி என். குமாரன் ஆசான், ஸி. கே. விஜயராகவன் ஐ. ஸி. எஸ்., கலெக்டர், மிஸ்டர் வி. கே. பாலகிருஷ்ணன் ஐ. ஸி. எஸ்., கலெக்டர், ஒ. கே. மீனாக்ஷி அம்மாள் பி. ஏ. பார்-அட்-லா, ஸி. குஞ்ஞிராமன் பார்-அட்-லா சென்னை ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜ் பி. வி. ராமுணி, செட்டில்மெண்டு கமிஷனர் வட இந்தியா. ராவ்பகதூர் இ. கே. கோவிந்தன் பி. ஏ., புதுக்கோட்டை தியான் திவான் பகதூர், டாக்டர் கே. கிருஷ்ணன் பாலக்காட், பி. சங்குண்ணி எம். ஏ. எல். டி., பிரின்ஸிப்பால் டீச்சர்ஸ் காலேஜ் சைதாபேட்டை (ரிட்டயர்ட்) எ. கே. பவித்திரன் பி. ஏ, பி. எல். பார்-அட்-லா, கே. பாலகிருஷ்ணன் பி. ஏ. பி. எல். பார்-அட்-லா, காப்டன் கே. என். பணிக்கர் I.M.S., L.R.C.P. பிரின்ஸிப்பால் ஸிலோன் ஆயுர்வேத காலேஜ் கொளும்பு, தென்மலையாளத்தில் ஒருபிரபல ஜன்மியும் பொன்னானி தாலூகா போர்டு பிரஸிடெண்டுமான A. P. ராமன் முதலான பலர் முக்கியஸ்தராவார்கள். ஆயிரக்கணக்கான பி. ஏ. பட்டதாரிகளும் பல மலையாளம் பண்டிதர்களும் இந்தியாவிலும் வெளி தேசங்களிலும் பிரபல உத்தியோகஸ்தர்களும் வியாபாரிகளும் ஓட்டல்காரர்களும் மலையாளத்திலுள்ள நெல் விவசாயிகளும் அதிகம்பேர் தீயரேயாவார்கள். சகிரிநார், கொப்பரை விவசாய தொழிலாளர்களும் ஆ ஆயிரக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்து மதம் ஜாதியின் கொடுமையால் இவர்களை எல்லாம் தனது மதத்திலிருந்து துலைத்துவிட்டது. எந்த குணமிருந்தாலும் ஜாதியால் அது மறைக்கப்படுகின்றது. அந்தக் கொடிய ஜாதியை யுடைக்கதீயர் சகலமான பலதையும் உபயோகப்படுத்தி மதத்தையே ஒழிக்கத் தீர்மானித்தார்கள்.

ஒரு சுயமரியாதை வீரன்.

(7.ம் பக்கத்தொடர்ச்சி)

ஜீவிக்க வருபவர்கள் குடியிருக்கவும் அவர்கள் குழந்தைகள் படிக்கவும் நல் வசதியளித்திருப்பது போல் நமது பெண்கள் மரியாதையாக தொழில் செய்யவும் பரம ஏழைகளாயுள்ளவர்கள் பிழைத்துய்யவுமாகிய ஏதேனும் ஒரு தொழில் ஸ்தாபனத்தையுண்டாக்கினால் நமக்கு லாபமும் நன்மதிப்பாகவு மிருக்குமென்று நம்புகிறேன். இனி சகல மக்களும் கல்லாலயங்களை உடைத்தெறிந்துவிட்டு தொழிலாலயங்களை சிருஷ்டித்து பயன் பெறவேண்டியதாகவே யிருக்கிறது. இச்சமயம் சுவாமி விவேகானந்தரின் மொழி நமது ஞாபகத்திற்கு வருகிறது.

அதாவது "அறிவின் பலத்தைப் பெற்ற பிராமணன் ஒரு காலத்தில் உலகத்தை ஆண்டு கொண்டிருந்தான். மற்றொருகாலம் சரீர பலத்தைப்பெற்ற க்ஷத்திரியன் பிராமணனைவென்று உலகத்தை ஆண்டுகொண்டிருந்தான். என்றாலும் அவ்வாக்ஷியால் அறிவுப்பலமும் சரீர பலமும் பேராசை கொண்டு ஒன்றோடொன்று மோதுண்டு சதா சண்டை செய்து உலகத்தை இரத்தகளமாக்கி மற்ற மக்கள் வாழ்க்கையினதையும் சீர்குலைத்துக் கொண்டே வந்தது. அது சமயந்தான் தைரியத்துடன் வியாபாரம் நடாத்தும் வைசியன் உள்ளே நுழைந்தான். பிராமணனும் க்ஷத்திரியனும் வைசியனுக்குள் மறைந்து போனார்கள். துலாக்கோல் போல் உலகத்தை இனி "சூத்திரன்" அதாவது சூத்திரங்களை வைத்து தொழில் நடாத்தும் தொழிலாளன்தான் இனி உலகத்தை அரசாட்சி புரியவுங்கூடும்" என்று சொன்னார். அவர் சோதிடமும் இன்று பலித்துவிட்டது. மேல்நாட்டாருடைய பேராசையையும் பிரமாணசபையையும் ஆராய்ந்துபார்த்தால் இன்னுஞ்சிலகாலத்திற்குள் உலகத்தைச் "சூத்திரன்" ஆள்வது நின்று சூத்திரம் தான் ஆளுமோவென்று நினைக்க வேண்டியதாய் இருக்கிறது. இன்னும் மேலான காரியங்களை வர வர விரிவடையச் செய்யவேண்டியதிருப்பதனாலே நமக்குள் ஒற்றுமை வளரவேண்டும். அதிதீவிரமுள்ள வாலிபர்களுடைய முற்போக்கிற்கு உலக அனுபவமுள்ள பெரியவர்களுடைய அனுபோகப் படிப்பு அத்யாவசியமாகும். தன் முயற்சியினாலும் சலியா உழைப்பினாலும் சாதிக்கக்கூடிய பெரியவர்களாலும் வீரம் மிகுந்த வாலிபர்களுடைய கூட்டுறவு இன்றியமையாப் பேருதவியாக விருக்கக்கூடும். ஆகையால் நம்மில் பெரியவர்களும் வாலிபர்களும் மிக்கக்கட்டுப் பாடுடையவர்களாயிருந்து சாதிக்கவேண்டிய தவசியமென்பதை அறிவு மிகுந்த உங்களுக்கு நான் அதிகம் சொல்லவேண்டியதில்லையென்று இத்துடன் நிறுத்திக்கொண்டு இது வரையும் பொறுமையோடிருந்து என் சிற்றுரைக்குச் செவிசாய்த்திருந்தமைக்கு மீண்டும் வந்தனம் செலுத்துகிறேன்.

காரைக்காலில் சுயமரியாதைத் திருமணங்கள்.

காரைக்கால் தேச ஊழிய வாசகசாலை அங்கத்தவரும், சுயமரியாதை இயக்கத்தில் அதிதீவிரவாதியுமான திரு. ஆறுமுகம் அவர்களுக்கு 7—6—31ல் வைதீகர்களின் எதிர்ப்புகளுக்கிடையே, சடங்குகளை ஒழித்து, தமிழ் மொழியில் பிராமணரல்லாதாரைக்கொண்டு, திருமணம் நடத்திவைக்கப்பெற்றது. அதுகாலை அநேக பிரபலஸ்தர்களும், வைதீகப்பிரியர்களும் குழுமியிருந்தார்கள். அது சமயம் மணமக்கள் தேச ஊழிய வாசகசாலைக்கு ரூ. 5 நன்கொடை தந்துதவியுள்ளார்களென கே. கோதண்டபாணி அறிவிக்கிறார்.

11—6—31உ தேச ஊழிய வாசகசாலை அங்கத்தவர், திருவாளர், மாடசாமி அவர்களுக்கு சுயமரியாதைத்தலைவர் திரு. சாமி சிதம்பரனார் அவர்கள் திருமணத்தை நடத்திவைத்தார்கள். அது சமயம் தலைவர் அவர்களும் நன்னிலம் சுயமரியாதைச்சங்க காரியதரிசி திரு. சௌரிராஜன் அவர்களும், பார்ப்பனர்கள் தங்கட்கு சாதகமான வற்றை முனிவர்வாக்கென்றும், கடவுளால் மக்கட்கு செய்யப்பட்டதென்றும் கூறி, புராணங்களென்றும், இதிகாசங்களென்றும் பல பெயரிட்டு எழுதிவைத்திருக்கும் புரட்டுத்தனத்தையும் யோக்கியமற்ற கட்டுக்கதைகளையும், யாவருக்கும் புலனாகும் வண்ணம் வெளியாக்கி புத்துணர்ச்சியை ஈந்து, மூட நம்பிக்கையையும், வைதீகப்பேயையும், புரோகிதச் சனியனையும் நாட்டை விட்டுத் துரத்தும் படிக்கும், பார்ப்பனப் புரோகிதத்தின் மோசத்தையும், எடுத்துச் சொல்லி கல்யாணம் முதலிய

மற்ற சடங்குகள் யாவும் சுயமரியாதையாக நடத்த வேண்டுமென்று சொல்லி திருமணத்தை நடத்தி வைத்தார்கள். அதுபோது அநேக பிரபலஸ்தர்கள் விஜயஞ் செய்திருந்தார்கள்.

அதுகாலை மணமக்கள் தேச ஊழிய வாசகசாலைக்கு ரூ. 5. நன்கொடை அளித்துள்ளார்கள் என கே. கோதண்டபாணி அறிவிக்கிறார்.

தொண்டர் மகா நாடு.

திருவாரூரில் மாகாணத்தொண்டர்களின் மகா நாட்டின் ஆலோசனைக் கூட்டம் சமதர்ம வாசகசாலையில் 21-6-31ந் தேதி ஞாயிற்றுக்கிழமை கூடுமென திருவாளர்கள் டி கேசவலு, வி. சி. ஆர். ராஜு, சு. ராஜகோபால் ஆகியவர்கள் தெரிவிக்கிறார்கள்.

குண்ணத்தூர் வாலிபர் சங்கம்.

திருமங்கலம் தாலூகாவைச்சார்ந்த குண்ணத்தூர் வாலிபசங்க அங்கத்தினர் களின் கூட்டம் 12-6-31 ந்தேதி, திரு ஆர். நாசிம்மலு நாயுடு அவர்களின் தலைமையில் கூடி சங்கத்திற்குப் புதிய காரியதரிசியும், நிதி சேர்ப்பதற்கு கமிட்டி மெம்பர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டதென ஷை சங்கக் காரியதரிசி எழுதுகிறார்.

சென்னிமலை.

யுவர் சங்கம்:—ஷை சங்கத்தின் வாசகசாலை திறப்புவிழா திரு ஈ வெ. இராமசாமி அவர்களாலும், மேற்படி சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா திரு ஜே. எஸ். கண்ணப்பர் அவர்கள் தலைமையிலும் 28-6-31-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுமென வரவேற்புக்கமிட்டி காரியதரிசி எழுதுகிறார்.

சிவகாசி.

சுயமரியாதைச்சங்கம்.

மேற்படி சங்கத்தின் மாதாந்திரக்கூட்டமென்று திரு மா. சின்னமணி அவர்களின் தலைமையில் சங்கக்கட்டடத்தில 14-6-31 இரவு 7-30 மணிக்குக்கூடி, சங்கத்தின் வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

மேற்படி சங்கவாசகசாலைக்கு மாஜிசேர்மன் திரு அ. ரு அருணாசல நாடார் அவர்களால் வாக்களிக்கப்பட்ட ரூ. 100ம் பெற்று விருதுநகர் மகாநாட்டை எதிர்பார்த்து மேற்படி வாசகசாலையின் திறப்புவிழாவை நடத்துவதெனவும் நிச்சயித்தபின்னர், சிவகாசி தாலூகா இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டை இம்மாதத்திலேயே ஸ்ரீவில்லிப்புத்தூரில் நடத்துவதாகவும் திரு உத்தண்டன் அவர்களும், திருமதி இராஜம்மாள் அவர்களும், தங்களுடைய திருமணத்தை நாடார் உலகத்தில் முதன் முதலாக சுயமரியாதை முறையில் நடாத்தி இவ்வூர் வாலிபர்களுக்கு வழிகாட்டியதற்காக அவ்விருவரையும் வாழ்த்துவதாகவும், திரு பொன்னம்பலனார் அவர்களும் திருமதி சுலோச்சனா அம்மையாரவர்களும் சீர்திருத்த கலப்பு மணம் செய்து கொண்டதற்காக இருவரையும் மனமார வாழ்த்துவதுடன், இந்நகருக்கு இருவரையு மழைக்கவேண்டுமென்னும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு இரவு 9-30 மணிக்கு கூட்டமினிது கலைந்ததென மேற்படிசங்கத்தின் காரியதரிசி எழுதுகிறார்.

சூலூர் திராவிட வாலிப சங்கம்.

சுயமரியாதைத் திருமணம்:-சூலூர் செங்குந்த சமூக வாலிபர் திரு. எஸ். டி. வடிவேல் அவர்களுக்கும், திருமதி பாவதி அம்மாளுக்கும் எவ்வித சடங்குகளுமின்றியும், பார்ப்பனீயத்தை அறவே நீக்கியும் சுயமரியாதை முறையில் 11-6-31ல் திருமணம் நடந்தேறியது. அவ்வமயம் பல அன்பாகளால் சுயமரியாதைக் கீதங்கள் பாடப்பட்டதென திரு. எஸ் டி. சம்பந்தம் எழுதுகிறார்.

ஸ்ரீவில்லிப்புத்தூர்.

சுயமரியாதைத் திருமணம்:- ஸ்ரீவில்லிபுத்தூா தாலூகா நாச்சியாாபட்டியிலிருக்கும் திரு. வெங்கிடசாமி நாயக்கர் குமாரர் திரு. சின்னகிருஷ்ணசாமிக்கும், ராஜகோபாலபுரம் திரு. கோ. நாராயணசாமி நாயக்கர் குமாரத்திதிருமதி போலம்மாளுக்கும் ராஜகோபாலபுரம் சீர்திருத்த சங்கத்தின்சார்பில் பல எதிர்ப்புகளினிடையேசீர்திருத்தத்திருமணம் 11-6-31ல் நடைபெற்றது. அவ்வமயம் பொதுஜனங்கள் ஏராளமாய் விஜயம் செய்திருந்ததுடன் திருவாளர்கள், வெ நாராயணசாமி, வெ. சங்கையா, நா. வெங்கடசாமி; போலய்யா, வெ. வீராசாமி, வி. வெங்கிடசாமி, அழகர்சாமி, நல்லையா, வெ. கிருஷ்ணசாமி, ராமானுஜம், சொ. அ. அழகர்சாமி, நா. கி. கோபால்சாமி ஆகியவர்களும் விவாகத்திற்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. விவாகம் நிறைவேறியதும் திரு. நா. கி. கோபால்சாமி அவர்கள் "சீர்திருத்த மணம் அவசியம்" என்பதைப்பற்றியும், திரு. ராமானுஜம் அவர்கள் "மூடப்பழக்கவழக்கம்" என்பதைப்பற்றியும், திரு. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் "சிக்கனம்" என்பதைப் பற்றியும் சொற்பொழிவாற்றியபின், திரு. சோ. அ. அழகர்சாமி நாயுடு அவர்களால் வந்தனோபசாரம் கூறியபின் விவாகமினிது நிறைவேறியதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

யாழ்ப்பாணம்.

சுயமரியாதைத் திருமணம்:-

8-6-31க்குச் சரியான வைகாசிமீ 26உ [அட்டமி, மரணயோகத்தில்) மணமகனின் ஜன்ம நட்சத்திரத்தில் திரு. இ. கோபாலுக்கும், திரு. கந்தப்பர் அவர்கள் குமாரத்தி திருமதி. சின்னம்மாளுக்கும் பருத்தித்துறை காளி கோவிலுக்கெதிரேயுள்ள "சுகந்தவாச"த்தில் சுயமரியாதை முறைப்படி, பல எதிர்ப்புகளுக்கிடையில் திருமணம் நடைபெற்றது. அவ்வமயம் திரு. சதாசிவமவர்கள் அனைவருக்கும் வந்தனங்கூறி, "சுயமரியாதைக் கொள்கைகளையும், அவற்றின் நன்மைகளையும்" பற்றி யாவருக்கும் விளக்கி யுரைக்க திரு. ஆறுமுகத்தாரவர்கள் "பிராமணர்களைப் பற்றியும், மூடநம்பிக்கை" யென்பதைப்பற்றியும் பேச, மணமகளின் தந்தை திரு. கந்தப்பரவர்கள் சுயமரியாதை மகாநாடு ஒன்று பருத்தித்துறையில் கூட்டவேண்டுமென பிரேரேபிக்க யாவரும் அதை ஆமோதித்துத் தம்பதிகளை ஆசீர்வதித்துச் சென்றார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

அறிவிப்பு.

இராசிபுரத்திலிருக்கும், குடி அரசு ஏஜண்டின், சந்தாநேயர்களுக்கு, ஷை ஏஜண்டு தெரியப்படுத்திகொள்வதென்ன வென்றால்,

ஐயா, பத்திரிகை பாக்கிகள் நெடுநாளாக நின்றுகொண்டு வருவதால் தயவுசெய்து 1-7-31-க்குள் பாக்கிகள்பூராவும் நம்மிடம் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளக்கோருகிறேன். தாமதம் செய்யும்பக்ஷத்தில்பத்திரிகையை நிறுத்திவிட நேரிடுவதைக் குறித்து வருந்துகிறேன்.

குடி அரசு ஏஜண்டு, இராசிபுரம்.

இங்கிலீஷ் 'சிசர் விட்சு' குதிரைப் பந்தய லாட்டரி.

14-10-31-ல் நியூவ் மார்க்கட்டில் 'மியூட்சுவல் கிளப்பாரால் நடக்கும் பிரைசுக்கு கொடுப்பது 90,000 பவுன். டிக்கட் 1-க்கு ரூ. 4-8-0. 3-க்கு ரூ. 13. டிக்கட்டிற்கு முன் பணத்துடன் முந்துங்கள்!

அதிகாரம்பெற்ற ஏஜண்டு:—

S. K. வரத்ராஜலு,

ஆனந்தநிலயம், திருச்செங்கோடு S. I.

திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

O. S. No. 1339 of 1926.
E. P. R. No. 352 of 1931
E. A. No. 225 of 1931.

கஸ்பா அவனாசியிலிருக்கும் பழ. வீர. சுப்பிரமணியஞ் செட்டியார்—வாதி.

அவனாசி தாலூகா அய்யம்பாளையத்திலிருக்கும் வரதப்பகவுண்டன் மகன் பாவடித்தோட்டம் சின்னக்குட்டி என்கிற வாதப்ப கவுண்டன்— 1ம் பிரதிவாதி.

ஷை 1ம் பிரதிவாதிக்கு தெரிவிக்கும் நோட்டீசு.

ஷை நெம்பரில் ஜப்தி செய்யப்பட்ட உன்னுடைய ஸ்தாவர சொத்துக்களை ஏலம் போடவேணுமாய் மனுவாதி மனுதாக்கல் செய்து இஸ்தியாரில் கண்ட ஷை சொத்துக்களை நிரணியப்பதற்காகவும் வாதிதானும் நேரிலாவது வக்கீல் மூலியமாவது மற்றவர்களைப் போல் ஏலத்தில் கோரவும் கோரி எடுத்த தொகையை டிக்கிரித் தொகை வகையறாவுக்காக வஜா செய்யவேணுமாயும் மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி உனக்கு ஏதாவது ஆக்ஷேபணையிருந்தால் வக்கீல் மூலமாவது நேரிலாவது 1931 வருஷம் ஜூன் மாதம் 30 தேதி காலை 10 மணிக்கு ஆஜராகி தெரிவித்துக்கொள்ளவும். இல்லாதவரை ஒரு தலை பக்ஷமாக தீர்மானிக்கப்படும் என்கிற சங்கதியை இதன் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(Sd.) M. K. Govindarajulu Chettiar, Counsel for D. H.
Tirupur, 14—6—31.

சுயமரியாதைத் தலைவர்கள்.

நமது சுயமரியாதை இயக்கத் தலைவர்களில் உயர்திரு இராமசாமிப் பெரியார், உயர்திரு சௌந்திரபாண்டியன் ஆகியஇருவர்களின் போட்டோக்களையும் தனித்தனியாக 1¼"சைசில் (Real Photo) உண்மையான போட்டோ பேட்ஜ்கள் செய்து வெளியிட்டிருக்கிறோம். இதர தலைவர்களின் போட்டோ பேட்ஜ்கள் சமீபத்தில் வெளியிடப்படும். விலை விபரங்களுக்கு எழுதவும் மாதிரிக்காக தேவையுள்ளோர் 4 அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பினால் மறுதபாலில்அனுப்பப்படும்.

விலாசம்:—

அ. ப. அர்த்தனாரி பிரதர்,
ஜலகண்டாபுரம், (சேலம் ஜில்லா,

(5ம் பக்கத் தொடர்ச்சி)

என்று விளங்குவோர், இந்த மார்க்கத்தையே பொது ஜனங்களுக்குப் போதிக்கவேண்டும். இந்த ஞானத்தை போதிக்கின்றவர்கள்தான் அரசை நடத்துவதற்கு யோக்கியதையுடையவர்களென்போம். நமது தலைவர்கள், தங்கள் வார்த்தை ஜாலத்தை விட்டுவிட்டு, விஷயஞானத்தைப்பெறுவார்களேயாகில், ஜாதியும், மதமும், அரசியலைவிட்டு ஒழிவதோடு முக்கிய பிரச்சினைகளாகிய இந்துமுகமதிய ஒற்றுமையும், தீண்டாமையாகிய தோஷமும், வறுமையும் நீங்கி, இந்திய உலகம் சுகப்படும்.

தீண்டாமை.

இதை நீக்கவேண்டுமென்று தமிழ் மக்கள் மகாநாட்டில் பிரார்த்தித்தார்கள். பிரார்த்தனையால், உலகில் உண்டாயுள்ள கேடும், தீமையும் விலகுமேயாகில், என்றைக்கோ இவை அதாவது நமது சமூகக்குறைகள்யாவும் இப்பூமியைவிட்டுப்போயிருக்கும். சுயராஜியத்திற்கு நமது காந்தியார் கடவுளைத்தொழுதும், பட்டினிகிடந்தும், வருகின்றார். சுயராஜியமும், வந்தபாடில்லை, தீண்டாமையும் ஒழிந்தபாடில்லை. இத்தியாதி கோரிக்கைகள் நிறைவேறுதற்குரிய காரணங்களை, சரிவர விசாரித்தறியாமல், வானத்தை நோக்குவதால் யாது பிரயோஜனம்? நமது சமூகவாழ்க்கையில் பல கொடூரபழக்கங்கள் தோன்றியுள. அவைகள் உண்டானதற்கு காரணங்களும் உள. இந்தக்காரணங்களை விசாரியாது தெரிந்து கொள்ளவும் முயற்சிக்காது தெரிவித்தாலும் கவனித்துக்கேட்காது, "தீண்டாமையைநீக்குங்கள், குடியை விட்டுவிடுங்கள், ஒற்றுமையாயிருங்கள்" என்று மேடைகளிலிருந்து பிரார்த்தனை செய்வதால் என்ன பயன்? தீண்டாமையொன்றையெடுத்துக்கொள்வோம். தீண்டாமைக்குக்காரணம் நமது ஜாதி. ஜாதி ஒழிந்தால் அதில் தோன்றிய தீண்டாமையும் ஒழியும். "காரணம் நீங்கினால், காரியம் நீங்கும்" என்றார்கள் மெய்ஞானிகள். பார்ப்பனன், பறையன், இவ்விருவர் நமது சமூகத்தில் தொடர்புபட்டிருப்பவர்கள். இவர்களில் ஒருவர் இருக்க, மற்றொருவர் போவதெப்படி? பார்ப்பன ஜாதி முளைத்ததுமே பறைஜாதியும் முளைத்தது. உயர்வோடு, தாழ்வும் ஏற்பட்டது. மேடும் பள்ளமும் சமமாகப்போமாகில், மேடும்ஒழியும், பள்ளமும்ஒழியும், "பள்ளத்தை நிறப்பவேண்டுமானால் மேட்டை வெட்டித்தான் போடவேண்டும்" இதுதான் கண்கண்ட அனுபோகம். ஆதலின்பார்ப்பனர்ஒழியுங்காலையில்தான் பார்ப்பனர் அல்லாதார் என்பதும் ஒழியும். பார்ப்பனன் இருக்கும்வரை பறையனும் ஒழியான், அவனுக்கும் தாழ்ந்துள்ள மற்ற ஜாதியாரும் ஒழியார். இதனை உணராது மகா நாடுகளில் தீர்மானங்களைச் செய்து வெறுப்பேச்சாக முடிகின்றதேயொழிய காரியத்தில், ஒன்றும் ஆவதில்லை. மூடநம்பிக்கையே நமது வாழ்வு முழுதும், படர் கொடிபோல் படர்ந்துள்ளது. நமது குத்துயிரையும், மூடநம்பிக்கை வாட்டிவருகிறது. அரசியல் துறையிலும், சமூகவாழ்க்கையிலும், நாம் முன்னேற்றமடையாததற்கு காரணம் இதுவேயாகும். உலகில், எந்தநாடுகளில், நமதுதேசத்தில்வழங்கும்கொடிய பழக்கங்கள் முதியோராலும், பெரியோராலும் வாழ்த்தப்பட்டு வருகின்றன? மூட நம்பிக்கையைப்போக்க யார் முன்வருகிறார்கள்? ஆட்டுமந்தைகளைப்போல் ஒருவன் போனவழியே மற்றவர்களும் பற்றுகிறார்கள். காஷாயம்பூண்ட சன்னியாசி ஒருவர்யாராய் இருந்தாலும் சரி, அவர் சொல்வதெல்லாம் தெய்வவாக்காகக்கொள்ளுகிறார்கள். அரசியல் அடிமைத்தனம் ஒருபக்கமிருக்க, மனத்தின் அடிமைத்தனம் வளர்ந்து வருகின்றது "கொடிது கொடிது அடிமைத்தனம், அதிலும் கொடிது மனத்தின் அடிமை" என்றார் பெரியோர். நமது நாடு துக்கத்திலிருந்து மீளவேண்டுமானால் மக்கள் யாவரும் சுகப்படவேண்டுமானால் விஷயங்களை பயமின்றி தீரவிசாரித்தறியவேண்டும். பாட்டன் சொன்னாலும் சரி, குருமார் சொன்னாலும் மகாத்மாக்கள் சொன்னாலும் சரி. இவர்கள் சொன்னதை விசாரணைக்குட்படுத்தவேண்டும். புத்திக்கு பொருந்தினால் அங்கீகரிக்கலாம். இல்லாவிடில் தள்ளிவிடவேண்டும். இதுதான் ஞாயம். 'யூகமுடைத்தேல் சிறுவர்வுரையும் கொள்க,' இல்லையேல், "அயன் உரைத்திடினும், திரணமொப்ப ஏகவிடுக" என்றார் உண்மையில் பெரியோர்.

———

(5ம் பக்கத்தொடர்ச்சி)

யத்தில் வயதில் மாத்திரம் முதிர்ந்த சிறு பிள்ளைகளுக்கே ஒப்பாவார்கள். ஒரு மதம் எவ்வளவுக்கெவ்வளவு ஆபாசமாகவும் அற்புதங்கள் நிறைந்ததாகவும் இருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு, அது கொண்டாடப்படுகிறது. அந்த மதத்தில் ஈடுபட்டவர்கள் தங்களுடைய மூட நம்பிக்கைக்கு அளவேயில்லாத நிலைமையிலிருக்கிறார்கள். விஷயங்கள் எவ்வளவுக்கெவ்வளவு புரியாததாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு கடவுள் தன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகின்றன. அவைஎவ்வளவுக்கெவ்வளவு நம்பமுடியாமல்இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவைகளை நம்புவதில் மனிதன் தன்னைப்பாராட்டிக்கொள்ளுகிறான்.

(தொடரும்)

திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

O. S. No. 1240 of 1929.
E. P. R No. 262 of 1931.
E. A No. 174 of 1931.

பல்லடம் தாலூகா கஸ்பா பல்லடத்திலிருக்கும் நாட்டுக்கோட்டை குழு கு. ராம. ராமநாதன் செட்டியார் — வாதி.

பல்லடம் தாலுகா மாதப்பூரிலிருக்கும் சென்னிமலைக்கவுண்டன் மகன் பழனிசாமிக் கவுண்டன் —2-ம் பிரதிவாதி.

இதனால் ஷை 2ம் பிரதிவாதிக்குத் தெரிவிப்பதென்னவென்றால் ஷை நெம்பரில் உம் சொத்தை ஜப்தி செய்து ஏலம் போடவேணுமாய் வாதி மனுதாக்கல் செய்து ஏல இஸ்திஹாரில் கண்ட ஷரத்துக்களை நிரணியப்பதற்காகவும் ஷை நெம்பரில் வாதியும் மற்றவர்களைப்போல் நேரிலாவது வக்கீல் மூலியமாவது ஏலத்தில் கோரி எடுத்த தொகையை டிகரித்தொகைக்கு வஜா செய்யவேணுமாயும் மனுதாக்கல் செய்து 1931 வருஷம் ஜூலை மாதம் 7 தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை தேதியில் வக்கீல் மூலியமாவது நேரிலாவது ஆஜராகி உமக்குள்ள ஆக்ஷேபணையைத்தெரிவிக்கவேண்டியது. இல்லாதவரை ஒரு தலைபக்ஷமாக உத்திரவு செய்யப்படும்.

(Sd.) M K. Govindarajulu Chettiar, Counsel for Decree-Holder

Tirupur, 14—6—31.

பஞ்சமா பாதகங்கள்

எவை?
என் நிகழ்கின்றன?
அவற்றை நிறுத்தச் சமய, சமூக, அரசாங்கச் சட்டங்கள் ஆதரவளிக்கின்றனவா?

இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தீர்களா? இல்லையானால் இன்றே எழுதுங்கள். 52 பக்கங்கொண்ட புஸ்தகம் 0—2—6 அணா ஸ்டாம்புக்கு அனுப்பப்படும். விலாசம்:—

கோவை அ. அய்யாமுத்து
புஞ்சைப்புளியம்பட்டி,
(கோயமுத்தூர் ஜில்லா)

குடி அரசு ஏஜண்டுகள்,

சிதம்பரம்.
எம். கலியாணசுந்திர முதலியார்
கதர்ஸ்டோர் மேலவீதி
சாத்தான் குளம்.
பெரியசாமி நாடார்
ஷாப் வியாபாரம்
பட்டுக்கோட்டை
கே. சாரங்கபாணி
கொண்டையநாயடுபாளையம்
ஸ்ரீவில்லிப்புத்தூர்.
பி. ஞானதேசிகம்
மாயவரம். எம். கலியாணசுந்திர
முதலியார் கதர்ஸ்டோர்,

கீழ்கண்ட நகரங்களிலுள்ள ஹிகின்பாதம் புஸ்தகசாலைகளில் குடி அரசு பிரதிகள் கிடைக்கும்.

காட்பாடி.
திருநெல்வேலி.
அரக்கோணம்.
சென்ட்ரல் ஸ்டேஷன்.
மதுரை.
மாயவரம்.
நாகபட்டணம்,
சேலம்.
தஞ்சாவூர்.
பௌரிங்பெட்.
எக்மூர்.
ஜோலார்பேட்டை
திருச்சி.
போத்தனூர்.
ஈரோடு.

திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

O. S No 1498 of 30.
E. P. No. 335 of 31.
E. A. No. 720 of 31.

அ. தா. கஸ்பா அவனாசியிலிருக்கும் உடுமல்பேட்டை வெங்கிட்டரமணையர் குமாரர் வி. அனந்தகிருஷ்ணையர்—வாதி.

அ. தா. செம்பே நல்லூர் கிராமம் மஜரா தாசம்பாளையத்திலிருக்கும் ராமகவுண்டன் மகன் அப்பாஜி கவுண்டன்—பிரதிவாதி.

ஷை நெம்பரில் வாதிக்காக திருப்பூர் அட்வகேட் எ. ஸ்ரீதரமேனன் பி. ஏ., பி. எல்., அவர்கள் தெரிவிப்பதாவது:—

ஷை நெம்பரில் வாதி, பிரதிவாதியின் சொத்துக்களை ஏலத்துக்கு கொண்டு வரவும், அதுகளை ஏலத்தில் கோரிஎடுக்கவும், மேற்படி ஏலத்தொகையில் டிகிரித்தொகையை வஜா செய்து கொள்ளவும், விண்ணப்பங்கள் போட்டு அது கடைசியாக வாய்தா 30-6-31 தேதி போடப்பட்டிருக்கிறது ஷை தேதி ஷை பிரதிவாதி ஷை கோர்ட்டில் தனக்குள்ள ஆக்ஷேபணைகளை வந்து சொல்லிக்கொள்ளவேண்டியது. அப்படி செய்யாவிட்டால் கோர்ட்டாரவர்களால் ஷை பிரதிவாதியை ஒருதலைபக்ஷமாக தீர்மானம் செய்வார்கள் என்ற விவரம் இதன்மூலமாய் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

(Sd.) A. ஸ்ரீதரமேனன்,
அட்வகேட்.

திருப்பூர், 14-6-31.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வும், உயரிய விஷயங்களை விவாதிக்கும் தர்க்க மண்டபங்களாகவும், ஒழுக்கத்திற்கான நல்ல நடனசாலைகளாகவும், மக்களின் அவசியத்திற்கான வித்தியா நூல்களைக்கொண்ட இடங்களாகவும், மாற்றி அமைத்து, மக்களின் பிரதானமான இன்ப வாழ்க்கைக்கு தக்கது செய்யவேண்டுமென்பதே நமது விருப்பம்.''

இக்காலியில் போப்பைப்பற்றி "இம்" என்றால் தண்டனை. "ஏன்" என்றால் பெருத்த சங்கடம். மதவாதிகள் தங்களுக்கு மாத்திரமே விடுதலையை விரும்புகிறார்கள் போலும்! ரஷியாவில் "துன்பப்படுத்துதல்" என்ற வேஷக் கூச்சலானது மதத்தை அரசியலில் ஊட்டி, கல்வியில் மதமென்னும் விஷத்தைக் கலந்து நாட்டை பாழ்ப்படுத்துவதற்கேயாகும். ரஷ்யாவில், மதமும் அரசியலும் நடைமுறையில் ஒழுங்காக பிரிக்கப்பட்டிருக்கிறது. கீழ்கண்ட மதசம்பந்தமான சோவியத் சட்டங்களை கவனித்துப்பார்த்து மெய்ப்பொருள் காணும்படி விரும்புகிறோம். வாசகர்களே! மேலே கண்டவற்றை "நாஸ்திகம்" என்று வெறுத்துத்தள்ளி விடாமல், நீங்களும் அறிவிற் சிறந்தவர்களானதினால், பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுத்து உண்மைப் பொருளைக் கைகொண்டு இன்பமே எய்தும்படி சிந்திக்கிறோம்.

மதசம்மந்தமான சோவியத் சட்டங்கள்.

(23-1-1918 சட்டப்படி பொதுவாழ்விலிருந்தும், ராஜீயத் துறையிலிருந்தும், கல்விசம்மந்தத்திலிருந்தும் மதம் பிரிக்கப்பட்டிருக்கிறது) அதாவது:—

[1] சகல அரசியல் சம்பந்தத்திலிருந்தும், பொது வாழ்க்கையிலிருந்தும் மதம் நீக்கப்பட்டிருக்கிறது.

[2] இந்த ரிப்பப்ளிக் நாட்டு எல்லை முழுவதிலும், நீதி பரிபாலனம் செய்பவர்கள் எந்த விதமான சட்டங்களாலோ அல்லது கட்டுப்பாடுகளாலோ ஒரு மதத்தைத் தழுவியிருப்பதின் காரணமாக எந்தவிதமான தனிநன்மைகளோ, அல்லது தனி உரிமைகளோ உண்டாக்கவும் கூடாது.

[3] ஒவ்வொரு குடிமக்களும் எந்த மதத்தையும் பின் பற்றவும், மதமே இல்லாதிருக்கவும் உரிமையுண்டு. ஒரு மதத்தை அனுசரிப்பதற்காகவோ, அல்லது மதமே இல்லாதிருப்பதற்காகவோ விதிக்கப்படும் அபராதங்களை ஒழித்து விடுவது. குறிப்பு—எந்த விதமான சர்க்கார் பத்திரங்களிலும் மக்களுடைய மத சம்பந்தமான கோட்பாடுகளை குறிப்பதின்றும் தடுக்கப்பட்டிருக்கிறது.

[4] அரசியல் விவகாரங்களிலும், பொது மக்களின் ஸ்தாபனங்களிலும், எந்தக்காரணத்தை முன்னிட்டும், எந்த விதமான மதசடங்குகளாலோ அல்லது அனுஷ்டானங்களாலோ நடத்தக்கூடாது.

[5] சோவியத் சர்க்காரின் குடிமக்களுக்கு எவ்விதத்திலும் துன்பம் விளைவிக்காமலும், மக்களுடைய உரிமைகளைப் பாதிக்காமலும், மற்றும் பொதுவான சட்டத்தின்கீழ் ஊறுவிளைவிக்காமலும், மத சடங்குகளை அனுஷ்டிப்பதில் விடுதலை அளிக்கிறது. இதுபோன்ற நிலைமைகளில் பொதுமக்களின் சட்டத்தையும் சமாதானத்தையும் காப்பாற்றுவதற்கு, அந்தந்த ஸ்தல சட்ட நிருபணர்களுக்கு தக்க முறைகளைக் கையாள அனுமதியளித்திருக்கிறது.

[6] ஒருவர், தான் கொண்டுள்ள மத அபிப்பிராயத்திற்காக, தான் செய்யவேண்டிய தேசாசார கடமைகளினின்றும் தப்பித்துக்கொள்ளமுடியாது. இதிலிருந்தும் விடுதலைப் பெற, தனிப்பட்டவர்களின் பாத்தியதையாக, ஒரு கடமைக்காக, மற்றொன்றை செய்யும்படி நிச்சயப்படுத்த குடிமக்களின் சர்க்காருக்கு உரிமையுண்டு.

[7] மத சம்பந்தப்பட்ட சகலவிதமான சத்தியங்களும் ஒழிக்கப்பட்டன. அவசியமேற்பட்டால் உண்மையாக, மனமொப்ப வாக்குக்கூறுதலே போதுமானதாகும்.

[8] பிறப்பு, கல்யாணம் ரிஜிஸ்டிரேஷன் டிபார்ட்டுமெண்டுகளில் சாதாரண அரசியல் நிர்வாகஸ்தர்களே, பொது வாழ்வு சம்மந்தத்தை நடத்துவேண்டும்.

[9] கல்வி மதத்தினின்றும் தனிப்படுத்தப்பட்டிருக்கிறது. பரிசுத்த புஸ்தகம் எனக்கருதப்பட்டுவரும் பைபுள் முதலிய மத ஆதார வேதசாஸ்திர புஸ்தகங்களையும், புராணக்கதைகளையும் பொதுப்பள்ளிக்கூடங்களிலிருந்தும், சகல அரசியல் கல்வி ஸ்தாபனங்களிலிருந்தும், பொது விஷயங்களைக்கற்றுக் கொடுக்கும் தனிப்பட்ட கல்விச்சாலைகளிலிருந்தும், நீக்கி வைக்கவேண்டும். ஆனால் தனிப்பட்ட முறையில் யாரும் மதத்தை போதிக்கலாம்; கற்றுக்கொள்ளவும் செய்யலாம்.

[10] எல்லாக் கோவில்களுக்கும், மத ஸ்தாபனங்களுக்கும் பொதுவான சட்டதிட்டங்களே கையாளப்படவேண்டும். எந்த விதமான பிரத்தியேக உரிமையோ அல்லது பண ஒத்தாசையோ சர்க்கார் செய்யாது.

[11] மதசடங்குகளின் பேராலும், ஆலயங்களின் பேராலும் மாமூல் படுத்தி வரிவசூல் செய்யக்கூடாது. புரோகிதர்களும், குருக்களும், மதஸ்தாபனங்களும், மத வாதிகளின் மீது நிர்ப்பந்தப்படுத்தியோ, அபராதம்விதித்தோ, தண்டித்தோவருத்தக்கூடாது.

M. S. சித்தர்பார்மஸி

இதில் சகல மருந்துகளும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

எலி, நாய் முதலிய விஷப்பூச்சிகடிகளினாலுண்டாகும் புண், வீக்கம், தடிப்பு, ஊரல், சுரம் குணமடையும். விஷமை 3 நாளைக்கு ரூ. 2.

Dr. P. M.
சங்கரலிங்கம் பிள்ளை,
கோவில்பட்டி, S. I. R.

வெளிவந்து விட்டது!　　　வாங்கத்தவறாதீர்கள்!!

முந்துங்கள்!!!

நாளது ஆகஸ்டுமீ௳த்திற்குள் நடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன் வாங்குங்கள்!

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும், இவைகளின் மெம்பர்களுக்கும், ஆங்கிலமறியாத பொது ஜனங்களுக்கும் வெகு முக்கியமான

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம் வரு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

மிகவும் துல்லியமானதும் எளிதில் புரியும்படியான அழகிய தமிழில்

M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

(வக்கீல், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவள்ளூர்) அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்ப காப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0.　　　வி. பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

அகத்தியர் ஆராய்ச்சி.

இது சென்னை இராஜதானி கலாசாலை தமிழ் ஆசிரியரும் கலாவல்லவருமான பண்டிதர் உயர்திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் அனேக நூல்களை ஆராய்ச்சி செய்து பல ஆதாரங்களைக்கொண்டு எழுதப்பட்டதாகும்.

விலை அணா 0—2—0 தான்.　　　வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

பகுத்தறிவே விடுதலை.

அல்லது ஜீவாத்மா இல்லை, என்னும், இப்புத்தகம் சிறந்த ஆராய்ச்சி நூலாகும். முன், பின், ஜென்மம், முடப்பழக்கவழக்கங்கள் முதலியன ஆராயப்பட்டிருக்கின்றன. சடங்குகள், அதன் செலவு, கடவுள் ஆராதனை விக்ரக வணக்கம் முதலியன கண்டிக்கப்பட்டிருப்பதோடு பல ஆதாரங்களினாலும், மேற்கோள்களாலும் விளக்கப்பட்டிருக்கின்றது. சித்திரப்படங்களுடன் 100 பக்கங்கள் கொண்டது.

விலை அணா 6,　7 அணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

மிகவும் குறைந்த விலை.　　　ஒரே மாதம் மட்டும்.

பாலெஸ் ரோல்ட் கோல்ட் ரிஸ்ட் வாச் நெ. 501.



22 காரட் ரோல்ட் கோல்ட் கேஸ்டன் டையல் ரிஸ்லெட் கெடியாரம் 5 வருஷ உத்தரவாதம். ஆண், பெண்களணிய அலங்கார பூஷணமாகும். இத்துடன் (1) கூலிங் கண்ணாடி, (2) 14 காரட் நிப்புடைய பௌண்டன் பேனா, (3) ரிஸ்ட் ஸ்பிரிங் செயின் இனாமளிக்கப்படும்,　　　விலை ரூபாய் 6—0—0.

பூராத்தொகை முன்பணம் அனுப்புவோருக்கு தபால் சார்ஜ் இனாம்.

விலாசம்:—பிராட் பீல்ட் வாட்சு கம்பெனி,　பார்க்டவுன், மதராஸ்.

(3ம பக்கத் தொடர்ச்சி)

யில்லாத சாதுக்களென்பது அவர்களுக்குத்தெரியும். அதிகாரமென்ற பல தட்டுகளை வைத்துக்கொண்டு எல்லாவற்றையும் அளந்து பார்ப்பது தான் அவர்கள்வேலை. ஆங்கிலேயர்கள் திருச்சினாப்பள்ளிக் கோட்டையில் அடைபட்டிருந்த காலத்தில் சோற்றை அவர்களுக்குக்கொடுத்துக் கஞ்சியைக்குடித்தவர்களும் நீங்கள்தான் என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். இந்தியாவில் அன்று முதல் இன்றுவரையிலும் அவர்களைப் போஷிப்பதும்அவர்கள்குழந்தைகளை வளர்த்துவருவதும் நீங்கள்தான் என்பதைஅவர்களுக்கு ஞாபகப்படுத்த உங்களுக்குத் திறமையில்லை. இந்த ராஜாக்களின் அரண்மனைத்தோட்டங்களில்கூட நீங்கள் சென்றால் தீட்டுப் பட்டுவிடுமென்று குருவும், புரோகிதனும் சொல்லுவதைக் கேட்டுக்கொண்டிருக்கும் இந்த ராஜாக்கள் உங்கள் பேரில் கவனத்தைச் செலுத்துவதென்பது சாமாஞ்சியமா? நீங்கள் தெய்வத்தை நம்பி எல்லா பாரத்தையும் அதனிடமே ஒப்படைத்துவிட்டு தெய்வ உதவிக்குக் காத்திருக்கலாமென்றால் இதுகால பரியந்தம் நீங்கள் பட்ட துன்பங்களையும், துன்பத்திற்குக் காரணமாக விருந்தவைகளையும் அங்கீகரிக்கும் தெய்வங்களும் உங்களைக் கண்டால் செத்துப்போகும் தெய்வங்களுமே நமது நாட்டிலிருக்கின்றன. ஆனதால் அதிலும் உங்களுக்கு நன்மையில்லை. இந்தக் கோபுரம் போன்றகட்சிகளுக்குப்பின்னே உங்கள் சொத்தையும், பூமிகளையும், வாழ்வையும் யார் கவனிக்கப்போகிறார்கள்? இந்த முப்பது கோடி ஜனங்களுக்குள் ஆறுகோடி ஜனங்களான நீங்களும் மனிதர்களென்ற விஷயத்தை அதிகாரிகள், பணக்காரன், தெய்வம், வேதம், புரோகிதன், குரு சமயவாதிமுதல்இத்தனைக் கோட்டைச் சுவரையும் மீறிப்பார்க்கத்தகுந்த அத்தனை கூரியக் காட்சிக் கூர்மை யுடையவர்கள் சிலரிருந்தாலும் அவை யுபயோகப்படுவதில்லை.

என்றாலும் இதற்கொரு வழியிருக்கிறது. அந்த வழியில் நீங்களும் உங்கள் தலைவர்களும் முழுசக்தியோடு பிரவேசித்தீர்களானால் உங்கள் பாத்தியதை இன்றில்லாவிட்டாலும், நாளைக் கிடைப்பது நிச்சயம். அந்த வழி நியாயமானதும் நம்மவர்கள் நடந்து காட்டினதுமாகும்.

நம்மவருக்குகம்புதல் கஷ்டமாகத் தோன்றினாலும் எதார்த்தமாகவே பூமியின் ஒருபிரதேசத்தில் மகத்தான பிரிட்டிஷ் ஜாதி என்று நியாயப்பெயர் பூண்ட ஜாதியொன்று வாசம் செய்கிறதென்பதை அறியும்படி எனது தேசத்தாரை வேண்டுகிறேன். அந்தப்பெரிய ஆங்கிலேயர் எல்லாவிதங்களிலும் உண்மையான மனிதர்என்று நான் சத்தியமாகச் சொல்லுகிறேன் என்று மகாகவி ரவீந்தரநாத்தாகூர் சொன்னதையே உங்களுக்குயானும் சொல்லுகிறேன். அந்தப்பெரிய ஆங்கிலேயன் மன்றடைக்குள் உங்கள் நியாயங்களை செலுத்திவிட்டீர்களானால் உங்களுடைய முறைகேடு முடிந்தது. முதல்படி அடைந்துவிட்டால் முக்தியும் கைகூடும். ஆங்கிலேயர்கள் அவர்கள் நாட்டிற்குப்போகையில் அவர்களுக்குப் பெரியவிருந்துகள் நடக்கிறது. இந்தியாவின் ஞாபகமிருக்கிறதென்று சொல்லிப்போகிறார்கள். நீங்களும் அவர்கள் கப்பலேறிப்போகும் கடைசி வரையிலும் கூடவேயிருக்கிறீர்கள். எங்கள் பாத்தியங்களுக்கும் வழிதேடுங்கள் என்று சொல்லுவதில் காசா பணமா செலவு. இங்கிலாண்டிபோன பல ஆங்கிலேயர்கள ஜனவரிபண்டிகையில் பழைய பட்லர்களுக்குக் கடிதமெழுதுகிறார்கள். அநேகவேலைக்காரர்களின் விலாசங்கள் உங்களுக்குத்தெரியும். அவர்களுக்கெல்லாம் உங்கள் குறைகளை எழுதிவிட்டால் நஷ்டம் இரண்டணாவே. அது இங்கிலாண்டில் உங்களுக்குப் பரிந்து பேசும் ஆங்கிலேயர்களுக்கு எவ்வளவு ஆதாரமாயிருக்கும். நரிசத்தம் கடல்முட்டட்டுமே. எல்லாருக்கும் பத்திரிகைதானே ஆயுதமாயிருக்கிறது. மற்றவர்கள பத்திரிகையால் அடையும்பலனை சிறிது கவனத்தால் நீங்கள் அடைந்துவிடலாம். அதற்குவழி உங்களுக்குத் திறக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் நுழைய புத்தி என்னும் கண்தானே வேண்டும்.

ஆதலால் மற்றவர்கள் உங்களைக் குற்றம் சொல்லஏதுவில்லை. மற்றவர்களும் அவ்வழியிலேயேநடந்துவந்திருக்கிறார்கள். 1889ம்வருடம்பம்பாயில் கூடின காங்கிரஸ் மகாசபையில் இந்திய அரசியல் முறையில் நாம் விரும்பிய சீர்திருத்தங்களைப் பிரிட்டிஷாரை வழங்கச்செய்யவேண்டி ஆங்கில நண்பர்களுக்குத் தங்கள் நியாயமான கோரிக்கைகளை எடுத்துக்கூறி இங்கிலாந்தில் பிரசாரம் செய்வதற்காக சிலதலைவர்களை நியமித்தார்கள். இங்கிலாந்தில் பிரசாரம் செய்யவேண்டுமென்று பல இந்திய ராஜீயவாதிகளும் சொல்லியிருக்கிறார்கள். அவ்விதம் நடந்தும் வந்திருக்கிறது. இங்கிலாந்தில் ஒரு காங்கிரஸ் கமிட்டியும் வேலை செய்தது. சர் வில்லியம் வெட்டர்பென், வெப்துரை, சர்ஹென்ரிகாட்டன், அன்னிபெசன்ட் அம்மாள் முதலிய ஆங்கிலேயர்கள் இந்தியர்களுக்குப்பரிந்து பேசினதுமல்லாமல் காங்கிரஸில் தலைமையும் வகித்தார்கள். ஹைகோர்ட்டு ஜட்ஜாக விருந்து காலம் சென்ற சுப்பிரமணியய்யர் அவர்கள் இந்தியாவில் பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரின் அநீதியை எழுதி அன்னிபெசண்டு அம்மாளிடம் அமெரிக்காவிற்கு அனுப்பினதையும் நீங்களறிவீர்கள். மகாத்மா காந்தியவர்கள் தன் கோரிக்கைகளை வைசிராயிக்கு எழுதின முதற்கடிதத்தையும் ஒரு ஆங்கிலேயரிடமே கொடுத்தனுப்பினார். ஆனதால் நீங்கள் உங்கள் குறைகளை ஆங்கிலேயரிடம் தெரியப்படுத்திக்கொள்ளுவதில் மற்றவர்கள் குற்றம் காண நியாயமுமில்லை. குற்றம் கண்டாலும் உண்மைக்குப்பரிந்து பேசாதவர்கள் குற்றம் காண்பதில் கவலையும் வேண்டாம்.

இப்பொழுது உங்களிடம் இந்துக்களால் காணப்படும் தீட்டு, நீங்கள் மதம் மாற்றம் செய்த உடன் எங்கே போகிறது? எப்படிப்போகிறது? என்பதை ஆலோசித்துப்பார்க்கும் குணமோ, புத்தியோ, நியாயமோ, இல்லாத சமயஜாதி இந்துக்களைப்போலவே படித்த இந்துக்களுமிருக்கிறார்கள். மற்ற நாடுகளில் ஜனக்கட்டிலும் ராஜியத்திலும் ஏதேனும் குற்றம் குறை வெளிப்பட்டால் அதைப்பொதுஜனங்கள் உண்மை விளக்கால் சோதித்துத்திருத்த வழியுண்டு. அந்த உண்மை மாயமந்திர இருளில் மறைந்து கிடப்பதில்லை. எல்லாரும் காணும்படி தானும் வளர்ந்து பிறரும் வளரும்படி செய்கிறது. அந்நாட்டைப்பார்த்து உங்கள் குறைதையைச் சொல்லுங்கள்.

இங்கேயோ ஒருவர் சமயமென்கிறார். மற்றொருவர் சாஸ்திரமென்கிறார். இன்னொருவர் சிருஷ்டாசாரமென்கிறார். பின்னொருவர் திருஞானசம்பந்தர் திரு அமுதுண்ட திருவாக்கென்கிறார். வேறொருவர் வேதவியாசர் வேத விதி என்கிறார். இப்படியெல்லாம் சொன்னாலும் கோவில், தீர்த்த மகிமை, புரோகிதம், மடம், தீர்த்தவாசி, தெய்வபக்தி, பிதிர்கர்மம், புண்ணியலோகவழி, பின்னைப்பேர் முதலியவைகளே நிறைந்து இருக்கும் புண்ணியஸ்தலமான இராமேஸ்வரம் சாராயக்கடை மாதம் 1500ரூ. குத்தகையாம்! அந்த ஊரில் தொழிற்சாலையில்லை. நீங்களுமில்லை. புரோகிதமும், புண்ணியமும்தானிருக்கிறது. அத்தனை சாராயத்தையும் குடிப்பவர்கள் யார்? அது எப்படியோ போகட்டும் பிரிட்டிஷாருடைய உள் குணத்தில் உங்கள் சுதந்திரங்கள் அடங்கிக்கிடக்கின்றன.

இன்ஜெக்ஷனிலும் இனிது எது? அதுவே
ஸ்ரீமத் R. K. பழனிஸ்வாமிகள் என்னும்
சித்தயோகிஸ்வரரால் தயாரிக்கப்பெற்ற,

இந்தியன் சக்தி மூக்கு ஆயில்.

சுமார் 1008 வியாதிகளுக்குமேல் அநேக கொடிய அபாய விபத்துகளுக்கும், விஷக்கடி, வெட்டுக்காயம் மற்பல ரணவியாதிகளுக்கும் பல அபயிர்த்து விற்கும், மேல் பிரயோகமாகத்தடவ, சகல வியாதிகளும் உடனே மாறும். கேட்டலக் இனும்.

1 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை	ரூ. 2—0—0
1/4 அவுன்ஸ்பாட்டில் 1-க்கு விலை	ரூ. 0—8—0

ஒவ்வொரிடங்களிலும் சோல் ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்களுக்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.
வி. பி. சார்ஜு பிரத்தியேகம்.

கோ. கோவிந்தராஜுலு செட்டியார்,
ஷாப் ஓ மளிகை, துறையூர், (திருச்சி ஜில்லா.)

இரத்தமே உயிர்.
திருவாரூர், ஷண்முகானந்த வைத்தியசாலையின்
இணையற்ற இரத்தவிர்த்தி மருந்து.

சுவர்ண காந்தம்.

அயம், காந்தம், அப்ரகம், தங்கம், மண்டூரம் 5-ம் சேர்ந்தது.

பாண்டு, சோகை, காமாலை, பித்தப்பாண்டு, வீஷப்பாண்டு, சூதகபாண்டு, நீர்ப்பாண்டு, பித்தவெட்டை, ஜூரக்கட்டி, சூதகக்கட்டி, குன்மம், பித்தவாயு, மதுமேகம், க்ஷயம், காசம், கைவீக்கம, கால்வீக்கம், வயறுவீக்கம், கிறாணி, அதிசாரம், உஷ்ணவாயு, சூதகவாயு, முதலிய அசாத்திய நோய்களும் ஆச்சரியப்படும்படி குணமாகி நல்லஇரத்தவிர்த்தியுண்டாகும். உத்ரவாதம்.

1-நே. 20 நாள் மருந்து விலை ரூ. 10—8—0 வி. பி. வேறு.

டாக்டர் கண்ணுசாமி,
சென்னை மாகாண சித்த வைத்திய பிரச்சாரம் திருவாரூர்.

N. B:—குணமில்லாவிடில் பணம் வாபீஸ்,

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி. ...	0—8—0
மனு நீதி மருமம் ...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு. ...	0—2—0
சோதிடப் புரட்டு. ...	0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு) ...	0—2—0
சுயமரியாதைப் பாடல் ...	0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம். ...	0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை ...	0—4—0
ஞானசூரியன் ...	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம்	0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம் ...	0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு)	0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி ...	0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? ...	0—2—0
*குறள் ...	0—8—0
* இயற்கைமதம் ...	0—8—0
* சிதம்பர ரகசியம் ...	0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.	0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது] ...	0—6—0
* ஆராய்ச்சி அணிகலம்	0--12--0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட் ...	2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி, கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி, ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,

ஈரோடு

"குடி அரசு" ஏஜண்டுகள்.

R. ராமலிங்கம், வியாபாரம்
கோட்டார்.

*ராஜரத்னம், தமிழன் ஆபீஸ்,
ஆண்டர்சன் பேட்டை.

*கால்மாபாலிட்டன் கிளப்
விருதுநகர்.

*A. V. பாலசுப்ரமணியம்
23, எடய தெரு,
திருவாரூர்.

பி. சாமுவேல் பிள்ளை,
கிரேட்காட்டன் ரோடு,
தூத்துக்குடி.

*எஸ். மாசிலாமணி பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்,
பாலக்கரை திருச்சி.

S. குற்றாலலிங்கம் பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்
மீனாச்சிபுரம் திருநெல்வேலி.

S. P. கிருஷ்ணசாமி,
நாகப்பட்டணம்.

P. பழனியாண்டி செட்டியார்,
நாகூர்.

T. சேத்துநாயடு
சித்திரக்காரத் தெரு,
மதுரை.

K. கணபதி, சாக்கோட்டை
கும்பகோணம்.

மானேஜர், 'புதுவைமுரசு'
புதுச்சேரி.

வி. கண்ணன்,
சீமை எரு டிபோ,
காஞ்சிவரம்.

A. S. முருகேசம், பஜார்
திண்டுக்கல்.

*T. சுப்ரமணியபிள்ளை,
17 பாரிஸ் வெங்கிடாஜல
அய்யர் தெரு
சென்னை.

A. R. M. சுந்தர பாண்டியன்
கடைவீதி,
அருப்புக்கோட்டை.

G. V. ராமசாமி
பெரிய கடைவீதி,
கரூர்.

*B. தங்கசாமி, டைலர்
பெரிய கடைவீதி,
கோயமுத்தூர்.

ஹாஜிமுகமது ஷேக்உசேன்,
57. சுண்ணாம்புக்காரத்தெரு,
காரைக்கால்.

*M. ரத்னம்,
கிரோசினாயில் டிபோ,
நெல்லிக்குப்பம்.

K. N. தங்கவேலு,
காரியதரிசி
சமூகசீர்திருத்த சங்கம்
கல்லிடைக்குறிச்சி.

C. S. ஜோசப்
159 கேவ்ளி ரோடு,
பெங்களூர் Cant.

S. ராமசாமி
செங்குந்தர் தெரு,
தாரைபுரம்.

முத்துசாமி
நாடார் ஹைஸ்கூல்,
பொறையார்.

P. S. ஜீவரத்னம் பிள்ளை,
2. மலாய்வீதி, ஸ்லேவ்ஐலண்டு,
கொழும்பு.

A. S. பரமசிவம்
34. காரிக் ஹவுஸ்
டிபன்சிகா ரோடு
ஹேவ்லக் டவுன்
கொழும்பு.

எட்வர்ட்பால்
திருமலராபுரம்.

செல்வராய கவுண்டர்
திருப்பத்தூர்.

S. அப்பாதுரை
மண்டி, ராசிபுரம்.

M. N. M. பாவலர்
நியூஸ் ஏஜண்ட்,
திருப்பாபுலியூர்.

* இந்த புள்ளியுள்ள வியாபாரிகளிடம் குடி அரசு பதிப்பு புஸ்தகங்களும் கிடைக்கும்.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.

G. R. கணேசர் & Co.,
10|1 Cecil St.

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.

India Novel depot
73, Serangoon Road.

கோலாலம்பூர்.

Visvanath Book depot,
9, Brickfield Rd.

R. S. Naidu,
86, Ampang St.

O. M. Ali Saiboo & Co,
27, Java Street.

The Selanger Stamp Co,
Market Street.

S. S. Abdulkadir,
South Indian Boookstore,
122, Pitty street, penang

South Indian Trading Co,
Ipoh. Perok F. M. S.

Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S.

The Central stores
61, Jalan Ibrahim,
Johore Bhara.

C. Kandiah,
85, Sultan street, K[illegible]

S. G. Sami Agency,
8, Jalan [illegible]
Sungei [illegible]
K[illegible]

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0

வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0

வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.

விலாசம்:—

மானேஜர், "குமரன்" காரைக்குடி

ராமநாதபுரம் ஜில்லா

—

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது

உள்நாடு சந்தா $. 3—0—0

இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—

மானேஜர், "முன்னேற்றம்"

152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0

வெளிநாடு " 4—0—0

ஆசிரியர்: S. குருசாமி B.A.

மானேஜர், "புதுவைமுரசு"

4 லல்லிதொலாந்தால் வீதி

புதுச்சேரி.

"நாடார் குலமித்திரன்"

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0

வெளிநாடு " 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,

"நாடார்குல மித்திரன்"

அருப்புக்கோட்டை

ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0

வெளிநாடு " 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—

மானேஜர் "தமிழன்"

ஆண்டர்சன் பேட்டை P.O.

கோலார் தங்கவயல் (S. I.)

'சண்டமாருதம்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0

வளிநாடு " 4—0—0

ஆசிரியர்: அ. பொன்னம்பலம்

மானேஜர், "சண்டமாருதம்"

கோட்டையூர்,

ராமனாதபுரம் ஜில்லா

—

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

—

"முன்னேற்றம்" ஆபீஸ்,

152, சிலிகி ரோட்,

சிங்கப்பூர்.

—

அடக்க முடியாத தாது புஷ்டியினால் யானை பலத்தை அடையலாம்

மதயானைக்குளிகை

தண்ணீர் போல் உடைந்தோடும இந்திரியத்தை இறுக்கிக்கட்டி மணியாக்கி நாடி நரம்புகளை முறுக்கேற்றி மதங்கொண்டயானையைப்போல் இல்லற இன்பத்தில் நீண்டநேரம் முறைத்து போராடும் வல்லபம் இதற்கே உண்டு ஒவ்வொருவரும் பரீக்ஷித்து ஆனந்தமடையக்கூடியது.
100 குளிகை ரூ. 12. 50 குளிகை ரூ. 7. (மாதிரிக்கு 30 குளிகை ரூ. 4-8-0)

விலாசம்:— கே. எஸ். பதி, வைத்தியசாலை, பழனி S I Ry.

ஏழு தலைமுறைகளாய் கையாண்டனுபவம் வாய்ந்ததும், வைத்திய மகாநாடுகளிலும், கண்காட்சிகளிலும் மதிப்பு பெற்றதுமான சிறந்த ஒளஷதங்கள் எங்களுடையது. எவ்வகை வியாதிக்கும் ஏற்றது. எல்லோராலும் புகழ்பெற்றது. உண்மையும் உத்திரவாதமுமான மருந்து.

நீங்கள் என்றுமழியாத இளப்பருவத்தை அடையவேண்டுமானால் பழனி சி. எம். சாமி

மகா வீரிய தங்கபஸ்பம் சாப்பிடுங்கள்

தாதுபுஷ்டியில் மன்மதனுக்கொப்பாவீர்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்
வயோதிக தசையாலும், வாலிபபருவதுர்க் கிருத்தியங்களாலும் நீங்கள் இழந்த பலம், தாதுநஷ்டம், போகசக்திக்குறைவு, மனஉற்சாகம் இவைகளை திரும்பக்கொடுத்து, இல்லற ஒற்றுமை, வீரிய விர்த்தி முதலியவைகளைக் கொடுப்பதில் இணையற்றது. 24 நாள் பஸ்பம் விலை ரூ 10

காமரூபிலேகியம்

தாதுபுஷ்டிக்கு மிக உயர்ந்தது
இதில் தங்கபஸ்பம் வைத்துச் சாப்பிடலாம் சேர் ரூ 15

குருதாளக பஸ்பம்—இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. 24 நாள் புட்டி 1க்கு ரூ, 8.

குருநாக பஸ்பம்—மூலத்திற்கு

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும், கீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை மலபந்தம் முதலிய ஒன்பதும் அதிசீக்கிரத்தில் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஒளஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனேநிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும். மிக்க அநுபவமானது. புட்டி 1க்கு ரூ. 2

...ந்திய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன் பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

...திய ஆசிரியர் C மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

...ண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிட்டப்பட்டுஸ்ரீமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.